No. TNTAM/2010/34642 Postal Regn No. TN/CH/C/444/11-13






# INNOVATIVE SERVICES

"Guidance for Manpower Excellence"

**A Division of V.S. Career & HR Academy Pvt. Ltd.**

**Corporate Solutions**

- Corporate Training
- Recruitment Solutions
- Event Management
- Outsourcing

**Institutional Solutions**

- Softskills
- Aptitude
- Technical Skills
- Smart Campus – ERP Solutions

#45, Ramasamy Gounder Street, K. K. Pudur, Saibaba Colony
Coimbatore - 641 038. Ph : 4383607. Email : hr_cbe@innovservices.com

#T-46A, 7th Avenue, Besant Nagar, Chennai - 600 090. Ph : 044 45012003

**Madurai | Trichy | Salem | Nellai | Pondy**

www.innovservices.com




# காதல் ராட்டினம்

சகோதரிகள் இருவர். இருவரையும் சந்தனப் பெட்டகமாய் வளர்க்கும் தாய். மூத்தவள் காதல் இலக்கிய ரசனையோடு தொடங்கிட, இளையவள் காதல் எதிர்பாராத விதமாய் உருவாகிறது. காதலில் இதயம் சிக்கிக் கொண்டால் குறைகளை எல்லாம் நிறைகளாகப் பார்க்கச் சொல்லும். அதுவும் இந்தக் கால இளம் தலைமுறையினருக்கு இந்த உணர்வு கொஞ்சம் கூடுதல். அதுபோல் தான் 'காதல் ராட்டினத்தில்' தலை சுற்றி கிறுகிறுப்புடன் கிறங்கிய பிறகு இந்நாவல் முடிவில் சுகத்தை தரும். இதயநிலாவிற்கு இது என் முதல் நாவல். வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்.



காஞ்சனா ஜெயதிலகர்

Please share your novels and Comments @ http://tamilnovel-link.ucoz.com/

# காதல் ராட்டினம்



காஞ்சனா ஜெயதிலகர்

அம்மலைப்பாதையில் பஸ் மேலேற ஏற, சாவித்திரியின் உற்சாகமும் கூடியது. தேனி, கம்பம் என்னும் பசுமையில் தோய்ந்த ஊர்களைத் தாண்டி சேதுமலைப் பகுதியை நெருங்கியதுமே அவளுள் அந்த உற்சாகம் திறந்திருந்தது.

இது அவள் பிறந்து வளர்ந்த ஊர். சரியாய் சொல்ல வேண்டுமெனில் சிற்றூர்.

கடையேழு வள்ளல்களில் ஒருவர் ஆட்சி செய்ததாய் சொல்லப்பட்ட மலைநாடு. பெரியதும் சின்னதுமான தோப்புகளும், ஆரம்பப் பள்ளி, இல்லாமல் இருக்கக் கூடாதென்பதற்காய் ஒரு கோயில்-இருப்பவர்களுக்கு வாங்க கொள்ள இரு கடைகள், சற்று வசதியான வீடுகள் என்பதை மீறி மிக அழகான மலை ஊர் அது. கடல் மட்டத்திலிருந்து மூவாயிரம் அடி உயரத்திலிருந்ததால் ஓடி, சாடினால் தவிர வியர்க்காது. இளநீராய் இனிக்கும் நீரும், குளிர்காற்றுமே ஊறி வளர்ந்ததால் அங்குள்ளவர்களுக்கு வளப்பான வாளிப்பு.

பழ மரங்கள், ஓடை, தூய காற்று, நீர் என்று அங்கு அவள் வளர்ந்த நாட்கள் அற்புதமானவை. ஆனால்




அத்தனைக்கு ஈடாக சாவித்ரியை ஒரு உணர்வு ஆட்டி வைத்திருந்தது. அது பொறாமை!

அந்த பொறாமைக்குக் காரணம் வித்யாவதி!

இவர்களிருந்த சிற்றூருக்கு மட்டுமல்ல, சுற்று வட்டாரத்திலேயே பேரழகி அவள். சாவித்ரிக்கு இரண்டு வயது இளையவள் என்றாலும் இருமடங்கான அழகி.

வடித்த சந்தன சிலை போன்றவளின் நிறமும், திருத்தமும், ஒயிலும் பார்ப்பவர்களை சுருட்டிக் கொள்ளும்.

அதில் ஊரின் மற்ற பெண்கள் அடிப்பட்டு போனார்கள். சேதுமலைக்கிருந்த ஒரே டெய்லர் கூட வித்யாவதிக்குத் தான் உடனே, அளவு மாறாமல் தைத்துத் தருவார்.

'அவளுக்கு அரைச்சுப் பூசினாப்பல தச்சிட்டு, எங்களுக்கு லொட லொடன்னு ரவிக்கையைத் தந்தா என்ன அர்த்தம் டெய்லரு?'

'வித்யா பொண்ணுக்குத்தான் ரவிக்கைக்கேத்த உடம்பு. சோளக் கொல்லப் பொம்மைகளுக்குச் சட்டைதான் மாட்ட முடியும்?' இவர்களது ஆங்காரக் கேள்வியை அலட்சியப் படுத்துவார் தையல்காரர்.

பூக்காரி கூட நெருங்கத் தொடுத்த சரத்தை வித்யாவதிக்குத் தான் கொண்டு போய் தருவாள்.

பள்ளிக்குப் போகும் பஸ்ஸில் அவளுக்குத் தனி இடம். அங்கு அரங்கேறும் நாடகம், நாட்டியங்களில் அந்த வசீகரிக்கு பிரதான வேடங்கள்.

மொத்தத்தில் வாழ்வே வித்யாவதியை விசேஷமாய் கொண்டாடியதில் உள்ளூரில் பல பெண்களுக்கு உள்ளூர கசப்புதான்!

ஊரின் பெரும்பகுதியை பல வருடங்களுக்கு முன்பே அரசாங்கம் ஒரு சொற்ப விலை தந்து எடுத்துக் கொண்டாலும், பெரிய சேதுபதியின் குடும்பம் சொச்ச இடத்தை வைத்துக் கொண்டு கௌரவமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். அவரது பேரனுக்கு அக்குடும்பம் வித்யாவதியைப் பெண் கேட்டு, முடித்தபோது ஊரே அப்பெண்ணின் அதிர்ஷ்டத்தையும் பார்த்து பெருமையாய் பொறுமியது.

'தோட்ட சூபர்வைஸர் மகளாய் இருந்தப்பவே அவ இந்த ஊருக்கு ராணி... இனி நிஜமாலுமே மகராணிதான் போ....' என்று வித்யாவதிக்கு பதினெட்டு வயசு பூர்த்தியாவதற்காய் பரிசும் போட்டுவிட்டு எட்டு மாதங்கள் காத்திருந்தார்கள். அந்த இடைப்பட்ட காலத்தில்தான் ஒரு சாதாரண வரனுக்கு சாவித்ரி வாழ்க்கைப்பட்டது. குஞ்சலமுமாட தங்கச்சிலை போல வந்திருந்த வித்யாவதியின் மேல்தான் அத்தனை பேரின் கண்களும்.

சாவித்ரியை கட்டிக் கொடுத்ததும் இனியும் இச்சிறு ஊரில் இருப்பது வீண் என்ற முடிவிற்கு வந்த அவளது பெற்றோர், அவளது அண்ணனோடு சேலம் போய்விட, பிறகு இந்த அழகான ஊருக்கு வர சந்தர்ப்பமில்லை.

ஆனாலும் அவ்வப்போது வித்யாவதி பற்றி விசாரித்து அறிந்ததில், பிறகு சிநேகிதியின் வாழ்வுதான் ரொம்பப் பொறாமைப்படுமளவில் தொடரவில்லை என்பது சாவித்ரிக்குப் புரிந்தது.

வித்யாவதியின் புருஷனுக்கு உடன் பிறந்தது. ஐந்தும் பெண்கள். கௌரவம் கெடக் கூடாதென ஆடம்பரமாய் நடத்திய ஐந்து திருமணங்களோடு, தொடர்ந்த பண்டிகை, வளைகாப்பு, பிள்ளைபேரில் குடும்பம் தடுமாறியது. பண்ணை ஆட்கள் கூலியை உயர்த்தி கேட்க, அதோடு பொய்த்த மழை அல்லது பெருமழை, பூச்சி தாக்கு என்று மேலும் விழுந்த அடிகளை தாங்க முடியாமல் விழுந்தே விட்டது. ஆனால் கஜானா காலி என்பதை ஊரார் உணர்ந்தது பெரியவர்கள் இறந்த பிறகுதான். அதுவரை பெருந்தீனி, சுகவாழ்வு என்றிருந்த வித்யாவதியின் கணவனுக்கு புது தரித்திர நிலையை ஏற்க முடியவில்லை. அந்த அதிர்ச்சியில் அவர் போக, வித்யாவதி விதவையானாள். 'பாவம் ரெண்டு பெண் குழந்தைகளோட

"டாக்டரோட வீட்ல வேலை செஞ்சவன்னு சொல்றியே... ஏதாவது சர்ட்டிபிகேட் வெச்சிருக்கியா?"

"அவரோட ஸ்டெதஸ்கோப்பையே வெச்சிருக்கேன்மா !"

– பழ.கவிதா சிவமணி, ஈரோடு.





எப்படித்தான் சாமாளிக்கப்போறாளோ?' என்று சேதி இவளை எட்ட, சாவித்ரிக்குமே வருத்தம்தான்.

ஊருக்குள் நுழைந்து பஸ் நிற்க, இறுகின தன் முட்டுகளை சிரமப்படுத்தி படியிறங்கி, ஊர் மண்ணில் கால் பதித்தாள் சாவித்ரி. இங்கிருந்து போகையில் ஒடிசலாய் இருந்த தேகம், மருட்சியான மனசு.... இப்போது இல்ல. முப்பத்தி மூன்று ஆண்டுகள் கழித்தல்லவா வந்திருக்கிறாள்....?

சந்தோஷந்தான் என்றாலும் கூடவே சிறு சலிப்பும். தன்னை இங்கு அனுப்பிய ஜமுனாம்மாள், ஒரு காரில் ஏற்றி அனுப்பியிருக்கக் கூடாதா?

'ரெண்டு பஸ் மாற்றி மாற்றி சேதுமலை போய் சேருறது லேசில்லை உங்க கார் இருந்தால் போனோமா பார்த்தமான்னு சட்டுனு வந்திருவேனுங்க? என்று கேட்டுப் பார்த்தும்,

'இல்லை சாவித்ரி. நீ இன்ன விஷயமாய், நம்ப வீட்டு சார்பாய் வந்திருக்கேன்றது அம்பலமாயிருமே? சும்மா நீயா போனது போல போய் நோட்டமிட்டு, ஏதேச்சையாய் சொல்றது போல நம்ப விஷயத்தையும் உன் சிநேகிதி காதில போட்டுட்டு வந்துடறதுதான் சரி. யாரோ வந்து அந்த வித்யாவதி பெண்களைப் பற்றி சொல்ல, அந்த நிமிஷம் நீ எங்க வீட்டுக்குள்ளே நுழைவானேன்? எல்லாம் ஈசன் செயல்? சேதுமலை வித்யாவதியா? எனக்கு நல்லாத் தெரியுமே - என் பால்ய சிநேகிதி அவன்னு நீ விஸ்தரிக்க; எனக்கு அது சுப சகுனமாய்பட்டது. நான் எதிர்பார்த்த படி பேர்போன குடும்பம், இப்போ வசதியோ தகப்பனோ இல்லைன்னாலும் அழகும் படிப்பும் இருக்கு.... முக்கியமாய் பெரிய இடத்து மாப்பிள்ளையாய் தேடிக்கிட்டு இருக்காங்களாம் - கடவுளே.... எல்லாம் நல்லபடி கைகூடி வரட்டும்ப்பா....' என்று கைகூப்பிய ஜமுனாம்மாள் இவள் கையில் செலவுக்கு காசு கூட தராமல் அனுப்பி விட்டார்.

போகட்டும். தான் வளர்ந்த ஊரை, வாடிப் போயிருக்கும். வித்யாவதியைப் பார்த்து விட்டுத்தான் வருவது' - என்று கிளம்பி விட்டாள் இவளும்.

இத்தனை ஆண்டுகளில் வித்யாவதியை இவள், மறக்க முடிந்ததில்லை. அழகான எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் பால்ய சிநேகிதி பொறியாய் மனதுள் வந்து போவாள்!

அவளை அமங்கலிக் கோலத்தில் பார்க்க.... ஏன் நினைக்கவே

கூசியதுதான். மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஜட்காக்கள் அதாவது குதிரை வண்டிகள் - நிற்கும் இடத்தைப் பார்த்தாள் சாவித்ரி. அங்கு நின்றவை இரு ஆட்டோக்கள் - புழுதி படிந்த மரங்களுக்குக் கீழ் சோம்பலாய் நின்றன. ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் மூலம் தான் வரும் விவரத்தை வித்யாவதிக்குத் தெரிவித்தாயிற்று. ஆக அமரிக்கையாய் ஒருவரை ஒருவர் பார்த்து விட்டு திரும்பலாம்.

ஆட்டோ ஒன்றில் ஏறி அமர்ந்தாள் சாவித்ரி.

வித்யாவதி வீட்டின் முன்னறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் எத்தனைப் பெயர்ந்த தரையும் சீராகிவிடுமா என்ன? எப்படி செழிப்பு, ஒரு வீட்டிலோ, நபரிலோ பளிச்சிடுமோ அதே போல வறுமையும் வழிந்தபடி நிற்கும்தான் - மறைக்க முடியாது.

ஒரு காலத்தில் தன்னைக் கண்டு பொறுமிய சாவித்ரி இப்போது பரிதாபப் பட்டு விடுவாளோ.... கலங்கினாள் வித்யாவதி. சாவித்ரி வரும் விவரம் சொன்ன ஆசிரியர் கூடவே அதற்கான காரணத்தையும் யூகித்து சொல்லியிருந்தார்.

'சாவித்ரி இருக்கும் பண்ணைபுரத்தில் அவ வீட்டை ஒட்டித்தான் ஜமுனாம்மாள் இருக்கறாங்க. அவங்க தம்பி மகனுக்கு நிரம்ப சொத்து, வியாபாரத்தைப் பெருக்கி பெரிய ஆளாய் வந்திருக்கானாம். அவனுக்கு அவன் அத்தையம்மா பொண்ணு தேட உத்தேசித்திருக்கறதாய் கேள்வி. இல்லைன்னா சும்மா ஏன் சாவித்ரி முப்பது சொச்ச வருஷங் கழிச்சு இங்க வரணும்?'

தன் சாயலில் இரு பெண்களைப் பெற்று வைத்திருந்த வித்யாவதி மாப்பிள்ளைத் தேட ஆரம்பித்த சில மாதங்களிலேயே விவரமறிந்து கொண்டாள். இருந்த காலத்தில் வெறுமே அந்தஸ்தும் அழகும் போதாது என்று. இருபது, முப்பது வருஷங்களுக்கு முன்பு அவற்றுக்கிருந்த பவுசு இப்போதில்லை.

இப்போதுள்ள பயல்களுக்கு -

'நான், 60,000 சம்பாதிக்கிறேன். அதில் முக்கால் பங்கேனும் நீயும் சம்பாதி' என்பதுதான் எதிர்பார்ப்பு. ஆண்களுக்கு ஈடாய் சம்பாதித்தாலோ என்னவோ, பெண்களுக்கும் ஒரு மிடுக்கு, மினுமினுப்பு வந்து விடுகிறது.

அது நிறம், முகலட்சணத்திற்கு ஈடு செய்து விடுகிறதே! ஆனால்



மகள்களை வேலைக்கு அனுப்ப வித்யாவதி விரும்பவில்லை. பிறகு காதல், ஊதல் என்று வேறு பிரச்சினைக் கிளம்பினாள் சமாளிப்பதெப்படி?

சட்டென்று நல்ல இடமொன்று தகைந்தால் தேவலை. சமையல் அரையிலிருந்து வடையின் வாசனை, வடையும் சட்னியும் ஏற்கனவே தயார். சமையல் வேலைக்கு யோகம் இருப்பதால் கவலையில்லை. தான் மணப்பெண்ணாய் இங்கு வந்ததிலிருந்தே யோகமுனியும் இங்கே வேலையில் இருந்தாள்.

'இனி நா வேறெங்கும் போய் வேலை செய்றதாயில்லம்மா' என்று சொல்லிவிட்டு, சொற்ப சம்பளத்தில் சிக்கனமாய் வடித்து கொட்டும் தேவதை அவள். தவிர யோகம் இருந்ததால்தான் முரட்டு வேலை எதுவும் செய்யாமல் தன் பெண்களை பூ போல வளர்த்தெடுக்க முடிந்தது.

முப்பது வருஷங்களுக்கு முன் அவ்வப்போது தன் கைக்குக் கிடைத்த காசை யோகத்திற்குத் தந்ததற்கான பலன் இது. இப்படி ஒரு நிலை வரும் எனத் தெரிந்திருந்தால் அந்நாட்களில் சாவித்ரிக்கும் கூட டெய்லரைக் கச்சிதமான ரவிக்கைத் தைத்துத் தர கெஞ்சியிருக்கலாம். பூக்காரி கட்டிய செண்டு.... பூக்களைப் பகிர்ந்து, நாடகத்தின் முக்கிய வேடத்தைக் கூட சிநேகிதிக்கு விட்டுத் தந்திருக்கலாம்!

ஆனால் சாவித்ரியின் அடுத்து உறவான வாத்யாரே, 'வித்யாவதி நடுவிலே ஆடட்டும். நம்மூருல நடிப்பு, நடனமெல்லாம் மட்டம். ஊரார் இவ அழகையாவது கண் குளிரப் பார்த்துட்டுப் போகட்டுமே' என்பார்!





## தொலைப்பு

மழலையின் சிரிப்பு
மகிழ்ச்சி தரவில்லை
மெகா சீரியலை ரசிக்கும்
குடும்பத்திற்கு...

- சங்கீத சரவணன்,
மயிலாடுதுறை.

தனக்கு அத்தனை அழகு வாய்த்தென்ன, அதிர்ஷ்டம் போதுமாயில்லை என்று பெருமூச்சு விட்டுக் கொண்ட வித்யாவதி ஆட்டோ சத்தம் கேட்க, வாசல்புரமாய் நடந்தாள்.




முணகலுடன் படியேறிய தன் பால்ய சிநேகிதியை ஆச்சரியமாய் பார்த்தாள். ஏறிட்ட சாவித்ரியின் விழிகளும் கூட நொடியில் கலங்கி விட்டன. ஒருவருக்கொருவர் சிரித்து, கரம்பற்றி, சௌக்கியம் விசாரித்த பின் - ''குளிச்சுட்டியா சாவி? சாப்பாடும் ரெடி''

உபசரித்தாள் வித்யாவதி.

''கைகால் அலம்பிட்டு சாப்பிடறேன். பசிதான். சாப்பிட்டதும் மாத்திரவேற போட்டுக்கணும்'' என்றபடி போன சாவித்ரியை அடித்து நிறுத்தியது அந்த காட்சி.

மெள்ள ஆடிய கூடத்தின் தேக்கு ஊஞ்சலில் அந்த இரண்டு இளம் பெண்களும் உட்கார்ந்து பேசி, சிரித்தபடி தொடுத்துக் கொண்டிருந்தது. அத்தனை ரம்யம்.... ரவிவர்மா 'பூத்தொடுத்தல்' என்றொரு ஓவியம் தீட்டியிருந்தால் இப்படித்தான் இருந்திருக்கும் என்பது போலிருந்த அந்த சித்திரக் காட்சியில் சொக்கி நின்றாள் சாவித்ரி.

## 2

''என்ன சொல்றே சாவி - முழுசாத் தெளிவாய் சொன்னாத்தானே எனக்குப் புரியும்?'' சாவித்ரியை சேதுமலைக்கு அனுப்பி வைத்த ஜமுனாம்மாள் துருவித் துருவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''வித்யாவதியின் பொண்ணுங்க ரெண்டுமே கண்ணுல ஒத்திக்கறது போலத்தான்....''

''சரி. அதையே எத்தனை தரம் சொல்லுவ? பிறகு இழுத்தாற்போல



முடிக்கறே.... அதுக்கென்ன அர்த்தம்?''

தன் தம்பியின் மகனுக்கு அப்பழுக்கில்லாத பெண்ணாய் தேடிப்பிடிக்கும் ஆர்வம் அந்த அம்மாளுக்கு. வீட்டில் பெரியவளாய் எஞ்சி இருப்பது தான் மட்டுந்தான் என்றாக, அந்தப் பொறுப்பை தன் மேல் இட்டுக் கொண்ட ஜமுனாம்மாளை கல்யாண தரகர்கள் மொய்க்காமல் இல்லை.

''கிடைக்கற பத்து, இருபதாயிரத்துக்கு ப்ரோக்கர் எதையேனும் கொண்டு வந்து நம்ப தலையில் கட்டிருவான். அது சரியில்லைன்னு நாம கேட்டால் 'உங்க பவுனுக்கு இந்தப் பொண்ணு போதாதா?'ன்னு கூட எகிறுவானுங்க. நாம தெளிவாய் தேடி, தீர்மானிக்கறதுதான் சரி. பொண்ணு பிறந்து வளர்ந்தது நல்ல குடும்பமாயிருக்கணும். வந்து சேருறப்ப நமக்கு கௌரவமாயிருக்கணும்.... அதன்படி இருக்காளா அந்த வித்யாவோட பொண்ணு?'

''பெரிய இடந்தான். ஆனா இப்போ செழிப்பு ஏதும் மிஞ்சலை. ஓரம் நைந்த பட்டுப் பாயும், தூசடைஞ்ச வஸ்தர் விளக்குந்தான் மிச்சம். வீட்டை மராமத்து செய்யக்கூட வசதியில்லை போல.

வித்யாவதி மங்கின ஓவியமாட்டம் நின்னதைப் பார்க்க, எனக்குப் பொறுக்காமல் கண்ணு நனைஞ்சிருச்சும்மா....''

''அதாவது குடும்பம் நொடிச்சிருச்சுங்கற?''

''பெருசு பெருசாத் தேக்குக் கதவுங்க, சுவத்துக்கு வெள்ளையும், கதவுகளுக்கு வார்னிஷிங்கும் தந்து நிமிர்த்தினால் அந்த வீடு மாளிகைதான்.... ஆனா அதற்கே லட்சங்கள் ஆகும்....''

''பேசாமல் அதை வித்துட்டு, சின்ன வீட்டுக்கு மாறுறது?''

''மிஞ்சின ஒரே சொத்து அதுதான் அதைக் காட்டியோ அல்லது விற்றுதான் ரெண்டு கல்யாணத்தை நடத்தணுங்கறப்ப, பெத்தவ அவசரப்பட முடியாதில்லையா? ஆனா பொண்ணுங்களை பாலும், நெய்யுந்தந்து வளப்பமாய் வளர்த்திருக்கா வித்யாவதி. வீட்டோட ரெண்டு பசுமாடு, வேலைக்காரி....''

''ம்ம்.... ஆண்துணை இல்லாதவ விற்கப் போனாலும் மாளிகைய அடிமாட்டு விலைக்குத்தான் கேட்பாங்க. செயலான மாப்பிள்ளை அமைஞ்சால் எல்லாத்தையும் சீர் பண்ணிடுவான்''

''கடவுள்தான் வித்யாக்கு வழி காட்டணும்'' பழைய பொறாமை

எல்லாம் வடிந்து சிநேகிதிக்காய் பரிந்தாள் சாவித்ரி.

''முக்கியமான விஷயத்தைச் சொன்னியா?'' தன் பருத்த தேகத்தை சிரம்மப்பட்டு அசைத்தபடி கேட்டாள் ஜமுனாம்மாள்.

''எதை?''

''அதான் நம்ப நலவேந்தன் அவங்க ஊர் பக்கம் ஒரு கலியாணத்துக்காய் போறதைப் பத்தி?''

''ஆமாமா. இன்னும் நாலு நாளிலே தம்பி உங்க ஊர்ப்பக்கம் வருவார்ன்னு தெளிவாய் சொன்னேன். வித்யாக்கும் புரிஞ்சிடுச்சு - உனக்கு நோக்கமிருந்தால், மாப்பிள்ளையைப் போய் அங்கே பாரு. மனசுக்குத் திருப்தியானதும் இங்க தகவல் அனுப்புங்கறது போல விளக்கமாய் நான் சொல்லலைன்னாலும் பூடகமாய் சொன்னதைப் புரிஞ்சுக்கறவதான் அவ''

மண்ணைக் கிளறி, விதையிட்டு நீரும் ஊற்றி விட்ட திருப்தியுடன் உட்கார்ந்திருந்தார் ஜமுனா. தன் தம்பி அப்படி 'திடும்'மென இறந்து போவான் என்றவர் எதிர்பார்க்கவில்லை. இவர்கள் பிறந்ததும் செயலான குடும்பத்தில்தான் என்றாலும் தன் தம்பி வெறுமே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்ததில் ஜமுனாம்மாவிற்கு வருத்தம்தான்.

''குந்தித் தின்றால் குன்றே மாறுமாமே?' - இந்தத் தோப்பும், துரவும் வீடும் எவ்வளவு நாள் தாங்கும் என்ற கவலை. ஆனால் அவர் கவலைப்பட குழந்தை குட்டிகள் ஏதும் அவருக்குப் பிறக்கவில்லை. குடும்பத்திற்கான வாரிசு என்றிருந்தது தம்பியின் ஒரே மகனான நலவேந்தன் மட்டும்தான்.

ஜமுனா, 16 வயதில் திருமணமாகும் போதே பருமன்தான். நிறைய சீர் செய்து செய்யப்பட்ட திருமணம். ஆனால் ஏழு வருஷங்களாய் பிள்ளை இல்லாமல் போக, பிறந்த வீடு அவளை ஏச்சு பேச்சுடன் பிறந்தகத்திற்கே அனுப்பி விட்டது. 'இனியும் காத்திருந்தால் எங்க பையனுக்கு வாரிசு வராது'' என்று இவளைத் தூக்கிப் போட்டவர்கள்.

''ஏமாத்தி இவளை எங்கத் தலையில கட்டிட்டீங்க சதா எதையேனும் கொறிச்சு, ஊதிட்டே போறா.... தூக்கமும் ஜாஸ்தி. குரலும் கரகரங்குது ஆம்பளையாட்டம்....' என்று புகார் படித்தார்கள். இந்தக் காலமென்றால் மருத்துவ பரிசோதனையில் பிரச்சினை தைராய்ட் சுரப்பதில் என்பதைக் கண்டு பிடித்து மாத்திரையிலேயே சரி செய்திருப்பார்கள்.






அன்று கிராமங்களில் அத்தனைக் கல்வியோ கரிசனையோ இல்லை.

ஆக ஜமுனா பிறந்த வீட்டில் முடங்கினாள். தங்கைகள் வெவ்வேறு ஊர்களில் வாழ்க்கைப்பட்டிருக்க, எல்லாருக்கும் இளையவனான தம்பிதான், பெற்றவர்களுக்குப் பிறகு இவளுக்கு அடைக்கலம் என்ற நிலை. தம்பி சந்திரசேகரனின் மனைவி சாது. தன் கணவனின் நடவடிக்கைகளை முழுதாய் அறியவோ, அடக்கவோ கூடாத அப்பிராணி. ஊருக்கேப் பணக்காரனைப் பற்றி யாரும் வீடு தேடி வந்து விட்டு சில வருஷங்களிலேயே இறந்த பிறகுதான்.... அந்த விவகாரம் வீடேறியது!

''வீடு தேடி வந்தவங்க கிட்ட இன்னும் கொஞ்சம் இணக்கமாய் பேசினா என்ன? ஏதோ இவ பூக்கட்டி வந்த காசுலதான் இந்த வீட்டு அடுப்பெரியறது போல, ரெண்டு வார்த்த கூட பேசாம பூவத் தொடுத்துட்டே இருக்கறா....''

வித்யாவதி பொறுமினாள்.

சாவித்ரியிடம் தன் மூத்த மகள் நந்தனா பேசவே இல்லை என்பது அவரை எரிச்சல்படுத்தியது. தான் வீட்டை சுத்தப்படுத்துவதும், சாப்பிட வடையும் இனிப்புமாய் தயாரிப்பதிலுமே இருந்து இந்த மடப்பெண் வந்திருப்பவர், எதற்கு வந்திருக்கக் கூடும் என்று யூகித்து, அதற்கேற்றாற்போல நடந்து கொள்ள வேண்டாமா?

முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பெரிய சேதுபதி இவர்கள்

வீட்டிற்கு ஒரு நடுப்பகலில் வந்த போது, தான் பழம் பிழிந்து யாரும் சொல்லும் முன்னரே அவருக்குத் தந்து,

'பொண்ணு அழகின்னு கேள்விப்பட்டேன். குணமும் சாமர்த்தியமும் கூட இருப்பதில் ரொம்ப திருப்தி' என்று அவரை தலையாட்ட வைத்த தனது சாதுர்யம் ஏன் தன் மகளுக்கு இல்லை? ஆனால் பரவாயில்லை. இளையவள் நளினா ஒரளவு ஓடியாடி விருந்தாளியை கவனித்துக் கொண்டாள்.

பளிங்கு சிற்பம் போலிருந்த மூத்த மகள் நந்தனாவின் முகக் கருப்பைக் கவனித்தவள். ''கல்யாணம் நடக்கணும்னால் அழகு மட்டும் போதாது. குணமும் பணிவும் வேணும்'' அறிவுறுத்தினாள் கறாராய்.

''எனக்குக் கல்யாணம் வேணாம்....''

''பின்ன?''

''நளினாக்கு என்னை விட ரெண்டு வயசுதான் கம்மி? அவளுக்குப் பாரும்மா....''

''ஓ....? பிறகு உன்னை என்னைப் பண்றதாம்? கட்டிப் பரணிலே தூக்கிப் போட்டுடவா?''

''எனக்குன்னு.... ஒருத்தர் உண்டு....''




இப்போது வித்யாவதிக்கு எரிச்சல் போய் பயம் வந்தது. நந்தனாவின் போக்கு சரியில்லை. மனசுக்குள் யாரையேனும் வைத்திருக்கிறாளோ?

காதலும் கர்ப்பம் போலத் தான் - அது உள்ளே வளர்ந்து வீங்கி நிற்பதை மறைத்து



வெகு நாள் ஊரை ஏமாற்ற முடியாது. அது இப்போதுதான் தன் கண்ணிற்குத் தெரிகிறதோ?

''இத பார் நந்தனா. உன்னை நான் காமா சோமான்னு ஒரு இடத்தில் தந்தால் உன் தங்கச்சி வாழ்வும் நாசமாயிடும். இப்ப வந்த சாவித்ரி ஒரு இடத்தைப் பற்றி கோடி காட்டினாள். பெரிய இடம் பிச்சு பிடுங்கலில்லாத பையன். இந்த பூர்வீகச் சொத்தைப் பெருக்கி, கிராமத்து ஆட்களைக் கைத்தொழிலுக்குப் பழக்கி அதை ஏற்றுமதியும் செய்றானாம்....''

''எனக்கு வேண்டாம்மா.....'' நந்தனா அழுந்த சொல்ல, தாய்க்குத் தாங்கவில்லை.

''அஞ்சு பொண்களைக் கட்டிக் கொடுத்து போண்டியான வீடு இது. என்னை 'அழகி அழகி'ன்னு மாய்ஞ்சு இங்கே என்னை மருமகளாக்கினவங்க என்ன, பெரிசாய் என்னை அலங்கரிச்சுப் பார்த்தாங்க? இப்போ போலிப் பட்டும், கவரிங்கும் போட்டு சமாளிக்கறேன்''

சின்னவள் நளினா அம்மாவைக் கட்டிக் கொண்டாள் -

''அதிலேயே அழகாத்தானம்மா இருக்கறீங்க?'' என்றபடி.

''அழகை வச்சு என்னடீ செய்ய? மல்லிகைப் பூ அழகுதான்- வாசனைதான். ஆனால் அதை வடிச்சு தின்ன முடியுமா? உங்க அழகை வசதியான இடத்துல சேர்த்திடனும். அப்பதான் எனக்கு நிம்மதி கடவுள் தந்த அழகை முதலீடாக்கி உங்களுக்கு குறையில்லாத வீடு அமைச்சு தரணும்னு தவிக்கறேன். இனியும் உட்கார்ந்து சொகுசாய் தின்ன சொத்து இல்லைங்கற அதிர்ச்சியில உங்கப்பா போயாச்சு. பால் மாடும், தோட்டத்து வரவும் இருக்கறதால சமாளிக்கறோம். நானும் போறதுக்குள்ள உங்களுக்கு ஒரு வழி காண்பிச்சுற வேணாமா? என்கடமையில்லையா அது? இத்தனை சுந்தரியான பொண்ணுகளைப் பெத்து, வளர்த்துட்டு உங்களை நிர்கதியாய் விட்டுட்டு செத்தால், என் நெஞ்சு வேகாதேடி''

அம்மா அழுததும் மூத்தவளுக்கு அது ஒட்டிக் கொண்டது. கண்ணீருடன் விலகிப் போன மூத்தவளைத் தொடர்ந்தாள் நளினா.

''அக்கா, அம்மா சொல்றது நியாயந்தானே? நம்ப அழகை முதலீடுன்னு சொன்னாலும், அதைத் தப்பாய் பயன்படுத்த அம்மா யோசிச்சதே இல்லை''

மூத்தவள் உட்கார்ந்து முழங்காலைக் கட்டியபடி விசும்பினாள்.

"உன்னைக் காலேஜ் மேடையில் பார்த்துட்டு வந்த சினிமா டைரக்டரை வீட்டிலே ஏத்தாமல் விரட்டியடிச்சாங்களே? 'கௌரவமான குடும்பத்துக்கு வாக்கப்பட வேண்டிய பொண்ணு இது, வேற ஒருத்தனோட நடிப்புக்கு கட்டி இழைஞ்சாலும் கூட அது கண்ணியமில்லை. லட்சம் கண்ணுங்க பார்க்க, இவ இப்படி செய்து சம்பாதிச்சு எங்களுக்கென்ன ஆகப்போகுது?

"அதுக்கு.... என்னை என்ன பண்ண சொல்ற?"

"ஏதோ பையனைப்பற்றி சொல்றாங்களே? போய் பாரு - பிடிக்கலைன்னா விட்டுரலாம்."

"எனக்கு.... பிடிக்காது"

"இப்படிச் சொல்லக் காரணம்.... அந்த பிரசாத் தானே?"

அலட்சியமாய் தங்கை கேட்ட கேள்வியில் அதிர்ந்து போனாள் அக்காள்!

## 3

"ஏய் உனக்கென்ன தெரியும்? கிழவி போல உளறாத" சற்று சீற்றமாய் பேசி தங்கையை அடக்க முயன்றாள் நந்தனா. "வயசுல உன்னை விட கொஞ்சம் கம்மின்னாலும் புத்தி உன்னை விட எனக்கு கூடுதல் அக்கா...." நளினா அழுத்தமாய்ச் சொல்ல,

சற்று அச்சத்துடன் தங்கையை ஏறிட்டாள் நந்தனா.

"இது.... இது அம்மாக்குத் தெரியுமா?"

"அம்மாக்கு அப்பாவித்தனம் கூடுதல். ஆக நீ பட்டிமன்றம், இலக்கிய விழான்னு போகும்போது, அது மொழி மீதான உன் காதல்னு நினைச்சிட்டிருக்காங்க."

"உம்.... உனக்கு?"

"கொஞ்சம் கவனிச்சால் சகலமும் புரியும். ஆனால் பிரசாத் சொல்லும் கவிதை வரிகளில் நீ கொஞ்சம் கிறங்கியிருக்கேன்னு புரிஞ்சாலும் நீ அதை 'காதல்' எனுமளவு தீவிரமாக்கப் போறேன்னு நான் எதிர்பார்க்கலை. அதுவும் அவர் கவிதை வரிகள் எல்லாம்



அவரது சுய சிந்தையுமில்லை. போன தரம் மேடையில் பேசி அவர் கைத்தட்டலை வாரிக் கொண்ட வரிகள் தபூ சங்கருடையது...."

'சூரியக் கதிர்கள்
மழைத் துளிகளுக்குள் நுழைந்தால்
வானவில்.
உன் பார்வைக் கதிர்கள்
என் இதயத்துக்குள் நுழைந்தால்
காதல்!"

"அந்தக் கவிதை இவருதில்லையா?" குழப்பமாய் கேட்டாள் நந்தனா. ஆனால் பரவசத்துடன் இவள், மேடையிலிருந்து இறங்கிய பிரசாத்திடம், 'எப்படித்தான் இப்படி யோசிக்கிறீங்களோ?" என்று உருக, அவன் 'என் கவிதைகள் எல்லாம் தழுவல்கள்தான்-

அதாவது உன்னைத் தழுவி உருவானவை' என்றானே? அவனது பேச்சை, பேசும்போது சீண்டும் அவன் விழிகளை நினைத்ததுமே நந்தனாவின் முகம் சிவந்து போனது!




**பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தை போக மண்டபம் என்றும், திருமலையை புஷ்ப மண்டபம் என்றும், காஞ்சி வரதராஜ பெருமாள் கோயிலை தியாக மண்டபம் என்றும், வைணவர்கள் கூறுவர்.**

**- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.**

அக்காவின் முகநிலையைக் கவனித்த இளையவளின் முகம் தொய்ந்தது.

"நம்மை ஆளாக்கி, அன்பு வச்சிருக்கற அம்மாக்குத்தான் நம் முதல் கடமை, கரிசனை எல்லாங்க்கா - அம்மா பூனை மாதிரி வளர்ந்த ஊரை, வாக்கப்பட்டு வந்து, வாழ்ந்த வீட்டை விட்டுட்டோ, விற்று விட்டோ போக லேசில் மனசு வராது. வந்து போன அந்த

# ஆள்மாறாட்டம்

காதலியே...
ஒரு எண் மாறிப்போனது!
என் வாழ்வும்
மா(நா)றிப் போனது!
உனது 'சிம்' எண்ணும்
உன் தங்கை சிம் எண்ணும்
ஒரு எண் வித்தியாசம்!
உனக்கு தந்த 'ஐ லவ் யூ'
அவசரத்தில் அவளுக்கு
போய்விட மனைவியாய்
மாறிவிட்டாள்!
அவளோடு நான்
மாரடித்துக்
கொண்டிருக்கிறேன்!

– இ.டி.ஹேமமாலினி,
சென்னை–53.




சாவித்ரிம்மா சொன்ன வரன், வரதட்சணை கேட்டு, வந்ததை எண்ணி சரிபார்த்துட்டு மூனு முடிச்சு போடும் ஆளில்லை. சீர் தந்து சீதேவியாய் மனைவியை அழைச்சுட்டுப் போக் கூடியவராம்?''

''அதற்கு ஏதேனும் காரணமிருக்கும்....''

''என்ன... சொல்லு''

''நிச்சயமாய் தெரியலை. ஏதேனும் தீர்க்க முடியாது வியாதி கண்டிருக்கலாம். அல்லது மாப்பிள்ளை வயது நாற்பதைத் தாண்டியிருக்கும்.... ஏதோ ஒரு மோசமான காரணம்.''

''அப்பிடியிருந்தால் நீ அந்த நில.... ம்ஹூம் நலவேந்தனைக் கட்டிக்கணும்னு நான் சொல்லவே மாட்டேன். பெயர் நல்லாயிருக்கில்ல? ஆனால் பிரசாத்தைக் கட்டிட்டு நீ சௌகர்யமாய் எல்லாம் வாழ முடியாதுக்கா அவர் பக்கத்து ஊர் ப்ரைவேட் ஸ்கூலில் தமிழ் வாத்தியார். பட்டிமன்றம், கவியரங்குகளில் தழுவல் வரிகளைப் பேசி கைதட்டை அனுபவிக்கிறவர் தவிர....''

தங்கையின் குத்தல் பார்வையில் குன்றினாள் நந்தனா. இவளுக்கெப்படி இத்தனை தகவல்கள் சேர்ந்தன என்ற கலக்கம்.

''அவர் வீட்டிலும் அப்பா இல்லை. கல்யாணத்துக்கு ஒரு தங்கை காத்திருக்கா. மகளுக்கு முதலில் முடியலைன்னால், மகனுக்குப் பெண் பேசி, வரும் வரதட்சணையில் மகள் பிரச்சினையைத் தீர்த்தடலாம்ன்றது பிரசாத்தின் அம்மா போடற கணக்கு. அது தப்பில்லை. ஆனால் அது நமக்கு ஒத்து வராதே?''

நந்தனா நிமிரவேயில்லை.

''உன்னுடையது காதலானது நிச்சயப்படறதுக்கு முன்னமே எனக்குக் கிடைச்ச தகவல்களின்படி எனக்குப் புரிஞ்சது இது. உன்னது மெய்யானக் காதல்னு நீ நினைச்சால் அவருடைய சம்பாத்தியத்திற்குள் வாழ முயற்சிக்கலாம்.

'வாழ்வு ஒரு எல்லையில்லாத புதிர். ஆக அறிவு மிகுந்தவர்களால் வாழ முடிவதில்லை. வாழ்வு குழந்தைத்தனம் கொண்டோர்க்கே உரியது' - இது ரஜினிஷ் சொன்னது. அது சரிதான்னு சில சமயம் எனக்கும் தோனியிருக்குது. ஆக, அது உன்னிஷ்டம்.

'எனக்கும் பிரசாத் மேலே காதல். அவரைத் தவிர வேறெதும் வேண்டாம்'னு உனக்கு தோணினால் சரி. ஆனால் அவர் வீட்டாருக்குப் பேராசை இருக்குது. பெண் வீட்டில் பேரம் பேசி பிடுங்கற ஆள் அவங்கம்மா.

'பையனின் கைக்கு என்ன போடுவீங்க?

பையில் எத்தனை வைப்பீங்க?'ன்னு கேட்பாங்க''

தங்கை பேசி முடிக்க, நந்தனாவின் நீளக் கண்கள் நீரில் ஆடின....

''ஆனா அவர்....''

'அவர் தாயுடனான தன் தொப்புள் கொடி உறவை இருபத்தியெட்டு வருஷங் கழித்தும் வெட்டிக்க அஞ்சும் பக்காத் தமிழ் பையன்தான்.

'உன்னைப் பத்து மாசம் சுமந்து பெத்ததுக்கு இதுதானா நீ எனக்குச் செய்ற கைம்மாறு?'ன்னு அம்மாக்களும் மகன்களின் குடுமியைப் பிடித்து இங்கே உலுக்கர வரை வேற வழி?

பேசிய தன் தங்கையை சற்று அச்சத்துடன் பார்த்திருந்தாள் முந்திப் பிறந்தவள்!

எப்படியிப்படி பேசுகிறாள்? சதா வாசிப்பதாலா.... அல்லது

கல்லூரியில் துடிப்பானத் தோழிகளை கொண்டிருந்ததாலா?

தங்கை சொல்வது மிகைப்படுத்தல் இல்லை. பிரசாத் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தன்னிடம் கோடி காட்டியிருந்தான்தான். ஆக இரண்டு பக்க தாய்மாரும் சம்மதித்து தங்களது திருமணம் நடக்குமா?

அப்படி நடந்தாலும் தன் வாழ்க்கை நிம்மதியாய் போகுமா? ஏதோ சிற்சில சந்திப்புகளில் அக்கா நந்தனாவின் மனதில் அந்த பிரசாத் எப்படி இத்தனை முழுமையாய் நுழைந்தான்?

அம்மா ஆசைப்பட்ட பெரிய இடத்து சம்பந்தம் வந்த பிறகும், இது வேறு பிரச்சனை. நந்தனா இவ்வளவிற்கு மயங்கிப் போயிருப்பாள் என்பது இவள் எதிர்பார்க்காதது.

அழகு நிலையத்தில் அமர்ந்து தன் புருவத்தைத் திருத்தக் கொடுத்திருந்தவளை வலி 'சுள்'ளென்று பிடுங்கியது. நளினாவிற்கு சற்று அடர்ந்த புருவங்கள். கீழ் வளைவிலிருக்கும் உபரி ரோமத்தை நீக்கி, விளைவூட்டினால் தன் கண்களின் அளவும் கவர்ச்சியும் கூடுவதைக் கண்டவள், எப்போதாகினும் அதைத் திருத்திக் கொள்வதுண்டு. வலி மறக்க, தன் கவனத்தை வேறு எதிலேனும் திருப்ப யோசித்தவளுக்கு, அம்மா அன்று காலை சொன்னதுதான் ஞாபகம் வந்தது - கூடவே சிரிப்பையும் கூட்டிக் கொண்டு.

'உன்னதக் காதலா? உதவாதக் காதல்!' - கடித்த பற்களூடே இதை அம்மா சொன்ன விதம், சிரிப்பை நீட்டித்தது. அம்மாவின் சிநேகிதி சாவித்ரி வந்து போன இரண்டு நாட்களும் வீடு கனத்து கிடந்தது. அக்கா வழிக்கு வர மாட்டாள் என்றானதும் நளினா அம்மாவை வளைக்க முயன்றாள்.

''ஏம்மா நமக்கு சீர் தரும் மாப்பிள்ளையாய் ஏன் நாம தேடனும்? இந்த வீட்டை விற்றால் வர்ர காசில்....''

''மிஞ்சின ஒரே பரம்பரை சொத்து இதுதானேடீ.... இதையும் போக்கடிக்கப் பேசாத. ''ஆனா இந்தப் பெரிய யானையைக் கட்டி தீனி போடற பவிசும் தெம்பும் நமக்கில்லையேம்மா. மராமத்து இல்லாம வீடு பாழாய் கிடக்குதே?''

''வாடி வாயாடி.... ஆனா இதை விற்கறதுக்கும் ஒரு பவுசு



நடக்கும் 2011ம் ஆண்டில் சில ஆச்சரியங்களை கவனித்தீர்களா! ஜீலை மாதம் 5 வெள்ளிக்கிழமைகள், 5 சனிக்கிழமைகள். 5 ஞாயிற்றுக்கிழமைகள் வந்ததே! அதுபோல, மறுபடியும் வர 823 ஆண்டு களாகுமாம்.

இன்னொரு ஆச்சரியம்! 2011ம் ஆண்டில் சில மாதங்களில் முழுக்க முழுக்க 1 எண்களைக் கொண்ட தேதிகளும் வருகின்றன.

1.1.11 1.11.11 11.11.11.

மல்லிகா அன்பழகன்,
சென்னை - 78




வேணுமே? இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் பெறும் யானையைக் கூட நலிந்தவன் விற்றால் பத்து வெள்ளிக்குத்தான் கேட்பாங்க - புரிஞ்சுக்கோ. அந்த சொற்பத் தொகையில் உங்கக் கல்யாணத்தை நடத்திட்டு என் மிச்ச காலத்துக்கு எங்க போறது?''

'நீ எப்பவும் எங்கூடத்தான்ம்மா?'

இளைய மகள் தன்னைக் கட்டிக் கொள்ள, தாயின் முகம் இளங்கியது. இப்படி இளகும் சமயங்களில் தாயின் அழகு 'பளிச்'சென தலை நீட்டி விட்டு, மறுபடி கவலை, கசப்புக் கோடுகளுக்கிடையே மறைந்து கொள்வதை பார்த்திருந்தாள் நளினா.

''அதெல்லாம் மாப்பிள்ளைகளுக்கு உபத்திரவமாய் இருக்கக் கூடாதுடி. நீங்க கசங்காம வாழணும்.... அதுக்குத்தான் உங்களை சமைக்க விடாமல், கடை கண்ணிக்கும் கூட அலைக்கழிக்காமல் பிறந்தபோது நீங்க இருந்த அதே பால்நிறத்துல பாதுகாக்கறேன்?'

'ச்சும்மா - என்னை.... கொஞ்சம் காபி நிறத்துலதாம்மா பெத்துட்டீங்க?'

'வாய் மூடு. அளவாய் டிகாக்ஷன் சேர்ந்த கெட்டிப் பால் மேலும்

ருசிக்கும்டீ ஆனால் இப்போ ரதியே வந்தாலும் மாப்பிள்ளைங்க பேரம் பேசறாங்க?

'அதுக்குக் காதல் கல்யாணம் தேவலை இல்லியாம்மா? வியாபாரம் பேசாத உன்னத காதல்?'

இப்படிக் கேட்டதற்குத்தான் அம்மா அப்படி ஒரு பதிலை உறுமினாள்!

கச்சிதமாய் திருத்தப்பட்ட புருவங்களைச் சரிபார்த்த அந்த அழகு நிலையத்தின் பெண் முறுவலித்தாள்.

'உங்களுக்கு ரொம்ப அழகு முகம்' என்ற பாராட்டுடன் வளைந்த புருவங்களுக்குக் கீழே மேலும் விசாலமாய் தோன்றின நளினாவின் கருவிழிகள். அவற்றில் கொப்பளித்த இளமையும் தெளிவுமே அவற்றுக்குப் போதுமான அலங்காரம். கிள்ளியெடுத்து நிறுத்தியது போன்ற தனது நாசியும், வருட வைக்கும் மலர் உதடுகளும் இவளுக்கும் அம்சமாகவேப்பட்டன. ஆனாலும் தான் செய்ய நினைத்திருந்த காரியம் அவளைச் சற்று உதறவும் வைத்தது!

காசு தந்துவிட்டு, குடையைப் பிரித்தபடி சாலையில் இறங்கிய நளினா ஏறக்குறைய அதனுள் பதுங்கியபடிதான் நடந்தாள். அடிக்கடி வெளியே நடக்காததால் ஏதோ ஒரு சங்கடம்.

**பேறுகால வலி குறைய**
**முருங்கை இலை ஒருபிடி,**
**பத்துகிராம் கொத்தமல்லி**
**இரண்டையும் வேக வைத்து,**
**அதன் நீரைக் குடித்து வர**
**பேறுகால வலி குறையும்.**
**- பிரபாலிங்கேஷ்,**
**மேலகிருஷ்ணபுதூர்.**








சேதுமலையில் எட்டாவது வரைதான் படிக்க முடியும். ஆக மேற்கொண்டு படிக்க, சகோதரிகள் கோவைக்குப் போனார்கள். கல்லூரிப் படிப்பும் அங்குதான். அநாவசியமாய் ஊரைச் சுற்றும் சுதந்திரமெல்லாம் தன் மாணவிகளுக்குத் தராத கல்லூரியாய் பார்த்து அம்மா தேர்ந்தெடுத்திருந்தார்கள். தவிர, அதற்கானப் பணப்புழக்கமும் இவர்கள் கையில் கிடையாது. வாரம் ஒரு முறை அரைநாள் வெளியே சுற்றித் திரும்பினாலே பையிலிருந்த ஒரு முழு நூறு ரூபாய் கணாமற்போயிருக்கும். அதை அனுப்ப தாய் பட்ட கஷ்டம் என்னவோ என்ற பதட்டத்தில் பெண்கள் அடக்கியே வாசித்தனர்.

கல்லூரியின் கலை நிகழ்ச்சிகள், போட்டிகளில் பங்கேற்பதே அவர்களுக்குப் போதுமான மாற்றமும் சுவையும் ஆனது. ஒரு டிகிரிக்கு மேலே படிப்பு அவசியமேயில்லை என்பது வித்யாவதியின் முடிவு.

'அம்மா இப்பவே காம்ப்பஸ் தேர்வில் எனக்கு வேலை கிடைச்சிருச்சு. மேலே ஒரு பி.ஜி. டிகிரியும் சேர்ந்தால் நல்ல வேலை நிச்சயம். நாம இப்படி சிரமப்படாமல் சென்னைக்கு போயிடலாம்.

நளினா சொல்ல, தாய்க்கு அது வேடிக்கையாய் தோன்றும். 'ஆமா. உன்னை நம்பி, பட்டணத்து எலி வளை வீட்டிலே, என்னை 'இப்ப நீ இன்னான்ற, போன்னு' அதட்டற ஒரு வேலைக்காரியோட நான் அல்லாடணுமா? அந்தத் தூசும் வெயிலும் எனக்கு மட்டுமில்ல, உங்களுக்குமே ஒத்துக்காது. அதுதானே கோயம்புத்தூரில படிக்க வச்சேன் உங்களை?'

காலமும் அதனோடு உலகமும் மாறிவிட்டது, தெரியாமல் அம்மா சில பதில்களைத் தயாராய் வைத்திருப்பாள்! கல்யாணம் தான் பெண்களின் வாழ்வின் நோக்கம் என்ற அம்மாவின் சித்தாந்தத்திலும் நகைகளைப் போட்டுக் கொண்டு, கல்லூரியின் ஆண்டு விழாவிற்கோ அல்லது இவர்களை வீடு கூட்டிப் போகவோ வித்யாவதி கல்லூரிக்கு வரும்போது, உடன்படிப்பவர்கள் அதிசயித்துப் போவார்கள்.

'யப்பா.... உங்கம்மாவும் என்ன அழகு? ஜமீன் பரம்பரையான உங்களுக்கு சொந்தமாய் ஒரு மலையே உண்டாமே?'

'அதெல்லாம் அந்தக் காலத்திலே. இப்போ பாதிக்கு மேல் அரசாங்கம் எடுத்துகிட்டு அங்கே பயணியர் விடுதியும் கட்டியிருக்காங்க. டூரிஸ்ட்ஸ் வர்றாங்க?

'எங்களையும் ஒருதரம் உங்க சேதுமலைக்குக் கூட்டிட்டு போங்களேன்.'

'நிச்சயமாய்' என்று நந்தனாவும் நளினாவும் ஒத்துக்கொண்டாலும் அவர்களது தாய் இவர்களை அடக்குவாள்-

'அவங்க வந்து நாம காலி டப்பாங்கறதைப் பார்த்துடணுமாக்கும்? வெல்வெட்டும் வேலைப்பாடுமான நகைப் பெட்டியாய் நாம மூடி இருக்கற வரைக்குத்தான் கௌரவம். திறந்து உள்ளே ஒன்னுமில்லைங்கறதைப் பார்த்தாள் சிரிப்பாங்க....'

ஆக சகோதரிகள் யாரிடமும் ஒட்டிப் பழகுவதில்லை. உறவும் இவர்களிடமிருந்து எட்டியே நின்றார்கள். படிப்பு முடிந்து வந்த மூத்தவளுக்கு மாப்பிள்ளைத் தேடும்படலம் ஆரம்பமானது.

வரும் தரகர்களிடம் வித்யாவதி லேசாய் தன் பெண்களைக் காட்டுவதோடு சரி - காசை எல்லாம் காட்டுவதில்லை.

'பெண்ணுக்கு என்ன செய்வீங்க? பொண்ணு வேலைக்குப் போகலை. அதுக்கு சமன் செய்றது போல கார், ஃபிளாட்டெல்லாம் நிறைவாய் செய்தால்....' ஆரம்பிக்கும் தரகர்களை இடைவெட்டுவாள் வித்யாவதி.

'எம்பொண்ணு பார்க்க கண்ணுக்கு நிறைவா இருக்கறால்ல? வர்ரவங்க செலவழிச்சு கட்டிட்டுப் போகணும். அப்பேற்பட்ட வரனாய் இருந்தால் சொல்லுங்க - மற்ற பேச்சு வேண்டாம்....'

ஆனால் இந்த டம்பத்திற்கு எந்த இடம் தேறும் என்று புரியாத தரகர்கள் பிறகு மலையேறி வரவில்லை. போக்குவரத்து செலவிற்குக் கூட காசு தராத வித்யாவதி அவர்களது பட்டியலிலும் இல்லை!

சம்பங்கி பூவின் ஒயிலுடன் இருந்த தன் மூத்த மகளுக்குப் பெரும்புள்ளிகள் வரிசையிடப் போகிறார்கள் எனக் காத்திருந்த வித்யாவதிக்கு இது அதிர்ச்சி. ஆக இதுவரை எட்டிப் பார்க்காத உறவுகளிடம் போய், 'ஏதேனும் தெரிஞ்ச நல்ல பையனாய் இருந்தால் நம்ப நந்தனாவுக்குச் சொல்லுங்க' என்று சொல்லி வைத்தாள். அவரவர் தங்கள் குடும்பத்துப் பெண்களுக்கே மாப்பிள்ளைத் தேடும் மும்முரத்தில் இருந்ததால் இவளைச் சட்டை செய்யவில்லை.

செய்தித் தாள்களில் தரும் விளம்பரத்திற்கு அதிகம் செலவாகுமாமே என்றவள் யோசித்துக் கொண்டிருந்த போதுதான்



பழைய தோழி சாவித்ரி வீடு தேடி வந்தது!

பொறுக்கி எடுக்க மாப்பிள்ளைப் பையன்கள் கொட்டிக் கிடக்கவில்லை எனப் புரிந்த வித்யாவதி ஜரூராய் நின்றாள்.

சாவித்ரியின் வாயைக் கிண்டி, வரன் உழைத்து உயர்ந்தவன், நல்ல குடும்பத்தின் ஒரே வாரிசு, ஆளும் பார்வைக்கு அம்சந்தான் - என்பது புரிய பரபரத்தாள் - இது போதாதா?

ஆனா 'மாப்பிள்ளை பார்க்க' தான் வருவதாயில்லை என்று மறுத்த நந்தனா 'கல்யாணமே வேண்டாம்' என்றும் விசும்ப ஆரம்பிக்க, தாய்க்கு ஆங்காரம்.

இளையவளின் வாயைக் கிண்டி மேலும் சில விவரங்களை எடுத்துக் கொண்டவள் புலம்பினாள் -

'இத பார் நந்து - எளிய அரசாங்க உத்யோகம்னாலும் கூட அம்மா யோசிப்பேன். ஆனா இவன் வெட்டிப் பேச்சை நம்பி வண்டி ஒட்டறவனாம். நிலையான வருமானம்மில்லைன்னா ஒரு நாளும் நிம்மதியில்லை. இனி அந்த எண்ணத்தை விட்டுட்டு, ஆகற வழியைப் பாரு.

எதையும் பார்க்க முடியாதென நந்தனா அறையில் அடைந்து கிடக்க, நளினாவிற்கு ஒரு வழி தெரிந்தது!

அதில் போய் பார்த்து விடுவது என்ற துணிவோடு இறங்கி விட்டாள் அவள்!



# 4

கடந்த நான்கு நாட்களாய் வித்தியாவதி செய்த முயற்சி லேசில்லை. ஒரு தேரையே நகர்த்துமளவு முயற்சித்தாள். ஆனால் நந்தனா விடாமல் அழுததில் முகம் வீங்கிப் போக, 'இந்த முகத்தைப் போய் காட்டறதுக்கு சும்மாவே இருக்கலாம்' என்று அடங்கி விட்டாள், பெற்றவள்.

'எத்தனை அடம் பிடிச்சாலும் அந்த இலக்கிய பரதேசியை உனக்குக் கட்டி வைப்பேன்னு நினைக்காதே' என்று மட்டும் எச்சரித்தாள் மகளை. பிரசாத்திற்கு அம்மா சூட்டிய பட்டப்பெயரை இளையவள். மனதுக்குள் ரசித்து சிரித்தாலும் வேறு திட்டமொன்றை கவனமாய் தன் மனதுக்குள் போட்டாள். கடைசியாய் அக்காவிடம் கேட்டாள் -

**ஒரே நபர் இரண்டு பல்கலைகழகங்களில் துணைவேந்தராகப் பணிபுரிய முடியுமா? ஆனால், காலஞ்சென்ற சர்.சி.பி. ராமசாமி அவர்கள் மட்டும் தான் காசி, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் ஒரே சமயத்தில் பணிபுரிந்தார்.**

**- பி.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி.**

'அக்கா, அம்மா நம்மோடு வர வேணாம். நீயும் நானுமாய் அந்தக் கல்யாண வீட்டுக்குப் போய் வர்ரவரை - அதான் அந்த நல்வேந்தனைப் பார்ப்போம். பெயரைப் போல ஆளும் நல்லாயிருந்தால்....'

'நான் எங்கேயும் யாரையும் பார்க்க வரலை. அதெல்லாம் அவருக்குப் பண்ர துரோம்'

ஒட்டுக் கேட்ட வித்யாவதி ஆங்காரமாய் கேட்டாள் -

'எடீ.... இது தாய்க்குப் பண்ர துரோகம்னு ஏன் உனக்குத் தோணலை? பாடுபட்டு, வளர்த்த எங்கடமையை முடிக்க விடாமல் அழிப்பு பண்றியே. எம்மனசு படும்பாடு ஏன் உனக்குப் புரியலை?



பதிலுக்கு பதில் பேசினால் விபரீதமாகும் என்பது புரிந்த நந்தனா மேலும் கண்ணீரைப் பெருக்கினாள்!

மூவராய் இருந்த வீட்டில் மற்ற இருவரும் படும்பாடு சகிக்காமல் தான் நளினா தன் மனதிற்குள் அந்தத் திட்டம் வரைந்தாள். கோலம் கச்சிதமாய் வர, புள்ளிகள் இடுவது போல, இதற்கும் நினைத்து நினைத்து புள்ளிகள் வைத்தாள்.

கசகசா, கடலைமாவு, பால், தேன் - இவைதான் அவர்களது தினசரி அழகு சாதனங்கள், என்றாலும் தன் நிறத்திற்குப் பொருத்தமான ஒரு ஃபவுன்டேஷன் க்ரீமை அழகு நிலையத்திலிருந்து வாங்கியிருந்தாள் நளினா. கூடவே இலவச ஆலோசனையும் கிடைத்தது -

'நீங்க தலைமுடியைச் சற்று உயர்த்தி வாரினால் உங்க முக அமைப்பு என்னும் எடுப்பாய் தெரியும்?'

அதன்படி நளினா தலைவார, யோகம் ஆயா கூட பாராட்டினாள் - 'என்னடா , உன் முக லட்சணம் கூடித் தெரியுதே?' என்று இதெல்லாம் அவளது திட்டத்திற்கான ஆரம்பப் புள்ளிகள்தான் 'ஆயா, நான் கோமளா டீச்சர் வீடு வரை போறதாய் அம்மாட்ட சொல்லிடறீங்களா?' என்றவள் மறுநாள் மறுபடி அதே. அழகு நிலையத்தில் புகுந்து, முகத்தை மேலும் பொலிவாக்கி, கொண்டு வந்திருந்த பட்டுச் சேலையை சுற்றிக் கொண்டாள். நீண்ட பின்னலில் புடவைக்குப் பொருத்தமான தங்க நிறப் பூ ஒன்றையும் அங்கிருந்த பெண் தர, நேற்றே வரச் சொல்லியிருந்த ஆட்டோவில் ஏறிக் கிளம்பினாள் நளினா.

போகும் போதே பதட்டம் என்றாலும் வாழைமரங்களும் ஒலிபெருக்கி அலறலுமாய், இருந்த அந்த இடத்திற்கு வந்ததும் நடுங்கவே ஆரம்பித்திருந்தாள்!

இருபது நிமிஷங்களுக்கு முன் இந்தக் கல்யாண வீட்டிற்கு வரத் தயாராகி நின்றபோது இருந்த மனநிலை வேறு.

புது அலங்காரத்தில் கண்ணாடியைப் பார்த்தவளுக்கு இந்த உலகையே ஜெயித்து விடலாமென்ற உற்சாகம்.

ஏனென்று புரியாத குதூகலத்தில் அவள் முகம் ஜொலித்தது....

இதுவரை எண்ணவும் துணியாத காரியத்தை இப்போது செய்யப்போவதாலா?

அக்கா, அம்மாவிற்கு அது ஒரு விதத்தில் நிம்மதி அளிக்கும் என்பதாலா?

அல்லது தன் வீட்டிற்கு மாப்பிள்ளையாகும் தகுதியுள்ள ஒருவனைத் தான் சந்திக்கப் போகிறோம் என்பதா...?

தெளிவாய் புரியாவிட்டாலும் உணர்வுகளில் தித்திப்பு!

ஆட்டோவிலிருந்து இரங்கியவளுக்குக் கால்கள் தொய்ந்தன. இத்தனை 'பளிச்'சென்று கிராமத்து கல்யாண வீட்டிற்குத் தனியே வரும் பெண் ஒரு அதிசய காட்சி என்பது புரிந்தது.

'வாம்மா' என்று சம்பிரதாயத்திற்கு அழைத்தவர்களின் விழிகளில் 'நீ யாரம்மா?' என்ற கேள்வியும் தொக்கி நின்றது.

அம்மாவோடு வந்திருந்தால் அடையாளம் புரிந்திருப்பார்கள் - இப்போது வேண்டாத பேச்சைக் கிளப்பி விட்டு விட்டோமோ? ஆக தனது திட்டத்தில் இது விரல் தடுமாறி விழுந்த புள்ளி!

ஆனால் சமமாக்கத்தான் வேண்டும். அச்சிறு மண்டபத்தினுள் அவசரமாய் நுழைந்தவள், வலது ஓரமாய் கலகலவென்று பேசி சிரித்துக் கொண்டிருந்த இளம் பெண்கள் பக்கமாய் போய் உட்கார்ந்தாள். வாய்க்கு வந்ததைப் பேசி தானும் அந்த 'செட்' என்பதாய் ஒரு நாடகம்! சற்றைக்கெல்லாம் மணப்பெண்ணை அழைத்து வந்தார்கள். தோழிகள் பரிசுடன் மேடை ஏறியபோது, நளினா தயங்கியது ஒரு நிமிஷந்தான்.

கூடவே போனால் கூட்டத்திலிருக்கும் நல்வேந்தனை அங்கிருந்து நோட்டமிடுவது சுலபமே.

அது பெரிய மண்டபமில்லை. ஆக மேடை ஏறியதுமே முன்வரிசையில் உட்கார்ந்திருந்த 'அவன்' இவள் பார்வையில் சட்டென கிடைத்தான். நடுநாயகமாய் கம்பீரமாய் உட்கார்ந்திருந்த அவன் அக்கல்யாண குடும்பத்தாரை விட வித்தியாசமாய் தெரிய, அவனுக்கு இருமருங்கும் துவார பாலகர்கள் போல பவ்யமாய் வணங்கியபடி கல்யாண வீட்டார்கள்!

தன் பார்வையில் அவனை அள்ளிக் கொண்டதும், சற்று முன்பு அவளிடமிருந்த குதூகலம் மறுபடி குரங்காய் வந்து தொற்றிக் கொண்டது. உதடு விரிய, கண் மலர தான் நிற்பது உணராமல் நின்றாள்!



அந்த இளைஞனும் அந்த கூட்டத்தில் தனித்துதான் தெரிந்தான். நளினாவின் கண்கள் அவனைக் குறுகுறுவென ஆராய்ந்தன.

எப்படி தன் உயரத்திற்கேற்ற கச்சிதத்தில் உடம்பை இப்படி செதுக்கி வைத்திருக்கிறான்? பட்டு வேட்டி, சட்டையைக் கூட இத்தனை நாகரீகமாய் அணியக் கூடுமா? அவன் மேலே ஒரு பொட்டுத் தங்கமில்லை - ஆனாலும் அவனது உயர் அந்தஸ்து அப்பட்டமாயிருந்தது. கையில் கறுப்பு தோல் வாரிட்ட கடிகாரம் காலில் பளபளவென்ற வெள்ளைச் செருப்பில்லை. மெல்லிய கறுப்பு வாரிட்ட தோல் செருப்பு....




பரவசத்துடன் பார்த்திருந்தவளுக்குள் ஒரு கேள்வி குதித்து எழும்பியது இவர் நல்வேந்தன்தானா?

மாப்பிள்ளைத் தோழனாய் கூட இருக்கலாம். ஆனால் மாப்பிள்ளைத் தோழனைச் சுற்றி' மற்றவர்கள் இப்படி கைகட்டி நிற்பானேன்?

பவ்யமாய் குனிந்து பேசுவானேன்?

தோழன் எனில் மாப்பிள்ளையின் அருகே நின்று, அவன் முகத்து வியர்வையை ஒற்றியபடி, கழுத்து மாலையை சீராக்கிக் கொண்டல்லவா, இவன் நிற்க வேண்டும்?

புதுத்தம்பதிகளுடன் நின்று ஆசை தீர படங்களை எடுத்துக் கொண்டு சிநேகிதிகள் இறங்க, இவளும் குழப்பத்துடன் தன் பார்வையை அவனிடமிருந்து பிடுங்கியபடி அவர்களைத் தொடர்ந்தாள்.

'ச்சே இந்த ஊர் ஹீரோவைப் பார்த்தியா.... சூப்பருல்ல?'

'அவரொன்னும் இந்த ஊரில்ல. தேனி கம்பம் பக்கமுள்ள மிராசு வாரிசு. வடநாட்டில் படிச்சு இப்போ ஏற்றுமதி பிஸினஸெல்லாம் பண்றார்....''

''ஒஹோ?'' இடைபுகுந்து ஆர்வமாய் கேட்டாள் நளினா.

''பாக்குமட்டை தட்டுகள் செய்றார். மொத்தம் நாலு யூனிட் - செம காசு. ஆக இது நலவேந்தன்தான். ஏற்றுமதி பிஸினஸ் என்று சாவித்ரியம்மா குறிப்பிட்டார்களே?

ஆக வந்தாயிற்று, பார்த்தும் ஆயிற்று. இனி அடுத்த கட்டமான பேச்சு! ஆனால் இத்தனை பேரின் முன்னே அவனிடமாய் போய்,



## கொளஞ்சியப்பர்

விருத்தாச்சலம் அருகில் மணவாளநல்லூரில் கொளஞ்சிச் செடிகள் அடர்ந்த பகுதியில் ஆதியில் முருகன் வீற்றிருந்தமையால் இங்கு முருகனை கொளஞ்சியப்பர் என்று அலைக்கின்றனர். முருகனுக்கு இங்கு உருவம் இல்லை. முருகனது சக்கர்ம பொறிக்கப்பட்ட பீடமே சந்தனக் காப்பிட்டு வழிபடப் பெறுகிறது.

- ஆர்.கே.,லிங்கேசன்,
மேலகிருஷ்ணன்புதூர்.

நின்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தொடர்ந்து இவள் பேச வேண்டிய விவரத்தை அவனுக்குப் புரியுமளவில் எடுத்துச் சொல்வது.... ம்ஹூம்....

அப்படி ஓர் சந்தர்ப்பம் அமைத்துத் தருமாறு கடவுளிடம் இவள் கோரிக்கை வைத்ததுமே, பேசுவதற்கான ஒரு வழியும் கிடைத்தது! நான்கைந்து பேராக அவனைச் சாப்பிடக் கூட்டிச் சென்றார்கள்.... முதல் பந்தியில் இவளுக்குப் பந்தியில் இடம் கிடைக்காவிட்டாலும், அவள் சாப்பிட்டுக் கைக்கழுவ ஓரமாய் வரும்போது, காத்து நின்று



பேசிவிடுவது.

மண்டபத்தின் பின்புறம் வாழையும் தென்னையுமாயிருந்த இடத்தில் ஒதுங்கி நின்றாள்.

இவனைப் பற்றி தாயார் தந்த அல்லது பேசிய தகவல்களை மனதுக்குள் உருட்டினாள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஊரில் அம்மாவுக்கிருந்த ஒரே சிநேகிதியான பத்மா வந்து ஆவலாய் விசாரித்தார் -

'சாவித்ரி எப்படியிருக்கா? ஏதும் பிடி கொடுத்து பேசினாளா?'

'சும்மா வந்ததாய் முதலில் சொன்னாலும், அவளுக்கு நந்து, நளினாவைப் பார்த்த பிறகு தாங்கலை பத்மா.

'இவங்களுக்கு வரன் தேட ஆரம்பிச்சாச்சா? அந்தஸ்த்தான இடமாத்தான் பார்ப்பே, ஏன்னா நீ, வாக்கப்பட்ட இடம் அப்படி அது இதுன்னு சுற்றி வளைச்சா....'

''யார் சார்பாய் வந்திருக்கேன்னு சொன்னாளா?'

'ம்ம்.... அவங்க ஊர் ஜமுனாம்மா பற்றி அவங்க தம்பி மகன் பற்றி கோடி காட்டினா....'

'அடுத்து பெரியவங்க இங்கே வருவாங்களாமா?'

'அப்படி ஒரேயடியாய் உடைச்சு பேசலை. ஆனால் இந்தப் பக்கம் ஒரு கல்யாணத்திற்கு பையன் வருவார்னா.... அதுக்கு என்ன அர்த்தம்? போய் பாருங்க..... பிடிச்சிருந்தால் மேற்கொண்டு பேசலாம்னுதானே? ஆனா....''

'ஏதோ நெருடுதோ?'

'மூத்தவ... நம்ப நந்து முரண்டு பண்றா, பத்மா. இந்த இடம் வாய்த்தால் அவளுக்குக் குடிக்க பழரசந்தான், குளிக்க பன்னீர்தான்...

அவளுக்கது புரியலியே.'

தன் ஒரே தோழியிடம் கூட சொல்லக் கூடாதென பதுக்கிலிருந்த விவரம் மெல்ல வழுக்கிக் கொண்டு வெளிப்பட்டது!

பத்மாவதி புரிந்து கொண்டு கேட்டாள் -

'நந்தனாவே ஒருத்தனை நினைச்சுட்டாளோ? படிக்கும்

போது எந்த சிக்கலுமில்லை. இந்தக் கையகல ஊரில் இவளுக்கு ஈடுஜோடாய் யாரிருக்கா?'

'இந்த மடப்பொண்ணு ஈடும் ஜோடும் பார்த்தது போலில்லை.'

'அப்போ பயல் உள்ளூர்தானா?'

தாயிடமிருந்து நேரடியான பதிலில்லை -

'என்ன கருமமோ? இந்த குடும்பத்தின் காசு, கௌரவத்தை மூத்தவள் கல்யாணத்தில் மீட்டெடுத்து, அதே ஜோரில் இளையவளுக்கும் சம்பந்தம் பேசலாம்னு நினைச்சது போச்சு'

தோழியின் கைப்பிடித்து மிருதுவாய் கேட்டாள் பத்மா -

'நந்து பிரியப்படற பையன் நல்லவனா? நிஜமான பிரியந்தானா அவங்களுக்குள்ளே?'

அம்மா சீறினாள் -

'குடித்தனம் ஆரம்பிக்கையில் கையில் காசில்லாதப்ப, பிரியமாவது புண்ணாக்காவது?'

ஆனால் இதற்கு பத்மா ஒத்துப் போகவில்லை.

'அன்புன்ற பிடிமானம் இருந்தால் மற்ற எந்தத் தத்தளிப்பையும் சமாளிச்சு கரையேறிடலாம் வித்யா. நான் வாக்கப்பட்டு வந்த இடம் பெரிசில்லை. ஆனா பெருந்தன்மையான மனுஷங்க. மனசுக்கு நிறைவாத்தான் வாழறேன்'

'என்ன சொல்ல வர்ர நீ - அவ இஷ்டத்துக்கு ஆடட்டும்னா?'
'பெற்றவங்க தங்களின் ஆசைகளை குழந்தைங்க மேல் சுமத்தக் கூடாது. அதுக்கு எம்மாமனார் ஒரு கதை சொல்லுவார் -

குளிர் காலம் அது. குளத்திலே மீன்கள் நீந்தறதை பக்கத்து பாறையிலே உட்கார்ந்து பாத்திருந்ததாம் ஒரு குரங்கு.

'நமக்கே குளிருது. தண்ணியில மீனுங்க விறைச்சிடாதான்னு பரிதாபப்பட்ட குரங்கு மீன்களைப் பிடிச்சு தரையிலே விட்டதாம். அத்தனை மீனும் செத்து விறைக்க, தன் உதவி வீணாயிருச்சேன்னு நொந்ததாம் மந்தி. நோக்கம் நல்லதுதான் ஆனால் மீனின் தேவை அதற்குத் தெரியலை - இல்லையா?'

'தாய்க்குத் தன் பிள்ளைகளின் தேவை தெரியும் பத்மா.



எனக்கென்ன குரங்களவு மட்டப் புத்தியா?'

'ச்சேச்சே.... அப்படி சொல்லலை. பிள்ளைங்க அவங்க ஆசைப்படி வாழ்ந்தால் நமக்கும் நிறைவுதானே? நாம் அமைச்சு தரும். வாழ்வில் அவங்க சிரமப்பட்டால் நமக்குந்தானே அவதி?'

இருவருக்கும் காபி கொண்டு வைத்த சாக்கில், பேச்சைக் கேட்ட யோகம் ஆயாவும் குறுக்கிட்டாள் -

'பெரிய இடத்துச் சம்பந்தம்ன உடனே தலையாட்டிரக் கூடாதும்மா. நாலுக்கு எட்டு இடமாய் போய் விசாரிக்கணும். இக்காலத்துல பணத்தோட பணத்தைச் சேர்க்கத்தானே பேராசைப் படுதாங்க? மாப்பிள்ளை அப்பழுக்கில்லாத ராசான்னால் அழகு, அந்தஸ்து படிப்போட சொத்துன்ன பொண்ணுங்க இல்லாமலா? இங்க நம்மை வேவு பார்க்க ஆளை விடுவானேன்....?'

மறுபடி அசைபோட்டதில் மூன்று பெண்களின் பேச்சிலும் நியாயம் தெரிந்தது.

தங்களின் சுயநலமும் தெரிந்தது நளினாவிற்கு.

வாய்ப்பும் வசதியுமான இடத்தில், பைசா செவழிக்காமல் தங்கள் பெண் வாழ்நாளெல்லாம் வாழ வேண்டும் என்ற சுயநலம் தங்களுக்கு. ஆனால் இத்தனை பிரமாதமாய் இருக்கும் நலவேந்தன் இச்சிற்றூர் தேடி, பெண் கேட்க என்ன காரணம்....?

## 5

சுயநலம் பற்றி சமீபமாய் வாசித்த ஒரு துணுக்கு நளினியின் ஞாபகத்திற்கு எழுந்தது -

ஊர்த்தலைவரின் வீட்டிற்கு ஒரு முரட்டு ஆள் வந்து, 'ஐயா, இந்த ஊர்ல ஒரு கஷ்டப்பட்ட குடும்பம் இருக்கிறது. தகப்பனுக்கு வேலையில்லை. தாய்க்காரி தன் ஒன்பது பிள்ளைகளை விட்டுவிட்டு வெளி வேலைகு போவதெப்படி? வீட்டு வாடகையைக் கூட ஐந்து மாதங்களாய் கட்ட வழியில்லை. பசியோடு போராடும் அவர்களுக்கு கூரையும் இல்லாமல் போகும் - ஆக வாடகைக் கடனைத் தீர்க்க மூவாயிரம் ரூபாய் உடனடியாய் தேவை' என்று உருகிப் பேசினான்.

'அடடே... பரிதாபந்தான். அவர்களுக்கு உதவும் நோக்கில்

வந்திருக்கும் நீ யாரப்பா?' விசாரித்தார் தலைவர்.

'என் வீட்டிலத்தான் அவங்க வாடகைக்கு இருக்காங்கய்யா' என்ற பதிலில் உருக்கத்தின் உண்மை வெளிப்பட்டது!

ஆக எல்லோரும் சுயநலமிகள்தான். ஆனால் பிறருடன் பேசியபடி நாதூக்காய் சாப்பிட்ட அந்த இளைஞனின் முகத்தில்தான் எத்தனைத் தெளிவும் கம்பீரமும்?

சுயநலத்தின் கபடசாயல் அங்கு தெரியவேயில்லை?

தன் வீட்டின் படுக்கையறையில் நின்றும் நடந்தும் யோசித்தாள் நளினா. கூடவே அன்று காலையின் சம்பவம் அவளுள் தொடர்ந்தது....

அச்சிற்றூரின் திருமண மண்டபத்தில் கைக்கழுவ குழாய் வசதியெல்லாம் இல்லை. துரு ஏறிய ஒரு டிரம்மில் இரு அலுமினிய குவளைகள் மிதந்து கொண்டிருந்தன. அதுவரை ஓரமாய் நின்றவள், நலவேந்தன் சாப்பிட்டு எழுந்ததும், ஒரு குவளையில் நீரை மொண்டெடுத்துக் கொண்டு நின்று, நெருங்கியவனிடம் நீட்டினாள்.

சிறு ஆச்சரியத்துடன் வாங்கிக் கொண்டவன் முகத்தில் பிறகு சலனமில்லை.

'நான் நளினா. சேதுமலை குடும்பத்துப் பெண்' என்றாள் இவள் அவசரமாய். 'நாலு நாள் முன்னே உங்க வீட்டிலிருந்து சாவித்ரிம்மா.... கல்யாண விஷயமாய் வந்திருந்தாங்க?

'ம்ஹூம்?'

'நீங்க இங்க வர்ரதாய் சொன்னதால்.... நான் வந்து....'

ஒரு பருத்த வாழை மரத்தின் பின்னே மறைந்தாற்போல நின்றவளை நிமிர்ந்து முழுதாய் அவன் பார்க்க, அப்பார்வையில் தகிப்பில் இவளுக்கு உதறியது.

'ஓ.... அதுதான் மேடையிலிருந்து என்னை அப்படிப் பார்த்ததா? நல்ல முறையான முறைப்புதான்.

சாதாரணமாய் சொன்னது போலிருந்தாலும் அவன் கண்களில் ஒரு சிரிப்பு மின்னல் வெட்டியது.

'உங்களைப் பார்த்து வீட்டிலே என் அக்காவுக்காக....'

அவன் முகம் சற்று இறுகியதோ?



'வீட்டின் பெரிய மனுஷியை அனுப்பினாங்களாக்கும்?'

'ல்ல.... அம்மாக்கு நான் இங்க வந்தது தெரியாது.'

'இந்த இன்டர்வ்யூ மேலும் ஒரு நிமிஷம் தொடர்ந்தால், ஊர் முழுக்க இன்னும் ஒரு மாசத்திற்கு இதுதான் செய்தி.'

'ஸாரி....'

'அடுத்தத் தெரு கோயில் வாசலுக்குப் போய் நின்றால், நான் வந்து உங்களைப் பிக்-அப் பண்ணிக்கறேன் - பேசலாம்'

'தாங்க்ஸ்.'

பக்கவாட்டில் போன சந்தின் வழியாய் மண்டபத்தின் வாசலுக்குப் பாய்ந்து செருப்பைப் போட்டுக் கொண்டவள் ஐந்து நிமிஷங்களுக்குள் அவன் குறிப்பிட்ட இடத்தை அடைந்தாள்.

நின்று யோசிக்க அவளுக்குத் தன் அசட்டுத்தனம் புரிந்தது. அதை அவன் பிறர் கவனிக்கும் முன் நாதூக்காய் கையாண்ட விதமும்தான் நலவேந்தனைப் பற்றி யோகம் ஆயா,

'மனபிராந்துள்ள பையனாய் இருக்குமோ? கல்யாணம் செய்து வச்சால் தெளிஞ்சிடும்ன்ற கேஸோ?' என, வித்யாவதி -

'நிச்சயம் அப்படியில்லை. அவங்களும் பரம்பரைப் பணக்காரங்க என்றாலும் பையனின் அப்பா கூறானவரில்லை. குந்தி தின்று குன்றை குறைத்தவர் மிச்சம் வைத்ததை மகன்தான் பாதுகாத்து, பெருக்கினதாய் கேள்வி. ஆக பையன் திறமைசாலி' என்றிருந்தாள்.

இப்போது நளினாவிற்கும் அதே அபிப்ராயம்தான்.

கோயில் சுவரோரமாய் ஒண்டி, அவனுக்காய் காத்திருந்தவளுக்குள் புது படபடப்பு. அவனை மறுபடி பார்க்கப் போகும் ஆர்வம் அவளுள் சுக அனலைப் பரப்பியிருந்தது.

அத்தெளிவான முகமும் பேச்சும் சிரித்த கண்களும்....

புத்தி... நலவேந்தனை, அக்கா ஆசைவைத்த பிரசாத்துடன் ஒப்பிட்டது.

அவளது தமிழ் ஆசிரியர் யாரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம் என்பதற்கு ஒரு பட்டியல் சொல்வார்.

'அறத்தில் தன்னைவிட மேலோரையும்

பொருளில் தன்னைவிட கீழோரையும்

இன்பத்தில் தன் வயது ஒத்தோரையும்'

வைத்து ஒப்பிடலாமாம். இந்த இரு சம வயது இளைஞர்களில் யார் மேலானவர் என்று பார்க்க, தேர்வானது நலவேந்தன்தான்!

இவனை நேரில் பார்த்தால் தன் அக்காவின் மனம் மாறுமோ?

அதற்கு ஒரு சந்தர்ப்பம் தராமல் தன் திட்டத்தை இப்போது வரப்போவனிடம் சொல்வது தப்போ?

அதுவும் சுயநலம் என்றுபட்டது.

அவன் சாப்பிட்டது கூட நாகரீகமாய் இருந்ததே? முக்கியமாய் தான் மணக்கப்போகும் பெண்ணிடம் சீர் பட்டியல் தந்து காசு கறக்காத நிஜ நாகரீகன். இவனிடம் தன் கோரிக்கையை சொன்னால்.... கேவலமாய் நினைத்து விடுவானோ?

மேலும் குழம்புவதற்குள் அந்த கறுப்பு நிற ஃவோக்ஸ்வர்கன் இவளருகே நின்று, நிமிஷமாய் இவளைத் தன்னுள் இழுத்துக் கொண்டு கிளம்பியது.

இவள் புறம் துளி திரும்பியவன் -

''சேதுமலை பக்கமாய் ஒட்டறேன். சரிதானே?'' கேட்டுக் கொண்டான். ''ம்ம்.... கொஞ்சம் மெள்ள ஒட்டினால், அதற்குள் நான் சொல்ல வந்ததைச் சொல்லிடுவேன்''

''சொல்லுங்க''

''எம்பேர் நளினா.''

''நினைவிருக்குது. உங்கக்காவின் சார்பில் என்னைப் பார்க்க வந்தீங்க...''

''என்னை ஒருமையிலேயே கூப்பிடலாம். உங்களுக்கு ஏறக்குறை பத்து வயசுக்கு இளையவள் நான்''

''ஓ.... வயசெல்லாம் விசாரிச்சாச்சா?''

''அக்கா என்னைவிட ரெண்டு வயசுதான் மூத்தவள் சாவித்ரிம்மா சொன்னாங்க''

''ம்ம்... இப்போ வந்த விஷயம்.... இந்தக் கல்யாணப் பேச்சு



வேண்டாம்னுதானே?''

இவளது திருத்தப்பட்ட புருவங்கள் மேலும் வளைந்து மேலேறின!

''ல்ல.... அக்காக்கு....''

''வேறு ஒருத்தர் மேல் பிரியம்? உங்கம்மாவிடம் நேரே மறுக்க பயம். ஆக நான் கிராமத்துப் பெண்ணெல்லாம் எனக்கு வேண்டாம்னு சொல்லிடணும் - அப்படியா?''

சினிமாக் கதையொன்றின் போக்கை விவரிப்பது போல அவன் சொல்ல, இவளது விழிகள் உருண்டன.

''உன் இருபத்தியொரு வயசிற்கு நீ குழந்தை போலிருக்கே நளினா....''

''என் வயசு உங்களுக்கு.... எப்படி?''

''என் வயசிலிருந்து பத்தைக் கழிக்க, நீதானே சொன்னே? ஸிம்பிள் கணக்கு''

கிண்டலடிக்கிறானோ.... கலங்கினாள்.

''பார்க்க உங்கக்கா எப்படி?''

உற்சாகமானாள் - ''என்னை விட ரொம்ப அழகு''

''நிஜமாவா?'' அவனது தொனியில் இவள் முகம் சிவந்தது. ஒரு ஆணின் அருகே தனித்து அமர்ந்து பேசியபடி போவது இவளுக்கு நூதன அனுபவம். அதுவும் உன்னை விட அழகாகவும் ஒருத்தி இருக்கக் கூடுமா?' என்ற அவனது தொனியில் இதயம் எம்பிப் படபடத்தது. ஏ.ஸி.யை மீறியது வியர்வை.

''அக்கா என்னைவிட நிறம் - பால் வெள்ளை''

''உன்னது ஆரோக்கியமான சருமம். ரொம்ப வெளிறலாயிருந்தால் சோகை பிடித்தாற்போல் தோணும்.'

இது நிச்சயம் கிண்டல்தான்!

உன் அக்கா என்னை வேண்டாமென ஒதுக்கும் முன்பு, நான் அவளை நிராகரிக்கிறேன் எனும் சில்மிஷமோ?

''சேச்சே... புருவமெல்லாம் அக்காக்கு இயற்கையிலேயே அமைப்பாயிருக்கும். எனக்கு ரொம்ப அடர்த்தியா, நேற்று போய்

ட்ரிம் பண்ணினேன்...''

தான் உளறுவது புரிந்து இவள் விழிக்க, அவன் வாய்விட்டு சிரித்தான்.

அவனது கம்பீர முகம் கனிந்ததைக் கண் நிரம்பப் பார்த்தாள்.

இவ்வளவு அம்சமான ஒரு ஆணை நளினா இதுவரை சந்தித்ததில்லை... இவ்வளவு நெருங்கி அமர்ந்து பேசியதுமில்லை... இதையும் சொல்லிவிடக் கூடாதென்று தன்னையே அடக்கிக் கொண்டாள்.

''உங்கக்கா உன்னளவு அழகாய் பேசுவாங்களா?''

காலைத்தான் வாருகிறான்.... பெருமூச்சு விட்டவளுக்கு அக்காவின் அழுகை நினைப்பிற்கு வந்தது.

## 6

அம்மா வித்யாவதி எப்படி பேசினாலும் நந்தனா பதிலாய் தந்தது தன் கண்ணீரைத்தான்.

'முகமே வீங்கி கோரமாயிடுச்சு. அழுகையை நிறுத்து. பொண்ணுன்னா அழகாய், சொன்ன பேச்சு கேட்டு, சமைக்க உடுக்கன்னு இருக்கணும். அதே போல ஆணுக்குரிய குணாம்சம் என்ன தெரியுமா?

அக்காவின் மூக்குறிஞ்சலைத் தொடர்ந்து அம்மா விளக்கினாள்.

''கடுமையாய் உழைக்க உடம்பில வலு இருக்கனும். விவேகமான புத்தி இருக்கணும் - அப்பத்தான் சாமர்த்தியமாய் கைநிரம்ப காசு சம்பாதிக்கலாம். இப்படியாய் வர்ர ஒரு வரனைப் பார்க்க உனக்கு ஏன் கசக்கணும்?'

''இப்படியெல்லாமா அந்த நலவேந்தனைப் பற்றி அந்த சாவித்ரிம்மா'' கேட்டவளை.... முறைத்த வித்யாவதி,

'அதெல்லாம் இருக்கறதால்தானே அந்தப் பையன் குடும்பச் சொத்தைப் பெருக்கி, கடல் தாண்டி வியாபாரம் செய்து ஜெயிச்சிருக்கணும்?'

'ஆனா பிரசாத் எம்மனசை ஜெயிச்சிட்டாரும்மா' - முணங்கினாள்



நந்தனா.

'நீ வாழ்க்கையில தோத்துடக்கூடாதுடீ. அதுக்காகத்தான் இப்படித் தவிக்கிறேன்'

ஆனால் நந்தனா மசிவதாயில்லை.

இந்த நாடகத்தையும், இரவுகளில் தன் தாய் உறக்கம் பிடிக்காமல், எழுந்து உட்கார்ந்து தனக்குத் தானே புலம்புவதையும் பார்த்ததில்தான் இளையவள் நளினாவிற்கு இந்தத் திட்டத்திற்கான துணிவு திரண்டிருந்தது. சொல்லி விட வேண்டியதுதான்.

''சொத்தும் சாமர்த்தியமும் உள்ள மாப்பிள்ளையாய் தேடனாங்க எங்கம்மா. எங்கக்கா மறுக்கறதால்... நான் கல்யாணத்திற்கு சம்மதிக்கலாம்னு முடிவெடுத்தேன்....''

சில்லிட்ட விரல்களைப் பின்னி பிரித்தவள், தலை குனிந்தபடி சொல்லியே விட்டாள்.

அவனிடமிருந்து சலனமேயில்லை.

''அம்மா அக்காவுக்காக உன் வாழ்வை தியாகம் செய்யப் போறியா நளினா?''

இவனது கிண்டல் ஓயாதா?

ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

நலவேந்தனின் முகம் இறுகியிருந்தது.

''நீ ரொம்ப சின்னப் பெண். உலகம் அறியாத உனக்கு என்னைப் பற்றி என்ன தெரியும்?''

''நல்லவர் திறமையானவர்....''

''ஓஹோ?''

''தவிர எல்லோரும் கல்யாணம் கட்டிக்கத்தானே வேணும்?''

'அது அவசியந்தான். தவிர விசேஷங்களுக்கு இப்படி தனியா வர்றதை விட ஜோடியோடு வந்தால் அலங்காரமும் கூட. ஆனா என் வாழ்வில் ஏற்கனவே ஒரு பெண் உண்டு....''

நளினாவின் தலைக்குள் 'குப்'பென ஏதோ இறுகியது.

கண்களை மூடிக் கொண்டாள்.

வசதியான ஒரு வரன் வீடு தேடி வந்ததில், தனக்கு நல்லதாய் ரெண்டு ரவிக்கை தைத்து, கைக்கு கல் வளையலும் போட்டுக் கொண்ட அம்மா, நந்தனா மறுப்போடு, தன் மனதின் விருப்பையும் மெள்ளக் காட்டிவிட, விதவிதமாய் புலம்பலானாள்.

'அந்த காலத்துல ஒத்தைத் தாவணி போட்டிருக்கும் வரையில் பாண்டின்னு ஒரு ஆட்டம் ஆடுவோம். மண்தரையில அடுக்கடுக்காய் சதுரம் வரைஞ்சு, அதுக்குள்ளே சில்லு கல்லை வீசி ஒத்தைக் காலால் அதை மிதிக்கிறதும், தாண்டறதுமாய். ஒவ்வொருத்தியும் வழுவழுன்னு ஒரு சில்லைத் தனக்குன்னு பொத்தி வச்சிருப்பா. இப்பவுள்ள பெண்களுக்கு உள்ளங்கையில் சதா செல்லு! அந்த செல் ஃபோனை பிடுஞ்கிட்டா செத்துருவாளுக போல.' என்ற வித்யாவதி மூத்த மகளின் கைப்பேசியை பறிமுதலும் செய்து விட்டாள்!

செல் ஃபோன் மூலமே அக்காவிற்குப் பிரசாத்துடனான பரிச்சயம் பலப்பட்டிருக்க வேண்டும் – என்பதில் நளினாவிற்கு சந்தேகமில்லை.

அவன் பேசிய முதல் பட்டிமன்றத்திற்கு இளையவளும் அக்காவுடன் சென்றிருந்தாலும் பிரசாத்தின் வார்த்தை ஜாலம் நளினாவின் மனதில் பதியவேயில்லை.

நான்கு நாட்கள் கழிய,

'அவர் எப்படிப் பேசினாரில்லை?' என்று நந்தனா குழைய, இவளுக்குக் குழப்பம்.

''யாருக்கா? எப்படிப் பேசினது?''

''அந்தப் பட்டிமன்றத்துல....''

''நடுவர் நடுநடுவே பேசினது தமாஷாத்தான் இருந்தது. அதை நினைச்சுதான் அப்பப்ப நீ சிரிச்சுக்கறியா?'

'ச்சேச்சே. இடது கையால நுனி மூக்கை வருடியபடி எதுகை மோனையாய் பேசினவர்....'

உதட்டைப் பிதுக்கிய நளினா.... 'சரி... அவருக்கென்ன?' என்றாள்.



'அவரும் என்னை மறக்கலை. எஸ்.எம்.எஸ். அனுப்பியிருக்காரு'

செல்லைப் பிடுங்கி வாசித்தாள் நளினா.

''பனிச்சிற்பமோ பால் நிலவோ

பளிங்கு அன்னமோ... பிரமித்தேன்

ஒரே பார்வையில் என்னைப் பறித்தாய்...

பந்தாடுகிறாய் பாவை நீ

இனி என் பார்வை நீ....'

'இதென்னக்கா உளறல்?'

'கவிதை – உனக்கு புரியாது... போ'

'இந்தாளுக்கு உன் செல் நம்பர் எப்படிக் கிடைச்சது? அதைச் சொல்லுக்கா முதல்ல?

நந்தனா விழித்தாள்.

'நீதான் கொடுத்திருக்கே.... தப்புக்கா'

'மேடையிலிருந்து என்னையே பார்த்துட்டிருந்தார்.....'

'ஏன்னா வந்த கூட்டத்திலேயே நீதான் அம்சம். ஆனா மக்குப் பொண்ணு....'

''பேசி எண்:?'ன்னு சிறு துண்டு காகிதத்தில் எழுதி பென்சிலில் சுற்றி எம்மடியில போட்டார்'

'அசட்டுத்தனம்.... தவிர அசிங்கமாத் தோணலை...?'

'எனக்கும் அவர்ட்ட பேசணும் போலிருந்தது நளினா. அத்தனை பேரை பிரமிக்க வச்ச அந்த குரலை என் காது மட்டும் கேட்க பேசணும்னு ஒரு ஆசை'

'வேணாம்... இனி இது மாதிரியான உளறல் வந்தால் கண்டுக்காதே. அலட்சியப்படுத்தினால் நின்னுடும்.'

பெரியமனுஷியாய் தான் தமக்கைக்குத் தந்த ஆலோசனைதான் அலட்சியப்பட்டிருக்கிறது.

சிறுபிள்ளைத்தனமான ஆர்வம் இப்போது காதல் என்றளவில்

வளர்ந்து நிற்கிறது!

தொடர்பு கொள்ள இப்போது கைப்பேசி இல்லாதபோதும் நந்தனா பிரசாத் பற்றியேதான் பேசினாள்.

'எளிமையாய் கல்யாணம் செய்தாலும் போதும். பிரசாத்தின் அம்மா கையில் ஐந்து லட்சம் தந்துட்டால் அவங்க மறுக்கப் போறதில்லை....'

'நம்மிடம் அத்தனை காசு எங்கேக்கா?'

'இந்த வீட்டை விற்றால்....' ஆரம்பிக்கும் போதே தன் சுயநலம் புரிந்து தலைகுனிவாள் நந்தனா.

'அப்படியேனும் அந்த பிரசாத் வேணுமாக்கா?'

'மறக்க முடியலை நளினா....' என்று மூத்தவள் தன் மடியில் விழுந்து கதற, நளினா அந்த முடிவை எடுத்தாள்.

அது பற்றிய பேச்சை நந்தனாவிடம் ஆரம்பிக்க,

'என்ன தைரியம் நளினா உனக்கு? தனியாய் கல்யாண வீட்டுக்குப் போய் ஒண்டியா ஆம்பிள்ளைட்ட பேசினியா?'

'பேசினது நல்லதாப் போச்சுக்கா. அவர் அந்த நலவேந்தன் உனக்கு சரிவர மாட்டார்.'

நளினாவின் கண்கள் மின்னின.

'ஓ? போய் இதை அம்மாட்ட சொல்லு முதல்ல.'

ஆனா எனக்கு சரிவருவார்னு படுது!'

'விளையாடற பாரு'

''அவர்ட்ட இந்த வீட்டை மராமத்து பண்ணச் சொல்வேன் முதல்ல. அம்மா 18 வயசுப் பொண்ணா வாழ வந்த வீடு இது. பத்து வருஷம் குழந்தையில்லாமல் இருந்து, பிறகு நாம பிறந்ததும் இங்கேதான். இதை நல்லபடி காப்பாற்றி, இங்கு வாழறதைத்தான், அம்மா கௌரவமாய் தன் வெற்றியாய் நினைக்கறாங்க'

'சரி.... ஆனா இவர்.... பேரென்ன?'' புருவம் சுருக்கினாள் நந்தனா.

''நலவேந்தன்''

''அவரெதுக்கு நமக்கு காசு தரணும் - அதுவும்



எங்கல்யாணத்திற்கு?''

''ஆஹா.... அத்தனை ரோஷமிருக்கா எங்க அக்காக்கு?''

''கல்யாணத்தை வாழ்க்கைப் பிரச்சனைனுவாங்க. அதில் நீ விளையாடாதே நளினா''

அக்காவின் கரிசனையில் இளையவளுக்குத் தொண்டை அடைத்தது.

தன் அனுபவத்திற்கு மிஞ்சிய பிரச்சனை தான் இது.

அனுபவம் என்பது தோல்விகளிலிருந்து பிழிந்து எடுக்கப்படும் மருந்தாமே?!

வாழ்க்கையில் தோற்று அதை எடுத்து பயனென்ன? சின்ன மகளின் அவதியைக் கண்டும் அம்மா சௌக்கியமாய் இந்த மாளிகையில் இருந்துவிடப் போகிறார்களா? தனக்காக தன் சின்னக்கிளி செய்த தியாகமல்லவா இது என்று மருகி கருகி விட மாட்டார்கள்?

ஆதாயக் கணக்கிட்டு தான் ஆரம்பிக்கும் வாழ்வில் ஆனந்தமிருக்குமா?

சந்தேகம்தான்....

யோசிக்க யோசிக்க தன் மீதே வெறுப்பு ஊறியது நளினாவிற்கு. ஒரு மேடைப் பேச்சில் கேட்டு, தான் முகம் சுளித்த ஒரு துணுக்கு இப்போது அசந்தர்ப்பமாய் ஞாபகத்துள் வந்து நின்றது -

திருமணமாகாத தன் மகள் கர்ப்பமானதைக் கண்ட தகப்பன் எகிறி குதிக்கிறார்.

யார் இதற்குக் காரணம் என்பதைக் கேட்டறிந்து, துப்பாக்கியுடன் ஆவேசமாய் அவனை அழிக்கவும் கிளம்பியாயிற்று. அந்த ஏமாற்றுக்காரனின் வீட்டை உதைத்துத் திறந்து, இளைஞனின் நெற்றியில் துப்பாக்கியை அழுத்தி கத்துகிறார்.

'பணமிருக்கும் திமிரில் என் மகளை ஏமாற்றி விட்டாயே - செத்துத் தொலை' என்றவரிடம், பதிலுக்கு அவன் பேரம் பேசுகிறான்.

'உன் மகளுக்குப் பெண் பிறந்தால் பத்து லட்சம் தருகிறேன்'

'அதுவே பையனாய் பிறந்தால்?'

'இருபது லட்சம்!'

துப்பாக்கி தழைய, மரியாதையாய் கைக்கட்டியபடி கேட்கிறான் அந்த தகப்பன் -

'ஒரு வேளை கரு தங்காவிட்டால், என் மகளுக்கு இன்னுமொரு வாய்ப்பு தர வேண்டும் நீங்கள்!'

தான் செய்ய நினைப்பதும் இந்த ரக வியாபாரமோ? நளினாவிற்குள் கசப்பு ஊறியது.

குமட்டியது.

நலவேந்தன் சொன்னது என்ன...?

'என் வாழ்வில் ஏற்கனவே ஓர் பெண் உண்டு' என்றுதானே?

கேட்ட அதிர்ச்சியில் பொறி கலங்கி, சற்று தெளிவானதும் நளினா கேட்கத்தான் செய்தாள் -

'அப்படீன்னா.... அவங்களையே கல்யாணம் செய்துக்கலாமே நீங்க?'

'கல்யாணத்திற்கான பொருத்தங்கள், தகுதியெல்லாம் அவளிடம் இல்லைனுதான் சொல்லணும். அத்தையம்மா எதிர்பார்க்கும் வயசு, அழகு, அந்தஸ்து, படிப்பு.... குணமெல்லாம்.... உன்னிடம் இருக்கு நளினா'

இவள் மௌனமாய் இருக்க, இறங்கும் போது தன் விலாச அட்டையை அவளிடம் தந்தவன்,

'யோசிச்சு முடிவெடு நளினா' என்று மிக நாகரீகமாகத்தான் விடைபெற்றுக் கொண்டான்.

## 7

ஜமுனாம்மாள் சுவாமி அறையில் விளக்கேற்றச் சொல்லி, கும்பிட்டாள். காலை நலவேந்தன் அக்கல்யாணத்திற்குப் போய் சாப்பிட்டுக் கிளம்பியிருப்பான். பெண்ணின் தாய் வித்யாவதி, தன் தம்பி மகனைப் போய் நிச்சயம் பார்த்திருப்பாள். தன் தோழி சாவித்ரிக்கு ஃபோன் மூலம் தகவல் தர, 'சட்'டென்று திருமணம்



தகைந்து விடுமோ? அத்தையின் மனம் ஆசையில் அடித்துக் கொண்டது. மூச்சு வாங்க இங்கும் அங்குமாய் நடந்தாள் -

பத்து வருடங்களுக்கு முன்பு தலை நிறைய திட்டங்களும், ஆர்வமுமாய் வீடு வந்து இறங்கிய நலவேந்தனை நினைத்த ஜமுனாவிற்கு இப்போதும் கண்கள் கலங்கின.

'வெளிநாட்டுக்குப் போய் மேலே படிக்கணும், நிரம்ப சம்பாதிக்கணும்னு எல்லாரும் பறக்க, நீ இங்கே...? உனக்குப் பொழுது இங்கே எப்படிப் போகும் நலா?' வாஞ்சையாய் விசாரித்தாள் அன்று.

'நம் குடும்ப சொத்தெல்லாம் இங்கேதான். அத்தனைக்கும் நான் ஒற்றை வாரிசில்லையா அத்தை? நானும் பார்த்து, விருத்தி பண்ணலைன்னா எப்படி? கைவேலை, சிறுதொழில் பற்றியும் அதை ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்ற படிப்பைத் தான் நான் தேர்ந்தெடுத்து படிச்சேன். கிராம சுயஉதவிக் குழு பெண்கள் உதவினால், அத்தனைப் பெண்களுக்கும் பகுதி - நேர, அல்லது முழு நேர வேலைத் தரலாம்'

''அப்படி இந்த ஊர்ல என்னப்பா செய்யக்கூடும்?''

''இங்கே வாழைநார், பாக்குமட்டை, சணல்ன்னு பல கச்சா பொருட்கள் சகாயமாய் கிடைக்குமே. இதில் ரகரகமான கலைப் பொருட்களும், தட்டு, பைகள் எல்லாம் தயாரிக்கலாம் அத்தை. இவை இயற்கையைப் பாதிக்காத பொருட்கள் என்பதால் அரசாங்க சலுகை அதிம். அரசு வரி விலக்கும் உண்டு. முறையான பயிற்சி தந்தால், செய்யப்படும் பொருட்களை நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியது என் பொறுப்பு....''

''அப்ப நீ இங்கேயே இருப்ப? நம்ப ஊர் பெண்களுக்கும் வேலை நிச்சயம்.... தரிசாய் கிடக்கும் நம் நிலமெல்லாம் உபயோகப்படுத்துவ?''

'அதேதான்'

இப்படி உயர் லட்சியம், உத்வேகத்துடன் ஊர் வந்தவனை தகப்பனின் நடவடிக்கைகள் உலுக்கின.

முகத்திலும் உடம்பிலும் ஆரோக்கிய் குறைவு அப்பட்டமாய் தெரியுமளவு குடிக்கு அடிமைப்பட்டிருந்தார். தோப்புகள் பராமரிக்கப்படவில்லை. நிர்வாகத்தின் அலட்சியம் விளைச்சலில்

தெரிந்தது.

முறையான கணக்கு வழக்கில்லை. வேலையாட்களின் முகத்து அதிருப்தி. பூர்வீக சொத்து என்பதால் நலவேந்தனின் ஒப்புதல், கையெழுத்து இன்றி எதையும் விற்க முடியாது என்றாக, பல நிலங்கள் கடன்ல மிதந்தாலும் இவர்களுக்குச் சொந்தமாகவே இருந்தன.

விற்பது பற்றி பெற்றவர் பேச்செடுக்கும் முன் மகன் முந்திக் கொண்டு முழு மூச்சாய் பண்ணையைச் சீராக்கும் வேலையில் இறங்கி விட்டான். அதைக் கண்டு பெருமை எல்லாம் படாவிட்டாலும் பம்மிக் கொண்டார் நலவேந்தனின் அப்பா சந்திரசேகரன்!

கணினி மூலம் தகவல்கள் திரட்டி, சென்னைக்கும் மும்பைக்குமாய் ஓடியவன், நகரிலிருந்து இயற்கைப் பொருட்களிலிருந்து கைவினைப் பொருட்களை உருவாக்கும் நிபுணர்களைக் கூட்டிவந்து உள்ளூர் மக்களுக்குப் பயிற்சி அளிக்க இரு வருடங்களில் தொழிற்சாலை ஒன்று எழும்பி விட்டது.

நார்கள், மட்டை, சிரட்டி என இவர்களிடமிருந்தது போக மூலப்பொருட்கள் அக்கம்பக்கமிருந்து திரட்டப்பட்டன. செய்நேர்த்தி கூட, ஏற்றுமதி போக, நம்நாட்டின் கருத்தரங்குகள், பெரிய வீட்டுக் கல்யாணங்கள், சர்வதேச விளையாட்டு அமைப்புகளிலிருந்து ஆர்டர்கள் தேடிக் குவிந்தன.

ஆர்டர்களுக்கு ஏற்ப புது டிஸைன்களை உருவாக்க நிபுணர்களும், வெளிநாட்டவர்களும் வந்தால் தங்குவதற்கு ஏற்ற வகையில் தோப்புனுள்ளேயே சில அறைகளைக் கட்டினால் சௌகர்யம் எனப்பட, கான்ட்ராக்டருக்குச் சொல்லி விட்டவன், தங்களது பண்ணை 'அறை'யைப் போய் பார்க்க் கிளம்பியதும் ஏற்பட்டது அந்த அதிர்ச்சி....!

தன் இளவயதில் பார்த்த 'அறை' இப்போது நவீனமான வீடாய் உருப்பெற்றிருந்தது முதலில் அவனுக்கு இனிய அதிர்ச்சியாகத்தான் இருந்தது. தன் தகப்பன் எடுத்துக்கட்டியிருந்ததை சிலாகிப்புடன் பார்த்தவனுக்கு, வீடு உள்புறமாய் பூட்டப்பட்டிருந்தது குழப்பமாயிருந்தது. இவனைக் கண்டதும் காவலாளி கோம்பை நாய்களைக் கட்டி விட்டு, மறைய, நலவேந்தன் குழப்பத்துடன் பண்ணை வீட்டின் கதவைத் தட்டினான். வாயில் ஏற்பட்ட புண்ணிற்காய், அப்பாவை மருத்துவ பரிசோதனைக்கு கோயம்புத்தூர்



கூட்டிச் சென்றவன் இவன்தான். அவர் திரும்ப இரு நாட்களாகும்.... ஆக அப்பா இல்லாத வீட்டில்....?

கதவு திறந்தது.....

திறந்த தேக்கு கதவின் பின் நின்றவள் ஒரு பெண்!

அப்படி ஒரு உயரமும் வாளிப்பும், முக்கியமாய் நாகரீகமான ஒருத்தியை அங்கே எதிர்பார்க்காதவனுக்கு பேச்சு எழும்பவில்லை. பண்ணை மாறி வந்துவிட்டோமோ எனுமளவில் ஒரு திகைப்பு. முகத்தில் கேள்வியுடன் கதவைத் திறந்தவள் சில நொடிகளில் சுதாரித்து விட்டாள்.

"அப்பாக்கு.... உடம்புக்கு ஏதும்?" கவலையாய் கேட்டாள்.

"நல்லாயிருக்காங்க.... நான்...."

"அப்பா ஜாடை அப்படியே விழுதே...." நிம்மதியானவள் இளமுறுவலுடன் பேசினாள். "இப்போ மாறிட்டாங்க - ஆனா அவங்க இளவயசு படங்களைப் பார்த்திருக்கேன்... உள்ள வாங்க...."

அழுத்தமாய் வாசலில் நின்றவன் கேட்டான்.

"நீங்க....?"

இம்முறை அவளால் உடனே சுதாரிக்க முடியவில்லை..

"நான்.... உங்கப்பாக்குத் துணையாய், உதவியாய் இங்க இருக்கேன் தம்பி"

சொன்னவளின் முகம் கன்றியது -

விழிகள் நிமிரக் கூடாமல், தாழ்ந்து தத்தளித்தன.

"வர்றேன்"

"இளநி வெட்டச் சொல்லவா?"

"வேணாம் - நன்றி"

வெளியேறியவனின் மனக்கொதிப்பு லேசில் அடங்கவில்லை. ஆனால் ஆரம்ப எரிச்சல் அடங்கிய பின்பு அப்பெண்ணின் மீது பரிதாபந்தான் மிஞ்சியது.

ஆத்திரமெல்லாம் தன் தகப்பன் மீதும் அவரைத் தட்டிக் கேட்காமல் துள்ள விட்டிருந்த அத்தையம்மாளின் மீதும் திரும்பியது.

தன் மீது பாய்ந்த தன் தம்பி மகனின் முன் அத்தை ஜமுனா பம்மி நின்றாள்.

''இத்தனை நடந்திருக்குது - உங்களால் தடுக்க முடியாதுன்னா, எனக்குச் சொல்லியிருக்கலாமே?''

''ரொம்ப விவரமாய் ஏதும் தெரியாதுப்பா... தம்பி வீடு தங்காமல் பண்ணை வீட்டுல தங்குனதுல சந்தேகம்.... அவ்வளவுதான்''

''கேட்டுத் தெரிந்து முறைப்படுத்தறதுதானே வீட்டுப் பெரியவங்க கடமை?''

''நான் ஒண்ட வந்தவப்பா. வீடு சுத்தமாய், வீட்டு சாமான் வெளியே போகாமல் பார்த்துக்கறது....''

''கௌரவம் குறையாமல் பார்ப்பது அதைவிட அவசியமாச்சே அத்தை?''

ஜமுனாம்மாளுக்கு 'மளுக்'கென கண்கள் நிரம்பி விட்டது. உள்ளூரப் பொங்கிய மகிழ்வால் தம்பி சீரழிந்து கொண்டிருந்தாலும் அவன் மகன் பண்ணையைச் சீராக்கி விடுவதோடு தானும் கம்பீரமாய் வாழுவான் போலவே என்றப் பெருமிதம்''

ஆனால் அந்தப் பெருமை அம்மிக்கல் பட்ட இஞ்சி போல சில மாதங்களில் 'நச்'சென நசுங்கிப் போனது!

நலவேந்தன் வெகு அழகான ஒரு பெண்ணை தனி வீடெடுத்து குடிவைத்திருப்பதாய் கேட்டபோது, தன் குடும்பத்தின் கடைசி துணுக்கு வெளிச்சமும் அணைந்து போனதாய் அவள் திகைத்து நின்றாள்.

## 8

ஏழு வருடங்களுக்கு முன் நடந்த கதையை மனதிற்குள் ஓட்டிப் பார்த்த அத்தை ஜமுனாம்மாளுக்கு அதிலேயே மூச்சிரைத்தது. ஒரு சொம்பு தண்ணீரை வாங்கிக் குடித்தவள் படுத்துவிட்டாள்.

நலவேந்தன் சொன்னது போல, ''வீட்டுப் பெரியவளாய்' தான் கேள்விப்பட்டதைப் பற்றி தம்பி மகனிடம் பட்டும் படாமல் விசாரிக்க, அவனது பதிலும் அதே ரீதியில் வந்தது.



''அத்தை, பிறர் சொல்லிப் போனது அறிவு.

அனுபவித்து அறிவதுதான் ஞானம். இரண்டுமே ஒன்றை ஒன்று ஒட்டித்தான் காற்றென்பது உயிரில்லை. ஆனால் காற்றில்லாமல் உயிரில்லையே - அதுபோல...''

இந்த தத்துவார்த்த பதில் அயர்ந்து போனவள் மேலும் தோண்டித் துருவ, துணியவில்லை.

வெற்றிப் படியில் 'சரசர'வென ஏறியவனிடம் கல்யாணப் பேச்சை எடுத்தால் நழுவினான். ஆனால் ஒரு நல்ல பெண்ணாய் பார்த்து நலவேந்தனுக்குக் கட்டி வைத்து விட்டால், இப்பிரச்சனைகள் ஓய்ந்து, கௌரவம் மீண்டுவிடுமெனப்பட்டாலும், பெரிய குடும்பத்துப் பெண்களை எடுக்க ஜமுனாம்மாளுக்கு தயக்கம்தான். சாதா இடத்துப் பெண்ணை மருமகளாக்கினால் இளப்பமாகிப் போகுமே என்ற குறை, ஆனால் நாளாக நாளாக நலவேந்தனின் வெற்றிக் கூடியதில் அவளுக்குப் பூரிப்புதான்.

நலவேந்தன் வெளியூர் போன சமயங்கள் தவிர, அவன் வெளியேத் தங்கினதும் இல்லை.

கல்லூரி முடிந்து ஓரிரு ஆண்டுகள் ஜீன்ஸும் சட்டையுமாயிருந்தவன் பிறகு பெரும்பாலும் வெள்ளை வேட்டி, சட்டை என்று மாறிவிட, அவன் தோற்றம் வெகு கண்ணியமாயிருந்தது. வியாபார நிமித்தம் வரும் பலரும் நலவேந்தனைப் பற்றி புகழ்ந்து பேசியதில் அத்தையம்மாளின் காது குளிர்ந்தது.

'இளமை தவறான பலவற்றை நம்புகிறது.

முதுமை சரியான பலவற்றை சந்தேகிக்கிறது' என்று, அவன் ஒரு இளம் சிரிப்புடன் சிலமுறை சொல்ல முதியவள் தன் சந்தேகங்களைப் பிறகு அவனிடம் கேள்வி ஆக்கினதில்லை! ஆனால் அவை அவளுக்குள்ளே குறுகுறுத்தபடியேதான் கிடந்தது.

மாப்பிள்ளை வீட்டார் வந்தால் தன் வீடு ஓரளவு அந்தஸ்தாய் தோன்ற வேண்டுமென வித்யாவதி தன் பழைய பங்களாவிற்கு செய்த அலங்காரங்கள் கிழவிக்கு ஒப்பனை செய்து மனையில் உட்கார வைத்தது போலத்தானிருந்தன!

அதுவும் நந்தனா முரண்டியதில் அங்கே கல்யாணகளையும்

சேரவில்லை.

'அந்த பிரசாத் வீட்டிற்கு மருமகளாகிப் போனால், தண்ணீர் சுமந்து, பெருக்கி, சமைத்து, பாத்திரமும் துணியும் அலசணும்க்கா....''

''முயற்சி பண்ணுவேன்... செய்திடுவேன்' துணிவாய் 'அதற்குப் பதிலாய் அவரும் தன் பேராசையை விட்டுக் கொடுத்தால் என்ன? நம்மால் லட்சங்களைத் தர முடியாதே....''

''தங்கைக் கல்யாணத்திற்காகத்தானே.... அவர் அம்மா சந்தோஷத்துக்காய்....''

'நம்ப அம்மாவும் சந்தோஷப்படணுங்க்கா....' என்று நளினா 'உனக்கும் கல்யாணமாக வேண்டிய ஒரு தங்கையுண்டு' என்பதைச் சொல்லாவிட்டாலும் அது புரிந்த மூத்தவள் விம்மினாள். சலிப்பாய் தன் சகோதரியை பார்த்த நளினாவிற்கு மனதின் ஓரமாய் அவள் மீது ஒரு மெச்சுதலும்தான்.

'இந்த சிற்றூரில் நம்மைத் தேடி ஒரு கோடீஸ்வரன் வருவானேன்? அவனில் ஏதோ குறையிருக்கும்' என்று அக்கா சொன்னது சரியாகத்தான் போனது?

அத்தனைக் கம்பீரமும் கண்ணியமுமானவன் தன் வாழ்வில் ஏற்கனவே ஒருத்தியோடு சம்பந்தப்பட்டுவிட்டு, கல்யாணத்திற்குப் பெண் தேடுவானேன் - அதுவும் அந்தத் தகுதிகள் தன்னிடம் இருப்பதாய் வேறு சொல்லிக் கொண்டு....?

குழப்ப சிந்தனைகளுடன் அக்காவைப் பார்த்த நளினா -

''அக்கா காலை அல்லது மாலை கொஞ்ச நேரம் தோட்டத்தில் இரு... களையெடுக்க, நீர் பாய்ச்சன்னு....'' என்றாள்.

'ஏன்?' என்பதாய் மூத்தவளின் புருவங்கள் உயர்ந்தன.

''கொஞ்சம் வெளிறலாத்தான் தெரியறே''

''வெளியில் போனா அம்மா திட்டுவாங்க''

''அ.... அதுக்கெல்லாம் பயப்படறவளா நீ? இப்பவே மாமியாருக்காகத்தான் பேசறே....?''

உதடு துடிக்க நந்தனா திரும்பிக் கொள்ள, நளினாவிற்குப் புரியவில்லை. இந்த நேசம்.



ஆக இதுதான் காதலோ.... என்று நினைத்தாள்;. அதுதான் மூத்தவளை இப்படி பிடித்தாட்டுகிறதோ?

அது ராட்டினம் போல தன்னால் ஏறும்வரை வேகமாய் சுழற்றி கிறுகிறுக்க வைக்குமோ?

அந்த மயக்கத்தில் இதுவரை தாய் தங்களுக்குச் சொன்ன பாடங்கள் அத்தனையும் நந்தனா மறந்தது போலத்தான்

இப்போது பருவம் இவர்களை வேறு ஒரு ராட்டினத்தில் ஏற்றிவிட்டிருக்கிறது! ஏற நினைக்காதவர்களையும் தூக்கிப் போய் சுழற்றி அடிக்கிறது.... கிளுகிளுவென்ற சிரிப்பும், தவிப்புமான சுழற்சி? அக்காவிற்குத்தானே அந்த அவஸ்தை.... தனக்கென்ன?, தானும் அந்த உணர்வுச் சுழலில் சிக்கி விட்டோமோ? தாய்க்கு உதவும் வேகத்தில் நலவேந்தனை போய் பார்த்ததும், பேசியதுமெல்லாம் சரி.... ஆனால் ஏன் சதா அவனைப் பற்றிய நினைப்பு? வாய்க்குள் இட்ட தேன்மிட்டாயின் சுவைக்கசிவு போல அவனோடு செலவழித்த அந்த நேரத்தின் நினைவு புரண்டு புரண்டு இனிக்கிறதே?! கடைசியில் நலவேந்தன் சொன்னது பெரும் அதிர்ச்சிதான்.... ஆனால் தொடர்ந்த பேச்சில் அதைப் பெரிதுபடுத்தத் தோன்றவில்லை.

அந்த 'மற்றொருத்தி'யிடம் கல்யாணப் பொருத்தங்கள், தகுதிகள் ஏதுமில்லை என்றுதானே சொன்னான்?

'யோசித்துச் சொல்' என்றுவிட மனம் இதிலேயே நின்றது! ஆனால் முடிவேதும் எடுக்க முடியாத திணறல்! நலவேந்தன் தன்னை அழைத்துப் பேசினால் 'சட்'டென முடிவு செய்யலாம்.... அவன் மனதிலும் தானே இருப்பதால் சம்மதம் சொல்வதென்று நளினா தன் அக்காவின் 'கைபேசி' என்னைத்தான் தந்திருந்தாள் - அம்மாவினால் கைப்பற்றப்பட்ட அதை, விடாமல் 'சார்ஜ்' செய்வதும், வந்த அழைப்புகளை நோட்டமிடுவதும் இவள்தான். பிரசாத்தின் பற்பல அழைப்புகளை உதாசீனப்படுத்தி விட்டு தனக்கு நலவேந்தனிடமிருந்து தகவல், அழைப்பு உண்டா என்பதைத் தேடும்போதும் உள்ளத்தில் ஒரு குற்ற உணர்வின் குறுகுறுப்பு.

ஆனால் அவனிடமிருந்து அழைப்பில்லை.

வேலை மும்முரத்தில் தன்னை மறந்துவிட்டானோ? அல்லது 'அந்த' பெண், அவன் மனதை இளக்கி மாற்றிவிட்டாளா? தான் அலட்சியப்பட்டுப் போனதாய் எண்ணியவளுக்கு அது வருத்தமாய்....

போக்குவரத்து விதிகளை யாவரும் கடைப்பிடித்தால் காதைக்கிழிக்கும் ஹாரன்களுக்கு அவசியமில்லையே? பாதசாரிகள் எப்போதும் நடக்க வேண்டிய இடத்தில் நடந்து, கடக்க வேண்டிய இடத்தில் கடந்து செல்லுங்கள். தெருவில் காப்பி குடித்த காகித குப்பையையோ, உபயோகித்த பிளாஸ்டிக் பைகளையோ போடுவதில்லை என்று வைராக்கியம் கொள்ளுங்கள். தொழிற்சாலை கழிவுகள் தண்ணீரில் கலந்து நச்சுப்படுவது சமுதாயச் சிந்தனையற்ற முதலாளிகளின் போக்குதான். சேமிப்பு என்பதுகூட ஒரு சமுதாய சிந்தனைதான். மழையை அறுவடை செய்து தண்ணீரை சேமியுங்கள். ஆடம்பர செலவை தவிர்த்து பணத்தை சேமியுங்கள். வாகனங்களை குறைவாய் பயன்படுத்தி எரிவாயுவை சேமியுங்கள். இங்கு அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள். மின்வெட்டை காரணம் காட்டி வீட்டு விளக்குகளை அணைக்கும் நீங்கள் விடிந்து வெகு நேரமாகியும் தெருவிளக்குகளை அணையாதிருப்பது ஏனோ?

மனிதாபிமானம் கூட சமுதாயச் சிந்தனையின் ஒரு வெளிப்பாடுதான். ரோட்டில் விபத்துகளை பார்க்க நேரிட்டால் உங்களாலான உதவிகளை தயவு செய்து செய்யுங்கள். மருத்துவருக்கு போன் பண்ணலாம். ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லலாம். பண உதவி செய்யலாம். குறைந்தபட்சம் அவர்கள் வீட்டிற்காவது தெரியப்படுத்தலாம். இப்படி ஒன்று செய்யாமல் நமது சிறிதுநேர பொழுதுபோக்கிற்காக எட்டி வேடிக்கை மட்டும் பார்த்துச் செல்வது நிச்சயம் சமுதாய உணர்வில்லாததுதான். கண்பார்வையற்றோர், முதியோர், அனாதைகள், ஏழைகள் என்று நமது உதவிக் கரத்தை பற்றிக் கொள்ள ஆயிரம் கைகள் இருக்கிறது. நம்மால் தனித்து செய்ய முடியாவிட்டாலும்கூட ஏதாவது ஒரு தொண்டு நிறுவனத்துடன் நம்மை இணைத்துக் கொண்டு செயல்படலாம்.

இன்னும் போதை மருந்து, புகையிலை, எய்ட்ஸ், பெண் சிசு வதை, குழந்தை தொழிலாளர் போன்றவைகளுக்கு ஏதாவது ஒரு முறையில் எதிர்ப்பைக் காட்டுங்கள். கண்தானம், ரத்ததானம், லஞ்சத்தை ஒழிப்பது, மரக்கன்று நடுதல் என்று விழிப்புணர்ச்சி ஏற்படுத்துங்கள். லஞ்சத்திற்கு ஒரு நாளும் துணை போகாதீர்கள். வரி செலுத்துவதில் விழிப்பாயிருங்கள். கடைகளில் ரூ.10 குறைக்கிறார் என்பதற்காக வரியில்லாமல் அதை செலவழிக்கிறது. கொலை, கொள்ளை, விபச்சாரம் தீவிரவாதங்களை ஒழிப்பதில் காவல்துறைக்கு நண்பனாய் இருங்கள். ஒன்றுமே இல்லாவிட்டாலும் தினமும் உங்கள் தெருவில் உள்ள ஒரு செடிக்கு ஒரு வாளி தண்ணீராவது ஊற்றுங்களேன்? இந்த சமுதாயம் செழிக்கும். உங்கள் பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே சொல்லிக் கொடுங்கள். அமெரிக்காவிற்கு அவர்களை அனுப்பி படிக்க வைத்தாலும், அவர்களின் சமுதாய சிந்தனைதான் இந்தியாவின் எதிர்காலம் என்று. ■



ஏன் ஏக்கமாய் கூட இருந்தது.

தன்னைத் தேடி வந்து பேசியவள், தன்னை அழைக்காதது பற்றி நலவேந்தனும் இப்படியே நினைக்கக் கூடுமே? இதேப் போலவே தவிப்பும், வருத்தமும், துளி ஏக்கமுமாய் தன் அழைப்பிற்காய் காத்திருக்கிறானோ. அவன்? தாய் தன்னிடம் தந்து வைத்திருந்த நந்தனா 'கைபேசி'யை எடுத்தவள், மனப்பாடமாக இருந்த அந்த எண்களை மன படபடப்புடன் ஒவ்வொன்றாய் அழுத்தலானாள்....

மேலும் பதிலின்றிக் கழிந்த மூன்று நாட்கள் நரகந்தான்! ஆனால் நான்காம் நாள் காலை எழுந்தவளின் மனம் ஏனோ நெளிந்து விட்டிருந்தது.

எப்படியிருந்தாலும் கடவுள் விட்ட வழி என மனம் ஏற்றுக் கொண்டதால் விளைந்த நிம்மதி.

ஆற அமரக் குளித்தவள், தலை உலர்த்திப் பின்னி, நேற்று மாலை தொடுத்து வைத்திருந்த மல்லிகைச் சரத்தை சூடிக் கொண்டாள்.

வீட்டு மலரின் மணம் மயக்கியது.

பின்னலின் பூ பாரம், உள்ளத்தின் கனத்தைக் குறைத்து விட்டது.

போலொரு மலர்ச்சி!

கண்ணுக்கும் கவனமாய் மையெழுதியவள், இத்தனை அலங்காரத்திற்கு சற்று வெளிறிய நைலக்ஸ் பொருத்தமில்ல என்று பட, ஆரஞ்சு நிற செமி-க்ரேப் புடவையை சுற்றிக் கொண்டாள்.

கூடத்திற்கு இப்படி வந்த தன் இளைய மகளை வியப்புடன் பார்த்தாள் வித்யாவதி -

'பொண்ணுங்க இப்படி அம்சமாயிருந்தால், வாழ்வும் அப்படியே அமையும். மூத்தவ அழுது ஆகாத்தியம் பண்ணுரது அவங்களுக்குத் தெரிஞ்சு போச்சு போல.... இல்லன்னா இப்படி ஒரு கோரிக்கை வருமா.... அதுவும் நம்மைப் போல பெருந்தனம் குடும்பத்துக்கு?'

யோகாவிடம் பேசுவது போல, அம்மா தன்னிடம் எதையோ சொல்ல முயலுவது புரிந்தது.

முழுக்க முதுமை அப்பாத முகம் அம்மாவிற்கு.... ஆனால் இன்று அதில் கலக்கம் அதிகம்...

பரிவுடன் தாயிடம் கேட்டாள் - ''என்னம்மா...?''

''யோகம், சின்னவளுக்குப் பால் கொண்டா....''

''காலையில சாவித்ரியிடமிருந்து ஃபோன் வந்தது நளினா....''

இவளுக்குள் குலுங்கியது!

''பண்ணை வீட்டுக்காரங்க அனுப்பித்தானே அவ இங்கே வந்தது - இப்போ வெளிப்படையாவே கேட்டுட்டாங்க.... நீ பாலைக் குடி முதல்ல....''

ஆனால் அது நெஞ்சுக்குள் முட்டி நின்றது.

''மூத்தவ விஷயம் அசலூர் வரை நாறிடுச்சு போல,.... இனி அவளுக்கு மிச்சமிருக்கற வழி, அந்தப் பாட்டுப் பரதேசிக்கு வாழ்க்கைப்படறதுதான்!''

நான் எப்படியோ வளர்த்த பொண்ணு ஒட்டு வீட்டில் மாமியார்ட்ட இடிபட்டு குடித்தனம் பண்ணணும்னு வித்திச்சிருக்கே....''

பெருமூச்செறிந்தாள் வித்யாவதி.

''இதையாம்மா அந்த சாவித்ரி சொன்னாங்க?''

''எப்படி மூத்தவ விஷயம் தெரியும்னு அடுத்ததரம் சாவித்ரிட்ட கேட்டுறணும்.''

'''சரி ஃபோன்ல அவங்க சொன்ன விவரமென்ன?''

மென்று விழுங்கிய வித்யாவதி மெள்ள சொன்னாள் -

''இளையவளை அதாவது உன்னை பண்ணை வீட்டு மருமகளாக்க விரும்பறாங்களாம்!''

கேட்டவளின் உள்ளேப் பெருகிய மகிழ்வலை ஒன்று இவளது வருத்தத்தையும் ஏக்கத்தையும் அடித்து சாய்த்தது!

## 9

'சூரியன் ஒன்றுதான் - உருகுவதா இறுகுவதா என்பது வெண்ணையா அல்லது களிமண்ணா என்பதைப் பொறுத்தது' என்பார்களே? அதே போல திருமணம் என்பது ஒரு ஆணும்



பெண்ணுமாய் சேர்ந்து தொடங்கும் வாழ்வு அதை வெற்றியாக்குவதோ அல்லது சொதப்புவதோ அந்த இருவர் கையில்தான். இப்படி தன்னைத் தேற்றிக் கொண்டாலும் நளினாவின் உள்ளே ஒரு ஓரமாய் பயத்தின் நமநமப்பு!

நல்வேந்தனைச் சந்தித்த போது நிகழ்ந்தவற்றைத் தன் மனதுள் ஓட்டினாள் - அன்று தன் வாழ்வில் ஒரு பெண் இருந்ததாய் அவள் சொன்னதும் அவள் என்ன செய்திருக்க வேண்டும்?

'காரை நிறுத்துங்க' என்று உத்தரவிட்டு, தோரணையாய் இறங்கி நின்று அவனுக்கு ஒரு பிரசங்கம் விட்டிருக்கலாம். 'பிறகு எந்த தைரியத்தில் எங்க வீட்டில் பெண் கேட்டு ஆள் அனுப்பனீங்க? நாங்களுமே விவரமாய் விசாரிக்காமல் இப்படி ஓடி வந்தது முட்டாள்தனம்தான். இப்பவேனும் உண்மையைச் சொன்னதற்கு நன்றி' - என இறுதியாய் கைகளை அறைந்து கூப்பி அவனை அனுப்பி வைத்திருக்க வேணும்.

ஆனால் இவளோ பல ஈக்கள் நுழையுமளவிற்கு வாயைத் திறந்து வைத்தபடி அவன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாளே! நலவேந்தனும் சாமர்த்தியமாகத்தானே பேசினான் -

'உனக்கு வேத்தாள் மூலம் தெரிய வரும் முன் நானே தெரியப்படுத்திடறதுதான் முறை. வேண்டிய பேரும் பணமும் சம்பாதிச்சுட்டாலும் எனக்கென்று ஒரு வாழ்வு.... குடும்பம் அமையணும்னு நான் இப்போ உனருகிறேன். எங்க அத்தை எனக்குப் பல நாட்களாய் பெண் தேடினாலும், என் சம்மதம் ஓரளவு கிடைத்த பின்பு இப்போ தான் தேடல் மும்முரப்பட்டிருக்குது. வியாபாரிகளுக்கும் குடும்ப அந்தஸ்து முக்கியந்தான். நான் யாரையும் வீட்டிற்கு அழைப்பதில்லை எல்லா விருந்துகளும் ஹோட்டல்களில்தான். மற்றவர்களும் என்னைத் தங்களது வீட்டிற்கு அழைத்து கௌரவப்படுத்துவதில்லை....''

அவன் 'முறை', 'கௌரவம்' பற்றிப் பேசுவதை குழப்பத்துடன் கேட்டிருந்தாள்.

இன்னொரு பக்க புத்தி, அவன் தன் காரை மெதுவாக ஓட்டினாலும் சீரான லாவகத்துடன் செலுத்துவதைக் கவனித்திருந்தது! அவனது 'சென்ட்' மிக விலையுயர்ந்ததாய் இருக்க வேணும் - நாசியைக் குடையாத நறுமணம் என்ற ரசனையும் வேறு! அவளது அசட்டு முகபாவத்தைப் பார்த்தோ என்னவோ, நலவேந்தன் மேலும்

விளக்கினான்.

'நாம் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ கல்யாணம் அவசியம். என் அத்தையம்மாள் தன் கணவரோடு இருந்திருந்தால் கம்பீரமான மனுஷியாய் வாழ்ந்திருப்பாங்க.... அப்பா இறந்த பிறகும் கூட, எங்க வீட்டை அவங்க கவனித்ததால்தான் நானும் நிம்மதியாய் வேலையில் ஈடுபட முடிந்தது. ஆகக் கல்யாணம் சரி. அதற்கு இடறலாய் இருக்கக் கூடிய தகவலை உன்னிடம் சொல்லிட்டேன். யோசிச்சு முடிவெடு நளினா...'

வியாபார ஒப்பந்தம் போலவே பிசிறின்றிப் பேசி அவளைப் புன்னகையுடன் இறக்கி விட்டான்.

பிறகு ஆரம்பித்தது இவளுக்குள் அந்த ராட்டினச் சுழலில்! இது மேலும் கீழுமாய் சக்கரமாய் சுழலும் தொட்டில் ராட்டினம்.

'ஏற்கனவே அவன் வாழ்வில் ஒரு பெண் இருந்திருக்க, அவளைக் கட்ட மாட்டானாம்! கௌரவமான வீட்டுக் கன்னிப் பெண் கேட்கிறதாமா? - அக்கிரமம்' என்று ஒரு புறம் எகிறினால், 'ஏதோ ஒரு வேகத்தில் செய்த தப்பு அது. இப்போது உலகம் புரியவும் தான் திருந்தணும்னு நினைத்ததும் அல்லாமல், உண்மையை தந்தால்தான் என்ன....' மறுபக்க மனம் தழைந்தது.

'அதற்கு என் அக்காதானா இடைத்தாள்? அவளல்லாவா இந்த சிக்கலில் சிக்கியிருக்க வேண்டியது - வாழ்ந்து கெட்ட குடும்பம் என்ற துச்சமா?' - எகிறல்!

'அவரிடம் வேறென்ன குறை? பணம், பவுசு, பெயர் எல்லாவற்றையும் மீறி பண்பும் இருந்ததே. இப்படி ஒருவர் வாய்க்க நிச்சயம் கொடுத்து வைத்திருக்கணும்' - இளகல்!

'தெரியாமல் தப்பு, செய்துட்டேன் இனி மற்றொருத்தியை நிமிர்ந்தும் பார்ப்பதில்லை' - என்றவர் குனியவில்லையே?

'அதைச் சொன்னால்தானா? ஒரு புனித பந்தத்தினுள் புக முடிவெடுத்தவர், பழையவற்றை மறக்கத் தயார் என்றுதானே அர்த்தம்?

'முதல் சந்திப்பிலேயே இப்படி ஒரு குண்டை வீசியவருடன் வாழ்வது சுலபமில்லை....''

'உண்மை என்பது தைக்கும் அம்பு. அதை எறியும் போது, அதன் முனையை அன்பெனும் தேனில் தோய்த்துக் கொள்ளுங்கள் - என்பதற்கேற்ப வெகு இதமாகத்தானே விவரத்தைச் சொன்னார்....?'

வித்யா நளினாவை அழைத்து மெதுவாகக் கேட்டாள் நலவேந்தனை திருமணம் செய்ய உனக்கு சம்மதமான்னு சொல்லும்மா.... இதில் உன் விருப்பம் தான் முக்கியம்.

''சம்மதம்னு சொல்லிடுங்கம்மா....'' என்றாள் மெள்ள. ''ஒண்ணும் அவசரமில்ல பாப்பா - நாமும் விசாரிச்சுட்டு ஒரு வாரமோ மாசமோ சென்று சொல்லுவோம்....''

அதிகம் விசாரித்தால் இந்த திருமணம் நடக்காதே....

''அப்படி ஏதுமிருந்தால் உங்க சிநேகிதி சாவித்ரியம்மா நேரே நம்மைத் தேடி வருவாங்களா.... அவங்களுக்கு அந்த.... குடும்பத்தைத் தெரியணுமே?''

''மூத்தவளுக்காய் நீ ஏதும் தியாகம் செய்துடறாப்பல ஆகிடக் கூடாது செல்லம்....'' தாயின் குரல் நெகிழ்ந்தது.

அம்மா இப்படி அடிக்கடி கொஞ்சலாய் பேசுவதில்லை.

''தியாகம்ன்றது.... பெரிய வார்த்தைம்மா....''

மகளின் தலையைக் கோதிய வித்யாவதி கண்ணீர் மல்க சொன்னாள் -

''பையனை வரச் சொல்லுவோம். நீயும் பாரு. பேசி கூட முடிவு பண்ணலாம். 'அக்கா தப்பிச்சுட்டா.... நான் சிக்கிட்டேன்'னு நீ எக்காலத்திலேயும் மறுகிடக்கூடாதுடீ...''

''சரிம்மா வரச் சொல்லுங்க'' என்றாள் நளினா -

## 10

ஒரு பூ காயாகி பின் எப்போது கனிகிறது என்பது யார் கண்ணிற்கும் தெரிவதில்லை. கணிக்க முடியாத அது நம் கண்களுக்கு முன்பு நடப்பதுதான்.... திடீரென ஒருவர் மேல் ஏற்படும் ஈர்ப்பும் அதே போலத்தானோ?

நளினாவிற்கும் தன் சம்மதமும், அதைத்தான் தந்த விதமும்

திகைப்புதான்.

நலவேந்தனைத் தான் போய் சந்தித்ததை இன்னும் தன் தாயிடம் சொல்லாதது குற்றமாய் குறுகுறுத்தது. மேலே வந்து உட்காரும் குளவியை உதறுவது போல உண்மையைச் சொன்ன அவனை உதறாமல் திருமணத்திற்கு சம்மதித்தது....

இப்போது நளினாவிற்கு தன் அக்காவின் காதல் புரிந்தது!

அக்காவின் கைபேசியின் மூலம் நலவேந்தனிடம் பேசியதுமே மனம் தாளாமல் நந்தனாவிடம் 'கைபேசி'யைத் தந்துவிட்டிருந்தாள். அவசரமாய் அதில் தனக்காய் வந்திருந்த பிரசாத்தின் கவிதை வரிகளை நடுங்கும் விரல்களால் தட்டிப் பார்த்த நளினாவின் விழிகள் மின்னலாய் நீர்!

''முனிவர்கள்

கடவுளைப் பார்ப்பதற்காகத்

தவம் இருக்கிறார்கள்

நானோ

ஒரு தேவதையைப் பார்த்துவிட்டு

தவம் இருக்கிறேன்'

தமக்கை வாய்விட்டு வாசித்ததைக் கேட்ட தங்கைக்கு அலுப்புதான் தங்களது நேசத்தால் விளைந்தபிரச்சனையைப் பிரித்து அதற்கான தீர்வைத் தராமல் இப்படி இரவல் வரிகளை அனுப்பி உணர்வுகளை மேலும் சிக்கலாக்குவானேன் என்ற எரிச்சல்!

ஆனால் உள்ளே காதல் மொட்டுவிட்டு விட்டால் புத்திசாலித்தனம் படுத்துவிடும் இதயத்திற்கு சிறகுகள் முளைத்து கன்னாபின்னாவென்று எம்பி பறக்கும் - என்பதைத் தானுமே உணர்ந்த பின் அக்காவிடம் பரிவு காட்டினாள். ஆனால் தனக்குள் உறுத்திய ரகசியத்தை நளினா யாரிடமும் பகிரவில்லை...

நலவேந்தன் வீட்டார் சேதுமலைக்கு வந்து போர் பின்பு வித்யாவதியின் கால் தரையில் பரவவில்லை... பரவசமாய் பாடிப் பறக்காத குறைதான்!

தன் இளைய மகளிடம் பேசியதை விட, தன்னிடம் பாசமாய் பேசிய



நலவேந்தனை அவளுக்கு மிகப் பிடித்து விட்டது. வீட்டைச் சுற்றிப் பார்த்தவன் தன்னிடம் கூறிய ஆலோசனைகளும் பிடித்திருந்தன!

இதையே மற்றவரோ, பெற்ற மகள்களோ சொல்லியிருந்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டு புறக்கணித்திருப்பாள்!

''மாப்பிள்ளை' வீட்டார் கிளம்பிய பின் நளினா தாயிடம் ஆவலாய் விசாரித்தாள் -

''உங்களிடம் தனியே ரொம்ப நேரம் ஏதோ பேசினாரே.... என்னம்மா?''

வித்யாவதி முதலில் சற்று 'பிகு' செய்து கொண்டாலும், மகள் மூலமாய் வந்த மருமகன்தானே என்று நலவேந்தனின் திட்டங்களைச் சொன்னாள் -

''இதன்படி செய்யப் போறோம்மா?''

''அதுதான் சரின்னு படுது. தவிர மாப்பிள்ளைத் தம்பி ஆலோசனைச் சொன்னதோடு நில்லாமல், அதற்கு வேண்டிய உதவிகளையும் செய்யப் போகிறாரே.... ரொம்ப புத்திசாலிப் பிள்ளை, நளினா - கூடவே பொறுப்பும் இருக்குது. நீ ரொம்பக் கொடுத்து வச்சவ செல்லம்.

வீட்டுக்கு வந்தவர் என்னை வணங்கிட்டு உட்கார்ந்து சகஜமாய் பேசினதுமே எனக்குள்ளே ஒரு பிடித்தம். தொடர்ந்து அவர் பேச்சு, பழக்கமெல்லாம் பார்த்த, எனக்குள்ளே நிச்சயமாயிடுச்சு -

'இவர் என் பிள்ளை'ன்னு!

உருகிய தன் தாயை ஆச்சரியமாய் பார்த்திருந்தாள் மகள். இளம் பச்சை நிறப்பட்டில், பாரம்பரிய நகைகளோடு வீட்டுப் பூ சூடி முகம் மலர நின்ற மகளை வாஞ்சையாய் பார்த்த தாய் - ''ஆண்கள் பற்றி ஒரு குட்டி கதையுண்டு நளினா. கடற்கரையில் ஒரு வலம்புரிச்சங்கை எடுத்த ஒரு இளம்பெண், அதை ஊத, அதிலிருந்து ஒரு பூதம் கிளம்பியதாம்.

'என் விடுதலைக்காய் உனக்கொரு வரம் தருகிறேன்' என்று அப்பெண்ணிடம் சொல்ல, அவளும் - 'நான் வளர்க்கும் ஆட்டுக்குட்டி என்னோடு பேசணும், ஆடிப் பாடணும்'னாளாம்!

'எனக்கு அத்தனை சக்தி கிடையாதம்மா - வேறு ஏதேனும்

கேளேன்' - என்ற பூதத்திடம் அந்தக் கன்னிப் பொண்ணு கேட்ட வரம் - 'அன்பானவனாய், பொறுப்புள்ள, சிரிக்க சிரிக்க பேசும், என்னோடு என் குடும்பத்தையும் மதிக்கும், பொய் பேசாத புருஷனைக் கொடு' என்பதுதான்.

அதற்கு பூதம் பெருமூச்சோடு - 'இதற்கு உன் முதல் ஆசையே தேவலை. எங்கே உன் ஆட்டுக்குட்டி?'னுதாம்!

கதையைவிட, அம்மா கதையும் சொல்வாள் என்பதுதான் நளினாவிற்கு நம்பக் கூடாததாயிருந்தது!

கணவனின்றி இரு பெண்களையும் வளர்த்தெடுக்க வேண்டுமே, நல்ல வாழ்வமைத்துத் தரணுமே என்ற கவலையில் இத்தனை காலம் இறுகியிருந்த தாய் இப்போது நலவேந்தனுடன் பேசியதும் கதை கூறுமளவு இளகியதில் நளினாவிற்கும் மனம் நிறைந்த மகிழ்வுதான் அவள் நலவேந்தனை சந்திக்கக் கிளம்பியதே இந்த தாயை நிம்மதிப் படுத்துவதற்குத்தானே?

இதுவரை 'சிடுசிடு'த்த தாயின் முகத்தின் கனிவை ஆவலாய் பார்த்தவள் பெற்றவளைக் கட்டிக் கொண்டாள்.

பெற்றவர்கள், பெரியவர்களின் கட்டுப்பாட்டிற்கு மறுபெயர் அக்கறை என்பது தெளிவானது. ''இந்த பிள்ளை எந்தப் பெண்ணும் கேட்கும் எல்லாத் தகுதிகளும் உடையவரும்மா. அதோட பார்க்கவும் அம்சம்.... என்ன உன்னை விட வயசுதான் கொஞ்சம் கூட....''

கேள்வியுடன் மகளைப் பார்த்தாள் தாய்.

''பரவாலம்மா....'' கன்னம் கனிய பதில் வந்தது!

''உனக்கும் பிடிச்சிருக்குதானே செல்லம்?''

''ம்ம்....'' சிணுங்கிய மகளின் நெற்றியில் முத்தமிட்டாள் வித்யாவதி.

புது வீட்டிற்கு வித்யாவதியின் குடும்பம் மாறியது அவர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல அனுபவமாய் அமைந்தது.

''நறுவிசான புதுவீட்டில் இருக்கறது நல்லாத்தான் இருக்குது - இல்ல?'' என்று வந்த இரண்டு நாட்களுக்குள் ஏழெட்டு தரம் சிலாகித்து விட்டாள் வித்யாவதி.



நறுக்கென்று இருந்த சமையலறையில் கால் ஓய நடக்காமல் குடியேறி பால் காய்ச்சிய கையோடு, சமையலறைப் பொருட்களை அடுக்கி ஒரு உப்புமாவையும் கிளறி விட்டாள் யோகம். ''எனக்கு ஒரு ஆண்பிள்ளை இல்லாதது குறைதான்னு இப்ப புரியுது யோகம். மாப்பிள்ளை தம்பி எவ்வளவு பாந்தமாய் எனக்குப் புரிய வைத்தார் தெரியுமா?

'பெரிய, பழைய வீட்டில் வாழணும்னாலும் அதை விற்கணும்னாலும் முதலில் மராமத்து செய்து நல்லபடி வைக்கணும்மா. இல்லைன்னா இங்கே இருப்பதும் வசதியில்லை, வாங்க வருபவங்களும் உரிய விலை பேச மாட்டாங்கன்னவரு, வீட்டைப் பழுது பார்க்க கான்ட்ராக்டரையும் பேசி விட்டார். நாம அந்த தூசு, சத்தத்திடையே இருக்க வேண்டாம்னு நமக்கு அடிவாரத்துல ஒரு நல்ல வீட்டையும் பார்த்து தந்துட்டார். பளிச்சுங்கற இந்த வீட்டுக்கு வந்ததுமே எனக்கு மறுபடி நம்ப பெரிய வீடு போகணும்ன்ற எண்ணம் கூட மங்கிடுச்சு!

யோகமும் ஒத்து ஊதினாள் -

''சமையலறையின் மேடையும், சின்ன சின்ன அலமாரிகளும் நல்ல அமைப்பு - கையை நீட்டினால் எண்ணையும் உப்பும் கைக்கு எட்டறது ரொம்ப சௌகர்யம்.''

''கூரை கொஞ்சம் தணிவுங்கதால வெக்கை தெரியுது. தவிர இங்க மலைக் காற்றுமில்லையே. அதைத் தணிக்க ஜன்னலுக்கு வெட்டிவேர் தட்டி, கூலர் யோசனையாய் செய்திருக்கார் தம்பி''

''நம்ப பெரிய வீட்டை....?''

''வியாபார வகையில் அவருக்கு பல வெளிதேசத்து சிநேகிதர்கள் நல்லபடி திருத்தினாலும், சில மாதங்களுக்கு வேண்டிய பொருட்களோடு வீடு மாற வைத்த நலவேந்தனின் சாமர்த்தியம் நளினாவை சற்று மிரட்டியது!

பழமையில் ஊறிய ஒரு நடுத்தர வயதினரின் மனதை இத்தனை எளிதாய் புரட்டுபவனுக்கு இளம் பெண்களைக் கையாளுவது ஒரு விஷயமே இல்லை என்ற அசௌகர்ய அச்சம்!

வீட்டை விற்காவிட்டாலும் தான் ஒரு பெருந்தொகையை நந்தனாவின் கல்யாணத்திற்காய் தருவதாகவும், நளினாவுடனான தன் திருமணமும் தன் பொறுப்பு என்று அவன் சொல்லியதில் வித்யாவதிக்குப் பரம திருப்தி!

தேவன் போல வந்து தன் பிரச்சனைகளை எல்லாம் ஒரேயடியாய் தீர்த்து, நிம்மதி தந்த நலவேந்தனை அவள் துதித்துக் கொண்டாடினாள்!

ஆனால் நளினாவின் தவிப்பு கூடியது!

சந்தித்த நாளன்று அவன் சொன்ன அதிர்ச்சி தகவலை மனதிற்குள் விதவிதமாய் உருட்டினாள் - பிறகு பட்டும் படாமல் அவன் தந்த தகவல்கள் ஏதும் முழுதாய் இல்லை. ஆனால் -

'நீ கவலைப்படவோ, கலவரப்படவோ ஏதுமில்லை' என்றவன் முடித்தபோது ஏனோ ஒரு நம்பிக்கை.

இவன் மட்டுமே தங்களை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றக் கூடியவன் என்ற சரணாகதி.

முதல்நாள் நலவேந்தன் இவர்கள் வீடேறிய போது பேசியதெல்லாம் தன் தாயாருடன்தான். மூன்றாம் நாள் இவர்களுக்கு ஏற்ற ஒரு வீட்டை மலை அடிவாரத்தில் பார்த்திருந்த தகவலுடன் வந்தவன் நளினாவை தனியே கூட்டிப் போய் அவள் கைப் பற்றி தந்த பரிசு ஒரு நவீன செல்ஃபோன்!

"உங்களுக்கான மற்ற வேலைகளைப் பார்க்க வேண்டியிருந்ததால் நாம் அதிகம் பேச முடியலை நளினா. இனி பேசுவோம்! இதில் நாம் பேசுவது எல்லாம் சந்தோஷமானவையாகவே இருக்கட்டும்"

அவனது வெதுவெதுப்பான விரல்கள் தன்னைப் பற்றியதில் இவள் கிறங்கி நிற்க, அவன் கிளம்பிய சற்றைக்கெல்லாம் பேசி சிணுங்கியது அழைத்தது அவன்தான்!

ஓடிப்போய் பெரிய தேக்கு ஊஞ்சலில் உட்கார்ந்தவள், முதலில் அவன் கேட்டதற்கெல்லாம் பதிலளித்து விட்டு, பின்பு சகஜமானாள்.

'அமைதியாய் இருப்பது நல்லது -

ஆனால் அழுகிற பிள்ளைதானே பால் குடிக்கும்!' என்ற பழமொழியின்படி மெள்ள, அவனது வாழ்விலிருந்து 'அந்தப் பெண்'ணைப் பற்றி பேச்செடுத்ததுமே தடுத்தான் -

'கடந்த காலம் பற்றி ஏன் நளினா? வளமான வருங்காலத்தைப் பற்றியே பேசுவோமே.... நான் சொல்லலை? நம்ப பேச்செல்லாம் சந்தோஷமானவையாய் மட்டும் இருக்கட்டும்னு?"



அமைதிபடுத்தினான்.

ஆக அழ வாய் திறந்தும் இவளுக்குப் பாலிற்குப் பதில் கிடைத்தது வெறும் சூப்பான்தான்.....

வாயடைத்தாலும் வயிறு நிரம்பவில்லை....!

## 11

'மனிதன் காற்றில்லாமல் சில நிமிடங்கள் இருக்க முடியும் - தண்ணீரின்றி சில நாட்கள் இருக்கலாம். உணவில்லாமல் சிலவாரங்கள் சமாளிக்கலாம். ஆனால் மூளையின்றி வாழ்நாள் முழுக்க வாழலாம்!'

இந்த கிண்டலுக்கு ஏற்ப, நளினா தன் மூளையைக் கழற்றி வைத்தே விட்டாள்!

யோசித்தால்தானே வம்பு வளரும்!

மூளையைக் கசக்காமலிருந்தால். நலவேந்தனிடம் ஒரு குறை க்காண முடியவில்லை!

இவர்களுக்கு தற்சமயம் வேண்டாதவற்றை பின் புறமிருந்த வில்வண்டி அறைகளில் அடைத்தவன், வீடு மாற்றும் போது கூடவே இருந்தான். ஒவ்வொரு முறை அவன் வீடேறும் போதும் எல்லாருக்கும் பரிசுகள் உடன் வந்தன. அவன் தன்னையும் தாயையும் மட்டுமின்றி, அக்கா நந்தனாவையும் நினைத்து, அவளுக்கேற்ற பரிசுகளையும் தந்ததில் நளினா நெகிழ்ந்தாள். இருவரும் நினைத்த போதெல்லாம் ஒருவர் மற்றவரை அழைத்து, பேசினார்கள். தான் பேசுவதை எல்லாம் விருப்பமாய் கேட்டு, ரசித்து சிரித்தவன் நளினாவிற்கு மிகப் பிடித்திருந்தது - பெருமையும் கூட, அந்தப் பூரிப்பில் நலவேந்தன் குறிப்பிட்ட, 'அந்தப் பெண்' பற்றிய குமைச்சல் குறைந்து விட்டிருந்தது!

புது வீட்டிலிருந்து ஒரு மணி நேரக் கார் பயணம்தான் நலவேந்தனது வீடு. அத்தை ஜமுனாம்மாளைப் பார்க்க இவளை அழைத்துப் போனவன், டவுன் கடைகளுக்கும் இட்டு சென்றான். அதிகாலை கிளம்பி கோவைக்கு ஒரு முறை சென்றவர்கள் கார் முழுக்க பொருட்களை வாங்கி அடைத்துக் கொண்டு இரவு திரும்பினார்கள்.

அந்த வார இறுதியில் நளினாவின் குடும்பத்தை தன் வீட்டிற்கு அழைத்திருந்தான் நலவேந்தன். அவன் பரிசளித்திருந்த பட்டுகளில் மூன்று பெண்களோடு யோகமும் போக, உபசரிப்பு தடல்புடல்பட்டது.

வித்யாவதியிடம் தனியே பேசியவன், நந்தனாவின் கல்யாணத்திற்கு முதலில் நாள் பார்க்க சொன்னான் - ''அவர்கள் கேட்கும் சீரை செய்துடலாம்மா. கல்யாண தேதியை முடிவு செய்தால் மறுமுகூர்த்தத்தில் எங்க கல்யாணம்''

அதைப் பற்றி பூரிப்பாய் வித்யாவதி நளினாவிடமும், யோகத்திடமும் பேசிய பொழுதில், நளினாவை அத்தை ஜமுனாம்மாளிடம் கூட்டிப் போனான் -

''அதை இப்போ நளினாட்ட தந்திடுங்க அத்தை'' என்றபடி.

''எதை?'' ஆர்வமாய் படபடத்தாள் நளினா.

சந்தன நிறப் பட்டில் அகன்ற அரக்குக் கடையிட்ட காஞ்சிபுரப்பட்டில் சந்தன சிற்பம் போலிருந்தவளை நெட்டி முறித்து திருஷ்டி கழித்த அத்தையம்மாள் -

''தயாராய் வச்சிருக்கேன்ப்பா'' என்றபடி தன் தலையணையின் கீழிருந்த வெல்வெட் பெட்டியை எடுத்தாள்.

''உங்கையால் கொடுப்பா'' என்றவள் தன்னிடம் நீட்டியதை ஒரு கணம் தயங்கியவன், பிறகு வாங்கி, தனக்கு மனைவியாகப் போகிறவளிடம் நீட்டினான்.

நந்தனா அழகிய நகைகளைப் பாராதவள் இல்லை என்றாலும், கணவனாய் வரப்போகிறவனின் கையால் அந்த நகைப் பெட்டியை வாங்கும் போது சிலிர்த்தது!

ஆர்வத்தால் தேறிய அவளது விரல்கள் மூடியை விலக்கியது - உள்ளே கம்பீரமாய் ஜ்வலித்த நகையை விழி விரியப் பார்த்தாள் - நடுவே கெம்பு பதித்து சுற்றிலும் நட்சத்திரங்களாய் பளபளத்த வைரங்களுள்ள வட்டப் பதக்கம். அதன் விளிம்பெங்கும் தங்கக் குமிழ்கள். அதைச் சின்னதாய் பிரதி எடுத்தது போல ஜோடிக் கம்மல்கள்.

''இது நாலு தலைமுறைகளாய் எங்க குடும்பத்திலுள்ள நகையம்மா. இந்த நல்ல நாளில் உனக்குத் தரணும்னு பட்டது....''



அத்தையம்மாளை நிமிர்ந்து பார்த்ததும் மேலும் விளக்கம் கிடைத்தது - ''இன்னைக்கு நலாவின் பிறந்த நாள்'

அவர் எங்கிட்ட சொல்லவேயில்லையே' என்ற குற்றச் சாட்டுடன் பார்த்தாலும் சட்டென்று அவன் தந்த கழுத்து நகையை அணிந்து கொண்டு பெரியவரையும் அவனையும் வணங்கினாள் -

''பிறந்தநாள் வாழ்த்துக்கள்'' என்றபடி.

எனக்கு ரொம்ப சந்தோஷம்.... குடும்ப நகைகளைப் போட்டு இந்த வீட்டின் விளக்கேற்ற நல்ல குடும்பப் பெண் நீ வந்ததுதானம்மா....''

அத்தையின் குரல் தழுதழுத்தது.

கம்மலையும் போட்டுக் கொண்டு, அவற்றோடு தாயின் முன் போனவளை வித்யாவதி பூரிப்பாய் கட்டிக் கொண்டாள்.

அன்று மாலை இவர்களை வீட்டிற்குத் தானே வந்து இறக்கிவிட்டவனின் பார்வை பெருமிதத்துடன் நளினாவையே ஒட்டித் திரிந்தது.''

என்ன இப்படி பாக்கறீங்க?''

''ம்ம்... அத்தை சொன்னது போல இப்படி குடும்ப நகையோடு அம்சமாய் என்னருகே சபைக்கு நிறைவாய் நிற்க எனக்கு ஒரு மனைவி தேவைதான்.... ஆனால்''

''என்ன?''

''நகையும் பட்டும் போட்டும் கூட, நீ ரொம்ப சின்னவளாய் தெரியறே நளினா.... பத்து வருஷ இடைவெளி நமக்குள்ளே'' அவன் தோள்களை உயர்த்த, எந்தப் பிசாசோ இவளுக்குள்ளே நின்று அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டது....!

''அந்தப் பெண்.... அவங்களுக்கு என்ன வயது?''

''ஓ.... பத்மினியும் நானும் சமவயசு, அதுதான் எங்களுக்குள்ளே சிந்தனை, முடிவு, செயல்னு எல்லாவற்றிலும் ஒத்துப்போனது....''

''ஓ.... அவ... அவங்க பேர் பத்மினியா?'' கேட்டவளது உதடுகள் உலர்ந்தன.

ஒப்பிடக்கூடாதுதான்.... ஆனால் நேசத்தால் நெகிழ்ந்திருந்த

அவளது நெஞ்சம் அதை உக்கிரமாய் செய்தது?

முதலாவதாய்.... அந்த பத்மினி தன்னை விட அழகோ? தன்னைவிட மிக மூத்தவள்....

பத்மினியின் முதிர்ச்சி அவனுக்குப் பிடித்திருந்ததோ!

படிப்பு, பண்பு, குடும்பம், அறிவு, திறமை.... இவற்றிலும் அவள் அவனுக்கு ஒத்திருந்தாளோ?

பொறுமிய நெஞ்சம் காந்தியது.

ஆனால் இவளின் எரிச்சல் அறியாத வீடு புது அமைதி கண்டிருந்தது.

பெண்களின் கல்யாணம் பற்றியே யோசித்து தன்னைக் கடைந்து கொண்டிருந்த அம்மா முகத்தில் நிம்மதி.

யோகம் கூட பாடியபடி சமைத்தாள்.

முக்கியமாய் முன்பு உப்பு நீரால் உப்பிய நந்தனாவின் முகத்தில் இப்போது புது சௌந்தர்யம்.

அவளது வெளிறிய சருமம் நாணமேறிக் கனிந்திருந்தது!

கண்கள் நிரம்ப கனவும் காதலுந்தான். துள்ளலான நடையோடு சிறு வீட்டில் நடந்து வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்த அக்காளை பார்த்தவள் யோசித்தாள் இளையவளுக்கு வந்த நகையோ, பகட்டான வாழ்வோ மூத்தவளைச் சீண்டியதாய் தெரியவில்லை. மாறாக, பிரசாத்துடன் தன் வாழ்வு அமைந்து விட்ட உற்சாகத்துடன் வளைய வந்தாள். பழையபடி 'செல் பேசி' அவள் கைக்குப் போயிருந்ததால் அம்மாவின் எதிரே இல்லாவிட்டாலும், தனிமையில் பிரசாத்துடன் கொஞ்சல்தான்! காசு இரண்டாம்பட்சம், காதல் போதும் என்று நின்று அக்கா அதைச் சாதித்து கொண்டதைப் போல, தாய்க்காக, தன் குடும்பத்திற்கு காசு அவசியம் என்று திட்டமிட்ட தனக்கு காதல் கிட்டாமலேயே போய் விடுமோ?

'திக்'கென்றது!

ஆனால் அன்று காலை போனில் அழைத்த நலவேந்தன், 'சாயங்காலம் ரெடியாயிடு நளினா.... நான் வந்து உன்னை வெளியே கூட்டிப் போகப் போறேன்' என்று ஆர்வமாய் சொன்னதும், புது உற்சாகம் தொற்றிக் கொண்டது.



ஜமுனா அத்தை கூட இவளிடம் பூடகமாய் பேசியிருந்தார் - 'நீ வந்ததும் வேண்டாததெல்லாம் கழிஞ்சு போனதும்மா' - எனவில்லை? சொல்லிவிடுவதுதான் நலவேந்தனின் நோக்கமேத் தவிர, 'அந்தப் பத்மினியோடு நீயும் நில்லு!' என்பதல்ல.

வாய்நிறைய பாகற்காயை மென்றபிறகும், ஒரு அச்சு வெல்லத் துண்டு அத்தனைக் கசப்பையும் காணாமல் அடித்து விடுவதைப் போல, வேண்டாத சுவைகளுக்கு இனி இடமில்லை. வருபவனுக்காய் யோகத்துடன் நின்று டிபனும் தயாரித்தவள், நாவற்பழப் பட்டில் பாலாடை நிறக் கரையுள்ள புடவைக் கட்டி, முத்து ஜிமிக்கியோடு வெகு நேரம் கண்ணாடியில் தன்னை அழகு பாத்திருந்தாள்.

ஒட்டி உரசுவதும் இளித்து வழிவதும் நலவேந்தனிடம் கிடையாது என்றாலும் அவன் விழிகள் இவளுக்கான பாராட்டைத் தரத் தவறுவதில்லை.

அருகிலிருந்த தையல், கைவேலை வகுப்பிற்கு நந்தனா போக ஆரம்பித்திருந்தாள் - வித்யாவதி தடுக்கவில்லை.

'அவங்கவங்க மனசு போல மாங்கல்யம் அமைந்தால் சரிதான் அதுவும் ஒரு கொடுப்பினைதானே?' என்றுவிட்டாள்.

யோகத்திற்கும் இதில் சம்மதம் தான் -

'இப்படி வழிவிட்டு நிக்கறதுதான் பெரியவங்களுக்கு அழகு, இதைச் செய்யாதேன்னால், வீம்புக்கேனும் மீறி நிற்பதுதான் இளசுங்க சுபாவம். அதுவும் இந்த.... காதல்ல.... விதிகளே இல்லியே....'

'அதைத்தான் விதி விட்ட வழிங்கறாங்க யோகம்! ரெண்டு பெண்களும் குடும்பம் குழந்தைகள்னு நிறைஞ்சு வாழறதைப் பார்க்கறதை விட எனக்கு இனி வேறென்ன வேணும்?'

'ம்ம்.... அதுதான் யோகம் என்ற யோகத்தின் பதிலில் இருவருமே வாய்விட்டு சிரித்தனர். புதுவீட்டில் இதுவும் வாடிக்கையாகி இருந்தது!

'ரெண்டு கல்யாணங்களையும் முடிச்சுட்டு நாம காசிவரை போய் வரணும் யோகம்....'

எதிர்காலம் பற்றிய பதட்டம் நீங்கிய வித்யாவதி வருங்கால திட்டங்களை ஆர்வமாய் போட்டாள். தன் சேமிப்பிலிருந்து தொகை ஒன்றை மகள் நளினாவின் கைப்பையில் வைத்தவள் - 'ஷாப்பிங்தானே?'

'இன்டெக்ஷன் ஸ்டவ்னு ஒன்னு வந்திருக்காமே? அதில ரெண்டு வாங்கிட்டு வந்துடு நளினா. நம்ப வீட்டிலேயே பழகிப் பார்த்துக்கலாம். உங்க வீடுகளில் போய் தடுமாற வேண்டாமில்லையா?'

ஏதோ கடை, கண்ணிக்குப் போகப் போவதாய் எண்ணி நளினாவும் ஆர்வமாய் நலவேந்தனுக்காய் காத்திருந்தாள்.... ஆனால் அவளுக்காய் பெரும் அதிர்ச்சிதான் காத்திருந்தது!

## 12

நுழைந்த நலவேந்தனின் கண்களில் தனக்காய் முளைத்த பாராட்டைக் கண்டவள் வேறொன்றையும் கவனித்தாள்.... சிறிது பதட்டமும் தெரிந்ததோ?

அதிகம் சாப்பிடாதவன் அவசரமாய் கிளம்பினான் -

இவள் எதிர்பார்த்தது போல அங்கிருந்த எந்த சிறு நகரங்களுக்குள்ளும் கார் திரும்பவில்லை. அவனது வீட்டிலும் நிற்காமல் தாண்டி விரைந்தது வாகனம். அவன் சொல்லாவிட்டால், தானும் கேட்பதில்லை என்ற முடிவுடன் பொதுவாய் ஏதோ பேசியபடி இருந்தாள் நளினா. நந்தனாவிற்கு வரும் மாதம் திருமணம் என்ற பேச்சு எழுந்ததால், அது பற்றியே பேச நூறு விஷயமிருந்ததே.

அகண்ட மரவெளிவாயிலின் முன் நின்று இருதரம் காரின் ஹார்னை ஒலித்தவன், உடனே திறந்த தோட்டத்தினுள் காரை செலுத்தினான். அந்தி சூரியனின் செம்மையில் குளுகுளுவென்றிருந்தது அந்த தோப்பு. அதனுள் மறைவாய் நின்ற அம்சமான வீட்டின் முன் காரை நிறுத்தியவன் இறங்கி, நளினாவிற்காய் கதவைத் திறந்து நின்றான். கேள்விகளைக் கொட்டவிருந்த நாவை அடக்கியபடி இவளும் இறங்கினாள்.... இங்கே என்ன அல்லது யார் என்ற எதிர்பார்ப்பு உள்ளே ஆனந்தமாய் குமிழிட்டது!

காரின் கதவுகள் திறந்து மூடிய சத்தத்தில் அந்த வீட்டின் கதவு திறந்தது. அதற்குள் வீடு நோக்கி நடந்த நளினாவின் விழிகளும் விரிந்தன. கதவின் பின் நின்ற பெண்ணைப் பார்த்தவளின் நெஞ்சு திரிந்த பால் போல முறுகியது.

''நான் சொல்லலை... பத்மினி'' என்றபடி இயல்பாய் அறிமுகம் செய்தவன் படியேறி வாசல் நுழைய நளினா திகைத்து நின்றாள்!



பத்மினிக்கு திகைப்பூட்டும் அழகுதான்.

வளர்த்தியும் வளைவுகளுமான உடம்பு.

நுங்கின் நிறமும் பளபளப்புமுள்ள சருமம்.

ஓவியம் போன்ற முகம்.... சற்று முதிர்ச்சியுடனிருந்த அந்த கண்களும் வந்தவளை அளவிட்டன!

''வாங்க....'' என்றவள் வழிவிட்டு நின்று, இவர்களைத் தொடர்ந்து நடந்த போது மெல்ல அதிர்ந்த பத்மினியின் மார்புகளை வெறித்தாள் இவள். விரித்து விட்டிருந்த கேசம் கூட மோகத்தைக் கிளறுமளவில் நீண்டு கிடக்க, தாராளமாய் மைபூசிய விழிகள் உல்லாசமாய் உருண்டன! மரியாதை நிமித்தமும் பேசவோ புன்னகைக்கவோ முடியவில்லை நளினாவிற்கு!

பெண்மையின் முழுப்பொலிவுடன் நின்ற பத்மினியின் முன்பு தான் ஒரு சிறுமி போல நிற்பதாய் பட, குறுகினாள். ஆண்மை அழகுடன் நின்ற நலவேந்தனின் அருகே பத்மினியை வைக்க, அவர்களது பொருத்தம் இவளைப் பொறாமையில் பொசுக்கியது!

பத்மினி போலொரு மோகனாங்கியைக் கொண்டிருந்ததால் தான் நாலாவிற்கு தன் மீது எந்தக் கிளர்ச்சியும் எழவில்லையோ? சிநேகமும் கரிசனையுமான பழக்கமேத் தவிர, சீண்டல், கொஞ்சல், கெஞ்சல் என்று ஏதும் இதுவரை இவர்களிடையே இல்லை.... அதற்கான காரணம் தான் எதிரே இதோ நிற்கிறதே!

'நான் அறியாத மன்மதக் கலைகளே கிடையாது' என்பது போல சவாலிட்ட பத்மினியின் மைவிழிகளை எதிர்நோக்க

இதயநிலா

ஆசிரியர்:
கருப்பையா நாகராஜன்
உதவி ஆசிரியர்:
அன்புமீனா
நிர்வாகம்:
N.மகேஸ்வரன்
விளம்பர நிர்வாகம்:
எம்.இளமாறன்
வடிவமைப்பு
சரோஜா கிராபிக்ஸ்,
கவிதா ஆப்செட்
நிர்வாக அலுவலகம்:
இதயம் மீடியா
எண் 12, அண்ணாநகர் பிளாசா,
C-47, 2வது அவென்யு,
அண்ணாநகர், சென்னை-40.
9551296661, 9551286664
mail: idhayammedia@gmail.com

முடியாமல் தலை கவிழ்ந்தாள். நலவேந்தன் பக்கம் திரும்ப விரும்பாதளவு வெறுப்பு, உள்ளே குமுறியது!

'சரியான நபர் மீது, சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக, சரியான வழிமுறையில் கோபத்தைக் காண்பிப்பது சுலபமல்ல' என்று அரிஸ்டாட்டில் சரியாகவே சொல்லியது போல.... குழம்பினாள்! யார் மீது, எப்படி எப்போது தன் ஆத்திரத்தை நீட்டுவது என்பது புரியாத குமைச்சல்!

இதுவுரை பத்மினியைப் பற்றிய பேச்சைக் கூட தவிர்த்தவன் இன்று ஏதும் சொல்லாமல் அவள் முன் தன்னைக் கொண்டு வந்து நிறுத்தியது ஏன்?

தான் விரித்த வலையில் வகையாய் இவளும்.... ஏன் இவளது மொத்த குடும்பமும் சிக்கியாகிவிட்டது. இனி தன் சுயரூபத்தைக் காட்டினால் பாதகமில்லை என்ற திட்டமா?

முதலில் தன்னைப் பார்த்த போதும் கூட படபடவென்று பேசிய நளினாவின் இப்போதைய அமைதியை நலவேந்தன் கவனிக்கவே செய்தான். பத்மினியின் விசாரிப்பு, பாராட்டு, உபசரிப்பு எதற்கும் மசியாத மௌனம்!

இன்னும் ஒருவர் சேர்ந்தால் சூழல் இலகுவாகும் என்று எண்ணினான் போலும்... ''பரத் எங்கே? இன்னும் வீடு வரலையா? கேட்டான். ''ஜிம்மிற்குப் போயிட்டு வந்தவன், குளிக்க போனான்....''

''இதோ வந்துட்டேன்'' அறிவிப்புடன் முழுக்க உலராத ஈரத்துடன் வந்துநின்றவனை பத்மினி அறிமுகப்படுத்தினாள் -

''என் தம்பி - பரத்''

தமக்கையைப் போலவே வளர்த்தியும், கவர்ச்சியுமாயிருந்த பரத்திற்கும் தலை கொள்ளாத முடி ஈரத்தில் சுருண்டு மினுங்கிய கேசத்தை கோதியபடி புருவம் தூக்கி சிரித்தான் அவன்.

''ஹாய்.... இவங்களுக்கு ஒரே பெயர்தான் பொருத்தம் -

தேவதை! வேறெதும் பொருந்தாது. கொஞ்சம் அந்தக் கால தேவதை - அதுதான் பட்டுப் புடவை, பூ, ஜிமிக்கின்னு அசத்துறாங்க'' ஆர்ப்பாட்டமான வரவேற்பு!

இதற்கும் தான் பதில் சொல்லாமல் நிற்க முடியாதெனத்



தோன்ற....

''நீங்க என்ன பண்றீங்க?'' நளினா விசாரித்தாள் -

உலகத்தைக் கலக்க தயாராகிட்டு இருக்கேன்! அதாவது திரை உலகத்தை கலக்க தயாராகிட்டு இருக்கேன்! அதாவது திரை உலகத்தை டான்ஸ், பைட், ஜிம், ஸ்விம், எதையும் விட்டு வைக்கலை''

''நடிப்பைத் தவிர மற்றதெல்லாம் தயார்'' பத்மினி சீண்டினாள். ''அதெதுக்கு? விறைப்பாய் நின்னு சிக்ஸ் பாக் உடம்பைக் காட்டணும். பல்டி அடிச்சு பறந்து சண்டை போடணும், பக்காவாய் ஸ்டெப்ஸ் போட்டு ஹீரோயினைக் காதல் பண்ணனும் - அதுக்கு நான் ரெடி''

மோவாயில் கைவைத்து சிறு அலட்சியத்துடன் நின்ற நலவேந்தனிடம் மேலும் விளக்கினான் -

''இதெல்லாம் இல்லாமல் கூட நான் ஜெயிச்சுட முடியும். நம்ப

LIC OF INDIA
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
GET REGULAR MONTHLY INCOME

- Bright career
- endless income
- Value added work
- Full time/ part Time
- All Segment Persons can join as an advisor
- No Risk - No Investment
- Convert Your Contacts in to Huge Regular monthly income.



Contact:
K. MOHANRAJ
DEVELOP MENT OFFICER
98840 27940, Mail: k.mohanrajdevpt@g-mail.com

பெர்ஸனாலிட்டி அப்படி. இப்படி 'லுக்'கான ஹீரோ தமிழ் சினிமாவில் இப்ப யாரிருக்கா?''

தம்பியின் பேச்சை மாற்ற அல்லது குறைக்க பத்மினி இடைபுகுந்தாள் -

''என்ன குடிக்கறே? ஜூஸ், காஃபி?''

''கேரட்டும் பீட்ரூட்டும் கழுவி வச்சேன். மிக்ஸியில் போட்டு ஒரு அடி அடிச்சிடு... அப்பதான் முகம் வாடாம இருக்கும்....'' என்றவன் நளினாவைக் கூர்ந்து பார்த்தான்.

''உங்களுக்கு சினிமாவுக்கு ஏற்ற முகவெட்டு. சின்ன முகமும் பெரிய கண்களுமாய்.... ஸ்ரீதேவிக்கு இருந்தது போல. நீங்க நடிக்க வந்தால் நல்ல வரவேற்பிருக்கும்....''

சற்று அசுவாரஸ்யமாய் அதுவரை நின்ற நலவேந்தனின் உடம்பு விறைத்தது.

''ஸாரி பரத்.... நளினா என் மனைவியாகப் போறா... அவளுக்கு நடிப்பதில் எல்லாம் நோக்கம் கிடையாது....''

அதுவரை உள்ளே குமுறிக் கொண்டிருந்தவளுக்கு கோபத்திற்கு ஒரு வடிகால் கிடைத்தது!

''இதுவரை அந்த சந்தர்ப்பம் கிடைக்கலை... கிடைத்தால்.... நடிப்பது.... சுவாரஸ்யமாய்தான் இருக்கும்.... இல்லை நலா?'' அவளது பேச்சின் சீண்டலில் அவனுக்குச் சினமேறியது. ஆனால் பரத் சிலிர்த்துக் கொண்டு பேசினான் -

''க்ரேட்! இப்போதுள்ள பல முன்னணி நடிகைகளை நான் நேரில் பார்த்திருக்கேன்... ரொம்ப சுமார்தான். மேக்கப் பஞ்சை பலதரம் அவங்க உச்சி முதல் பாதம் வரை உருட்டி, சாயமேற்றி, பிரகாசமான லைட்ஸ் முன்னே நிற்க வைத்தால்தான் தேறுவாங்க. நீங்க, அக்கா எல்லாம் பிறவி - அழகிகள் அக்காவிடமும் நடிக்கக் கேட்டேன்.... அவ இதில் இறங்கிட்டா, நீங்க நடிக்க வந்தால் பீல்டை ஒரு கலக்கு கலக்கிடலாம்''

பத்மினி நடிக்க மறுத்து இறங்கியது எதில்?

நலவேந்தனின் ஆசைநாயகியாய் இருப்பது.... ஒரு பிழைப்பா? அதையும் அவளது தம்பியே வெட்கமின்றி சொல்லிக் கொள்கிறானே...



என்ன குடும்பம்?

இவளுக்குள் மேலும் கொதித்தது!

ஒருவேளை குடும்பத்திற்கான குலத்தொழில் இது என்பதால் அவர்களுக்குக் கூசவில்லையோ?

''அக்கா நடிக்க வந்திருந்தால் டாப் ஸ்டாராகி நானும் சுலபமாய் ஹீரோவாகி இருப்பேன்.... ஆனாலும் நான் விடலையே.... எல்லா யங் டைரக்டர்ளும் எனக்குப் பழக்கம். இப்ப இங்கே வந்திருக்கறது ஒரு ஷூட்டிங்குக்காகத்தான்''

''ஒஹோ... எங்கே நடக்குது?'' ஆர்வத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் நளினா.

''வைகை டாமில். லோ பட்ஜெட் படங்கறதால இங்கே. இனி ஸாங்-ஷூட்டெல்லாம் வெளிநாட்டில்தான் இந்த வாரமே ஷூட்டிங் ஆரம்பிச்சிடும். உங்களை டைரக்டரிடம் அறிமுகப்படுத்தறேன் நளினா.... நீங்க வர்ரது பற்றி பத்மினி சொன்னாலும் இவ்வளவு அழகான பொண்ணை இங்கே எதிர்பார்க்கலை நாங்க....''

''ஓ.... நன்றி''

அவர்கள் அங்கே இருந்தவரை, நளினா தன்னால் இயன்றளவு நலவேந்தனை வெறுப்பேற்றினாள். திரும்பும்போது காரில் இருவரிடையே பேச்சில்லை.

தன் வீடு வந்து சேர்ந்தவள் அவனை உள்ளே வரச் சொல்லவுமில்லை.

''சீக்கிரமே வந்துட்டியே.... என்ன வெறுங்கையா வர்ரே.... கடைக்கு போகலையா?'' என்ற தாயிடம்,

'மனசே வெறுத்துப் போய் வர்ரேன்' என்று கத்தத் தோன்றியது.

''தலை வலிம்மா - படுக்கறேன்'' என்றபடி தன் அறைக்குள் அடைந்து கொண்டாள். கண்ணாடி முன்பு நின்றால் அதில் பத்மினி தோன்றியது போலிருக்க, கட்டிலில் கவிழ்ந்தாள்.

ஆக, யோகம் ஆயாவின் சந்தேகம் சரி.

இத்தனைக் கோளாறு இருப்பதால்தான் ஒரு சிற்றூரில் வாழ்ந்து நொடித்த குடும்பத்து பெண்ணை பலியிடத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

செல் பேசி அழைக்க அவசரமாய் எடுத்தாள். ஆனால் இவள் எதிர்பார்த்தது போல அழைப்பு அவனிடமிருந்தல்ல அழைத்தது பரத்!

இவனுக்கு தனது எண் எப்படி கிடைத்தது என்ற கடுப்புடன் இவளிருந்த நிலையை உணராமல் பரத் உற்சாகமாய் பேசினான்!

''பத்மினி மூலம் உன் நம்பரை வாங்கினேன் நளினா - ஏன்னா இது முக்கியமான விவரம். நாளன்னைக்கு ஹூட்டிங் பார்க்க நீயும் வரணும். இது டைரக்டர்ஸ் அழைப்பு. நீ வந்தால் எனக்குப் பெருமை....''

அவன் அழைப்பை இவள் சட்டைப் பண்ணவில்லை. ''நாங்க மூணு பேராய் போவது முழுமையாய் இருக்காது - நீ வந்தால் கச்சிதம்னு நினைச்சேன்....''

தன்னை அவன் உரிமையாய் அழைத்ததும் ஒருமையில் பேசியதும் அவளுக்குக் கசந்தது. தொடர்பைத் துண்டிக்க இருந்தவளைச் சுண்டியது - 'நாங்க மூணு பேர்' என்றவன் சொன்ன தகவல்!

''யாரெல்லாம் போறீங்க?''

''நானும் பத்மினியும் நலாவுந்தான்''

''ஓ....? வர்ரேன்...''

அலட்சியமாய் ஒத்துக் கொண்டாலும் இரவு முழுக்க நடந்ததைப் பற்றியே நினைத்துப் புரண்டாள்.

சுமுகமான நதியாய் ஓடிய தங்கள் உறவில் பாதைகளாய் இந்த பத்மினியும் பரத்தும்! இத்தனை நாள் இவர்களைப் பற்றி பேசாதவன் இப்போது இழைவானேன்.... அவர்களோடு சேர்ந்து சுற்றுவானேன்?

அவர்களோடு சேர, இவளுக்கு கொஞ்சமும் விருப்பமில்லை. ஆனால் தனியே அவர்களை விடவும் மனமில்லை!

எதிர்பாராத இன்றைய சந்திப்பில் வாயடைத்து நின்றாள்.... ஆனால் மறுமுறை பார்க்கும் போது அந்த பத்மினியிடம் சொல்லி விடலாமே -

'நலா என் கணவராகப் போகிறவர். இனி அவரை உன்னோடு பார்க்க எனக்கு விருப்பமில்லை. அது குறையுமல்ல.' என்று, தவிர தான் பரத்தின் அழைப்பிற்கு - அதாவது சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு பற்றி - இணக்கமாய் பேசியதில் நலாவிற்கு எத்தனைக் காட்டம்?



அதே கடுப்பு தனக்கும் இருக்கிறது என்பதை நலாவிற்கு உணர்த்த இது மற்றுமொரு வாய்ப்பு.

## 13

அன்று நளினாவை ரோஜா நிற க்ரேப் அவளைத் தழுவியிருந்தது. காதில் முத்துக்கள் கோர்த்த பெரிய வளையங்கள், தளரப் பின்னிய கூந்தல், குதிங்கால் உயர்ந்த மெல்லிய வெள்ளைநிற செருப்பு, அழுத்தமான உதட்டு சாயம் என மாறியிருந்தாள்!

ஆச்சரியமாய் அவளைப் பார்த்த நலவேந்தனின் கண்கள் அடிக்கடித் தன்னை நாடியது அவளுக்குப் பிடித்திருந்தது என்றால்,

'ஹாய்.... அபாரம், அற்புதம்' என்று இவளைக் கண்டதும் பரத் கொண்டாடியதில் இறுகிய நலாவின் முகம், அவளுக்கு அதைவிட சுகமாயிருந்தது!

உன்னவளை ஊரான் பார்க்கும் போது எரிகிறதல்லவா... எனக்கு எப்படியிருக்கும் - மனதிற்குள் கறுவினாள்.

வைகை அணைக்கு போகும் சாலை கரடு முரடுதான் என்றாலும் அங்கிருந்த குளிர்காற்று புத்துணர்ச்சி தந்தது! படப்பிடிப்பு நடந்த இடத்திற்கு இவர்கள் போய் சேர்ந்த போது அங்கு கூடிய கூட்டத்தின் கண்கள் தன்னை மொய்த்ததில் நளினா சங்கடப்பட்டாள்.

அதுவரை அமைதியாகவே வந்த பத்மினி இறங்கியதும் ஒரு ஓரமாய் போய் உட்கார்ந்து விட்டாள். தவிர அவளது உடை இவ்வளவு அலட்டலகவுமில்லை. ஆனால் நலவேந்தன் பத்மினியின் அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர, நளினா பரத்துடன் போய் படத்தின் இயக்குனருக்கு அறிமுகப்படுத்தப்பட்டாள்.

''க்ரேட் பரத் - நீ சொன்னதைப் போல தேவதையாட்டம்தான் இருக்கறாங்க. இவங்களை நாலு மாதத்திற்கு முன்னே பார்த்திருந்தால் இவங்கதான் என்படத்தின் நாயகி''

இயக்குனரின் பாராட்டை ஒரு அரைகுறை சிரிப்போடு ஏற்றுக் கொண்டவளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தினான் பரத். நிஜமாகவே அப்படத்தின் நாயகி சற்று சாதாரணமாய் இருந்ததாய்தான் நளினாவிற்குமே தோன்றியது. ஆனால் பாடல் ஒலிபரப்பபட்டதும் அப்பெண் சுற்றிலும் அத்தனை பார்வையாளர்கள் இருப்பது பற்றிய

நினைவே இல்லாமல் ஆடியது தனக்கு கனவிலும் சாத்தியமில்லை என்பது புரிய நளினா -

''எனக்கு நடிக்க.... முக்கியமாய் இப்படி ஆட வராது... தெரியாது'' தலையாட்டினாள்.

''ரெண்டே மாசந்தான்'' விரல்களை ஆட்டிய இயக்குனர் - ''அதில் தரப்படும் பயிற்சியில் நீ... நீங்க எல்லாம் செய்திடலாம்'' அவன் கண்சிமிட்ட இவளுக்கு ஏனோ கூசியது.

பேச்சை வளர்த்தாமல் போய் உட்கார்ந்தவள் கண்களில் பத்மினியும்... ஏன் நலவேந்தனுமே படாமற் போக, சற்று நேரம் கண்களால் துழாவி சேர்ந்த சமயம், பரத் இவளருகே ஒரு ஸ்டூலை இழுத்து போட்டு அமர்ந்தான் -

''ம்யூஸிக் போட்டதும் எனக்கும் கால் பரபரங்குது நளினா இந்த படத்துல எனக்கு சின்ன ரோல்தான் ஆனா அடுத்த படத்துல ஹீரோ... நீ எனக்கு ஜோடியாய்....''

''அவர் எங்கே?''

''பத்மினி கூட ஜோடியாய் போயிட்டார்'' என்றவன் கண்சிமிட்ட, இவள் சிடுசிடுத்தாள் -

''எங்கே?''

''பக்கத்தில் கெஸ்ட் - ரூம்ஸ் இருக்கே''

''அங்கே போகலாம்'' என்றவன் எழுந்து நடக்க, பரத்தும் வேறு வழியின்றி இவளுடன் நடந்தான்.

பாடலுடன் ''ஒன் டு ஒன் டு'' என்ற டான்ஸ் - மாஸ்டரின் குரலும் இவர்கள் பின்னே தேய இவள் விரைந்தாள்.

''பிரஷ்ஷப் பண்ணிக்கணுமா நளினா? யு லுக் குட்''

''தலைவலி - படுக்கணும்''

''அதுக்கு எங்கிட்ட நல்ல மருந்து இருக்குது''

ஆனால் நளினாவின் சிந்தை வேறுபுறமிருந்தது. இப்போது நாயகியாய் வெடுக்கென ஆடும் பெண்ணை விட தான் அழகென்றால் அக்கா நந்தனா பேரழகி! ஆனால் பெண்களுக்கு



'ஷோ' பிஸினஸில் ஆர்வம் எழாமல் பார்த்துக்கொண்ட தாயின் உயர்வில் லயித்திருந்தாள். மரங்களிடையே கட்டப்பட்டிருந்த அறைகளைக் கண்டதும் புத்தி வேறுபுறம் குதித்தது இதில் எந்த அறையில் நலா அந்த பத்மினியோடு எந்நிலையில் இருப்பான்?

குழப்பமான மனநிலையில் இருந்தவள் பரத் திறந்துவிட்ட ஒரு அறைக்குள் நுழைய, அவளை உரசியபடி நுழைந்த பரத் அறைக்கதவைத் தாழிட்டான்!

எப்படி வீடு சேர்ந்தோம் என்றறியாத நிலையிலிருந்தாள் நளினா எதிலேனும் ஏறி வீடு வந்து விட தவித்தவளைக் கண்ட ஒரு டிரைவர்,

''ஐயாவைத் தேடறீங்களாமா?'' என்றான். படபிடிப்பிற்காய் வந்த பல வித வாகனங்கள் அங்கு நிறுத்தப்பட்டிருக்க,

''ஐயா வண்டிச் சாவியை என்னிடம் தான் கொடுத்திருக்காங்க மாற்றி நிறுத்துவதுக்கு.... காரில் உட்கார்ரீங்களா?''

நளினாவின் தோற்றமும், கேட்ட தொனியும் வேறு கேள்வியேதும் கேடகாமல் அந்த ஓட்டுனரை செயல்பட வைத்தது.

எதிர்பார்த்த நேரத்திற்கு முன்னதாகவே வீடு திரும்பிய நளினாவைக் கண்ட யோகம் கேட்டாள் -

''என்னம்மா.... உடம்புக்கென்ன? பேயரைஞ்சாப் போலிருக்க?'' 'பேயாய் ஒருத்தனை அறைஞ்சுட்டு வந்திருக்கேன்' என்று கத்த நினைத்தவள்,

'குளிக்கணும் யோகம்' என்று மட்டும் சொல்லிவிட்டு தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். ரோஜா நிற மென்பட்டை கழட்டி வீசிவிட்டு ரவிக்கையைப் பிரிக்கும் போதுதான் புத்தியில் உறுத்தியது. இதுநாள் வரை மெத்தென்ற மார்புகளுக்கு நடுவே பெருமையாய் பளபளத்துக் கொண்டிருந்த பதக்கம் அங்கே இல்லை! புடவையை உதறி, மற்ற ஆடைகளையும் துழாவினாள் தனது பிறந்தநாளன்று நலா தந்தது, அதைப் போட்டுக் கொண்டதிலிருந்து கழற்றாத நகை.... இப்போது அதின்றி கழுத்து மொட்டையாய் தெரிந்தது.

அன்று அவள் செய்து கொண்ட அலங்காரத்திற்கு அப்பாரம்பரிய நகை பொருத்தமில்லாவிட்டாலும் அதைக் கழட்ட மனமின்றி ரவிக்கைக்குள் இட்டுக் கொண்டிருந்தாள். கெம்பும் வைரமுமான

அப்பதக்கத்தின் இருபுறமும் ஓடிய சங்கிலி கனமற்றது என்பதால் பார்வைக்கு உறுத்தலாய் இல்லை. இரு வாரங்களாய் இவளது அழகிற்கு அழகு சேர்த்த,நலாவின் அன்பை உணர்த்திய அது எங்கே?

''அந்தக் காலத்து திடமான அமைப்பு - போடப் போட நகையின் மெருகு ஏறுமேத் தவிர மங்காது' என்று தாயும் சொல்லிவிட, அதன் அருமையை ரசித்தவளுக்கு.... இப்போது இந்த வெறுமை பதட்டமாயிருந்தது....

நலவேந்தனின் முன்னோர்கள் பயன்படுத்தி வரும் தலைமுறைக்கு 'ராசி' என்று விட்டுப் போயிருந்த அந்த நகை இப்போது எங்கே கிடக்கிறது...?

அந்த அறையின் தரையில்.... அல்லது பரத் அவளைத் தள்ள முயன்ற படுக்கையிலா?

பின்புறமிருந்து தன்னை அணைத்தவன் தன் கழுத்தை, கன்னத்தை உரசியபோதுதான் நளினா அந்த நெடியை உணர்ந்தாள். பரத் குடித்திருக்கிறான். இங்கு வந்ததும் எப்படியோ மது குடித்தவன், இப்போது நிதானமிழந்து இப்படி நடந்து கொண்டிருக்கிறான்.

''பரத்.... ச்சீ.... நலா எங்கே?''

''அவரும் இதே வேலையில்தான் மும்....முரமாய்...''

''ச்சீ....' திரும்பி அவனைத் தள்ள முற்படும் முன் அவன் உதடுகள் இவளதைக் கவ்வி முத்தமிட்டன....

அவனுக்கு மோகம் தலைக்கேறியது போல இவளுக்கும் மூர்க்கம் மிக அவன் உலுக்கி விலக்கியவள் ஓங்கி அறைந்தாள்! தடுமாறி சரிந்தவனை உதைத்து விட்டு வெளியேறி போது ஏதோ ஒரு கணத்தில் கழுத்தின் ஆபரணம் அறுந்திருக்கிறது.

ஞாபகங்களில் அவளது உடம்பு அருவறுத்து உதறியது. தேய்த்து குளித்தாள்.... அழுந்தத் துடைத்தாள்.

ஏதோ ஒரு உடையை உருவி உடுத்த ஆரம்பித்தபோது கதவு தட்டப்பட்டது. இவளுக்குத் தன் தாயை அப்போது எதிர்நோக்கச் சக்தியில்லை.

''நாந்தான் நளினா'' கிசுகிசுத்தது நந்தனாவின் குரல். அதிலிருந்து



தோழமையை உணர்ந்து கதவைத் திறந்தாள். அக்காவைக் கட்டிக் கொண்டவளுக்கு அழுகைப் பீறிட்டது.

''ஷ்.... என்னாச்சு மெல்ல சொல்லு....''

விசும்பலின் ஊடே சொல்லப்பட்ட விவரத்தைக் கேட்டவள், ''இவ்வளவுதான... ஆத்திரம் தீர அடிச்சேல்ல?''

''உதைக்கக் கூட செய்தேன். அவன்.... அந்த பரத் குடிச்சிருந்தான்.... ஆக சுலபமாய் தள்ளிட்டேன். ஆன முதல்ல நான் இப்படி செய்வான்னு எதிர்பார்க்கததால.... அவன் என்னைக் கட்டி.... முத்தமிட்டுட்டான்...''

''விடு நளினா.... நீ முழுசா வந்தியே....''

''நலா போட்ட பதக்கத்தைப் பறிகொடுத்துட்டேன் நந்து.''

''அவர் பிறந்தநாளன்று உனக்குப் போட்டதையா?''

கண்ணீரால் நனைந்த முகத்தை ஆட்டினாள்.

''அது அந்த அறைக்குள்ளத்தான் விழுந்திருக்குமா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.

''இரு அவர்ட்ட சொல்வோம்''

''யார்ட்ட?''

''பிரசாத்திடம்'' என்றவள், தன் செல்போனில் பேச, பாதி கட்டியிருந்த புடவையை திருத்தமாய் கட்டி முடித்தாள் நளினா.

''இரு சாம்பிராணி எடுத்து வர்ரேன்... சரி கட்டிக்காம. முகத்துக்கு பவுடர் போடு.... அம்மாக்கு ஏதும் தெரிய வேண்டாம்'' என்றபடி மிடுக்காக நடந்து போன மூத்தவளை ஆச்சரியமாய் பார்த்தாள். இது.... என்ற வியப்பில் இவள் மனம் சற்று அமைதிபட்டது. தான் முன்பு அணிந்த மெல்லிய சங்கிலியை கழுத்தில் சுற்றிக் கொண்டாள் - ஆனால் இவளது அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு வந்தது அம்மா அல்ல.....

நலவேந்தன்!

இதுவரை அந்தப் பொலிவான முகத்தில் அத்தனை ஆத்திரத்தை, வெறுப்பை நளினா பார்த்ததில்லை... ஆக ஒடுங்கி நின்றாள்!

# 14

தவறே செய்யாத மனிதர் உண்டா என்ன?

செய்தது தவறு என்று உணர்ந்த பின்பு அதை ஒத்துக் கொள்வது அழகு. ஒப்புக் கொள்வதாவது என்ற அகங்காரந்தான் பிரச்சனை.

ஒருவரை ஒருவர் பார்த்து நின்ற நளினா, நல வேந்தனுக்கும் உள்ளே அந்த அகங்காரக் கொந்தளிப்பு.

'இவர் அந்த பத்மினியோடு சல்லாபமாய் கிளம்பாவிட்டால் நான் ஏன் படபிடிப்பைக் காண போகப் போகிறேன்?

பரத்துடனான அறிமுகமே இவரால் நேர்ந்ததுதானே?' என்ற குமுறல் இவளுக்குள் என்றால், 'வந்த இடத்தில் ஒரு இடமாய் உட்காராமல் சுற்றுவானேன் - சொல்லாமல் கிளம்பி தன்னை பதற வைப்பானேன்' என்ற காந்தல் அவனுக்கு.

நளினாவை படப்பிடிப்பு நடந்த இடத்தில் காணாமல் தேடி, அவள் தன் காரில் அவசரமாய் போனதில் பதறி, இங்கு ஓடி வந்திருந்தவனை முதலில் பார்த்தது நந்தனாதான். 'அம்மா காதுக்குப் போக வேண்டாமே?' என்றவள் கெஞ்சியதால் நளினாவின் அறைக்குள் நுழைந்திருந்தான் -

''எது?''

''ம்ப்ச்... பரத் உங்கிட்டே தப்பா நடந்தது?''

''ஆமா...''

''அவனோடு ஏன் தனியாய் போனே?''

உங்களைத் தேடித்தான் வந்தேன்''

''நான் பைனான்ஷியரிடம் பேசப் போனேன்?''

''பத்மினியுடனா?''

அவளது எகத்தாளத்தில் சலித்தான்.

''ஓஹோ... வேவு பார்க்க கிளம்பினியா? ஆக விபரீதம் உனக்கு நேர்ந்துட்டது''



''விபரீதமல்ல... கட்டிப் பிடிச்சு முத்தமிட்டவனை அடிச்சுட்டு....'' நலாவின் முகம் போன போக்கில் வாய் மூடினாள். வேறேதும் பேசாமல் வெளியேறிவனை பார்த்தபடி நின்றவளின் உடல் நடுங்கியது.

இதற்ககே இத்தனை ஆவேசம் என்றால்.... அவளது குடும்ப நகையை தனக்கு பெருமையாய் அவன் தந்த, முதல் விலையுயர்ந்த பரிசைத்தான் தொலைத்துவிட்டு வந்திருப்பதை அறிந்தால்... என்ன ஆகும்? அச்சத்தில் காய்ச்சல் வரும் போலிருக்க, சுருண்டு படுத்தாள். சற்றுக்கெல்லாம் வந்து பார்த்த அம்மா,

''தலைவலியாமே நளினா? உடம்பு கூட சுடறாப்பல இருக்கே? கண்ணு பட்டிருக்கும் அதுதான். யோகத்தைச் சுற்றிப் போடச் சொல்றேன்'' என, இவள் அறைக்குள்ளேயே முடங்கினாள் - அன்று தன்னைப் பார்க்க பழைய சிநேகிதி சாவித்ரி வந்திருந்ததை, விவரித்து அம்மா மகிழ, திருப்தியாய் பேசி, உண்ட களைப்பில்தான் அம்மா உறங்கி, வீட்டின் களேபரங்களை அறியவில்லை என்ற நிம்மதியுடன்.

இரவு தனக்கான உணவுடன் வந்த அக்காளைப் பார்த்து தலையசைத்தாள் நளினா -

''எனக்குப் பசியில்லை....''

தங்கையின் பிடரியில் விரல்களை நுழைத்துக் கோதிய நந்தனா வயிற்றில் மாத்திரை போட முடியாதுல்ல....?'' என இளையவள் விருப்பமின்றி உணவைப் பார்வையிட்டாள் - ''மிளகு ரசத்தில் கைப்பிடி சாதத்தைக் கரைச்சிருக்கேன் - குடிச்சிடு கூட சுட்ட அப்பளம். நல்லா தூங்கினால்தானே காலைல தெம்பா எழுந்திருக்கலாம்?''

''அப்ப குடிச்ச பாலே அடைச்சிட்டிருக்கு....''

''அப்படீன்னா இதைப் பாரு... அடைப்பு சரியாயிடும்....''

வாழை இலையிட்டு மூடிய தட்டை எடுத்துத் தங்கையிடம் நீட்டினாள் நந்தனா.

'எதைப் பார்ப்பது?' என்பது போன்ற புருவ சுருக்கலுடன், இலையை விலக்கிய நளினாவின் விழி விரிய, முகம் மலர்ந்தது! கண்களில் நீர் கோர்க்க குமுறினாள்.

''நந்து.... இது... எப்படி?''

''சந்தோஷத்துலேயும் கண் கலங்கிடுதுல்ல...?''

''தாங்க்ஸ் நந்து.... எப்படி நம்ப முடியலியே''

அக்காவைக் கட்டி இறுக்கினாள் இளையவள்.

''ஹையோ.... நிம்மதியாயிருக்கு நந்து.... கலங்கிட்டேன். எந்த மந்திரத்துல இந்த மாலையை வரவழைச்சே?''

''பிரசாத் மந்திரம்!'' வெட்கமும் பெருமிதமுமாய் சிரித்தாள் நந்தனா.

''விவரம் கேட்டதும் அவர் பிரண்ட் பைக்கை எடுத்துட்டு போய் தேடி எடுத்துட்டு வந்தார். அந்த பயலை அவன் பேரென்ன பரத்தா? அவனைக் காணலையாம்?

''அத்தான்ட்ட போனிலாவது பேசி, நன்றி சொல்லணுமே'' பேசி முடித்த நளினா, அக்காவின் திருப்திக்காய் சாப்பிட்டாள். மாத்திரையோடு ஒரு குவளை வெந்நீரும் குடித்த பின் உடம்பு சற்று இலகுவானது.

''சரி படு''

''இரேன் நந்து மனசு நிம்மதியானது பேசணும் போலிருக்குது. நகையைத் தொலைத்த விஷயத்தை நலாவிடம் சொல்லியிருக்கவே முடியாது நான்..... தாங்க்ஸ்.... இது பெரிய உதவி''

குழப்பத்துடன் நளினாவைப் பார்த்தாள் மூத்தவள் -

''அதைத்தான் நான் சொல்லிட்டேனே.....''

''எதை, யார்ட்ட சொன்னே நந்து?''

''பதக்கத்தை கணோம்ன்றதை உன் நலாவிடம் சொன்னேன்''

''ஐயையோ....''

''உங்களைப் பார்க்கணும்னு நளினா சொல்ல, அந்த பரத் அவளைத் தனியே கூட்டிட்டு போய் தகராறு... தப்பு செய்ய முயல, அதில் நகை நழுவிடுச்சி. தப்பி வந்தவளுக்கு இந்த அதிர்ச்சியும் சேர, படுத்திட்டான்னேன்....''

''நலா என்னிடம் நகை பற்றி ஏதும் கேட்கலியே....''

''அசட்டுப் பெண் நீ. அவருக்கு ஒரு பயல் உன்னைத்



தொட்டாங்கறது பதறுமா.... நகை காணாததை பெரிசு படுத்துவாரா?''

''ஓஹோ''

கனவு கண்டு விழித்த சிறுமியைப் போலிருந்தது நளினாவின் முகம்.

''ஆனா ஒரு விஷயம் உங்கிட்ட சொல்லணும் நளினா. உன் நலா நகை விஷயத்தை - அது குடும்பத்திற்கு ஆகி வந்தது என்றாலும் பெரிது பண்ணமாட்டார்னு எனக்குத் தோணியது. ஆனால் பிரசாத்துக் கூட, போனில் நான் விவரத்தைச் சொன்னதும் - பொருளைப் பெரிது படுத்தாமல்,

'நளினா பத்திரமாய் வந்து சேர்ந்தாச்சுல? பிறகென்ன பதர்றே?' என்று என்னைச் சமாதானப்படுத்தினார். பிறகு இந்த பதக்கத்தைப் பற்றி நான் விவரம் சொல்ல, போய் தேடி கொண்டு வந்துட்டார். அவரது அந்த நோக்கம், பேச்சு எம்மனசுக்கு நிறைவாயிருந்தது, நளினா''

''ஸாரி நந்து.... அத்தானை ஆரம்பத்தில் நான் கொஞ்சம் மட்டமாய் பேசினது தப்பு என்பதில் எனக்கு சந்தோஷந்தான். கனவுக் கவிதையாய் இருந்தாலும் கரிசனையான நல்ல மனசு''

''ம்ம்.... என்ன நகை? அது எவ்வளவு பெறும்?'ங்கறது போல அந்நேரம் கேட்டிருந்தால் பயந்திருப்பேன். தன் பெண்ணை நல்லபடி கட்டித் தரும் துடிப்பில்தான் அவங்கம்மாவும் கூட நம்மிடம் காசு எதிர்பார்த்திருப்பாங்க....''

''தவிர, நம் நிலைமை அவங்களுக்கு முழுசாய் தெரியாதே? பெரிய இடம், நமக்குத் தந்தால் என்னன்னு ஒரு எதிர்பார்ப்பு.

இத்தனை சஞ்சலம் மனதில் இருந்தாலும் பிரசாத்தை விடாப்பிடியாய் நின்று வரித்த தன் தமக்கையை வியப்புடன் பார்த்த தங்கை, அவள் கைகளைப் பற்றினாள் -

''உன் வாழ்வு மகிழ்வாய் இருக்கும் நந்து. என் மனசார வாழ்த்தரேன்!''

## 15

இரண்டு நாளில் உடம்போடு மனதும் தேறி நளினா கோயிலுக்கு போய் வரலாம் என, சகோதரிகள் இருவரும் மட்டும் கிளம்பினார்கள்.

சீடையும் அதிரசமும் வீட்டில் தயாராகிக் கொண்டிருந்ததால் வித்யாவதி கிளம்பவில்லை. ஆட்டோவில் கோயிலுக்குப் போய் சேர்ந்தபோது, அங்கு பிரசாத்தும் வழிபாட்டிலிருந்ததைப் பார்த்த நளினா ஆச்சரியமாய் நந்தனாவைப் பார்த்தாள்.

''நாம போறதாய் சொன்னதும், அவங்களும் வர்ரதாய் சொன்னாங்க.... அவங்க பிரசாத்தின் அம்மா''

வழிபாடு முடிந்து வெளியே மரநிழலுக்கு நடந்த நேரம் அந்த தளர்ந்த பெண்ணைப் பார்த்தாள் நளினா.

ஆர்வமும் ஆசையுமாய் நந்தனாவில் நிலைத்திருந்தது முதியவளின் பார்வை - கைகுவித்து இரு பெண்களும் தன்னை வணங்க, பதிலுக்குக் கூச்சத்துடன் கை குவித்தவர்,

'நல்லாயிருக்கியாம்மா'' என்று இளையவளை விசாரித்துவிட்டு மூத்தவள் தன் மருமகளாகப் போகிறவளின் கன்னங்களைத் தடவி, முத்தமிட்டாள்.

''உன்னை எட்ட இருந்து பார்த்திருக்கேம்மா... இப்படி கிடத்திலிருந்து பார்க்க.... ரதிதேவியாட்டம் இருக்கே... எம்பிள்ளை ரொம்ப அதிர்ஷ்டக்காரன்... என் தேவதை தேவதைம்பான்....''

மேலே பேசத் தோன்றாமல் புன்னகைத்தாள்.

"பெண் எத்தனை ரம்மியமாய் இருந்தாலும், ரசிக்கத் தெரிந்த, அதை ரசனையாய் வாய்விட்டுச் சொல்ற துணை, புகுந்த வீடு கிடைப்பதும் அரிதுதான். அநத விஷயத்தில் அக்காவும் அதிர்ஷ்டசாலிதான்''

நளினா சொல்ல,

''ஆஹா.... உன் பேச்சு நீ முழுக்க மனம் தேறிட்டேங்கறதைச் சொல்லுதே - நன்றி இளைய தேவி'' என்று பிரசாத் தலை குனிய, அவர்களுக்குள் சம்பாஷணை இலகுவாய் உருண்டது.

கடவுளின் பிரசன்னமும் மாலைக் காற்றும் கலந்த அச்சூழலில் மனம் விட்டுப் பேசியது அவர்கள் அனைவருக்குமே ஒரு அருமையான அனுபவமானது. ஆனால் நளினிக்குள் குறை ஒன்று உறுத்தியது. நலவேந்தன் அங்கில்லாதது.

"என்ன அவர் ஞாபகமா?'' பிரசாத் கண்டு பிடித்து கேட்க, நந்தனா



தங்கையை சமாதானப்படுத்தினாள் -

''இனி இது போல பல சந்தர்ப்பங்கள் வரும் நளினா'' என்று.

''ஆனா, நீங்க மட்டும் இந்த நகையை மீட்டுத் தந்திருக்காட்டா..... நான் இங்கே இத்தனை நிம்மதியாய் நின்றிருக்க முடியாது அத்தான்... எத்தனை நன்றி சொன்னாலும் தீராது....''

''இது என்னாலான சின்ன கைம்மாறம்மா. நந்துவை முதலில் நான் பார்த்து பிரமித்தது நிஜம்.... இவளைக் கல்யாணம் செய்யும் பாக்கியம் கிடைத்தால் அதுதான் சொர்க்கம்னு ஏங்கினதும் உண்டு. ஆனால் நந்து என்னை விரும்பியது ஆச்சர்யம். அதற்கு மேல் உன் உதவியும் சேர்ந்ததால் எங்க பிரியம் கல்யாணம் வரை வந்தது....''

பிரசாத்தை தொடர்ந்து அவனது தாய் பேசினார் -

''உன் அக்காவிற்கான மாப்பிள்ளையை துணிவாய் போய் சந்திச்சு பேசினது.... நந்தனாவிற்கு பதிலாய் அவரை கட்டிக்க சம்மதிச்சது.... அது போக நான் கேட்ட வரதட்சணையையும் அவர் மூலம் தர செய்ததில்.... நாங்க நெகிழ்ந்துட்டோம்மா நளினா....''

இளையவளின் தலையை ஆசிர்வதிப்பது போல தொட்டு, தடவினாள் பெரியவள்.

''அழகு, அந்தஸ்து போலவே அன்பும் கொட்டிக் குவிஞ்சிருக்கும் உங்க குடும்பத்தில் பெண் எடுப்பது பெரும் பேறுங்கறது புரிஞ்சுது. உங்க தகுதிக்கு எங்களை உயர்த்த முயலணுமேத் தவிர, உங்களிடமிருந்து பணம் பறிப்பது எங்களுக்கு மேலும் இழிவுங்கறது உணர்ந்தோம்....''

''உங்க பெண் கல்யாணத்திற்கான தேவை அதுன்னு புரிஞ்சுதும்மா....''

''நாங்க நியாயமும் பாசமுமான குடும்பமாய் இருந்தால், அதைப் பார்த்து, அதற்காய் ஒரு வரன் எம்மகனைக் கேட்டு வருவான்ரது எங்களுக்கும் புரிஞ்சதும்மா....''

மாமியாரின் பேச்சில் பூரித்து பளபளத்த அக்காவின் முகத்தைப் பார்த்த நளினாவின் மனம் குளிர்ந்தது. தகுந்த இடத்திற்கே அக்கா வாக்கப்பட்டு போகிறாள் எனும் நிம்மதியுடன் மறுபடி கடவுளை வணங்கினாள்.

''புதுசா ஒரு நல்ல ஐஸ்-க்ரீம் பார்லர் திறந்திருக்காங்க போலாமா?'' என்ற பிரசாத்துடன் போய் இனிப்பும் சாப்பிட்டு, பேச்சும் சிரிப்புமாய் வீடு திரும்பிய சகோதரிகள் வாசலில் நலவேந்தனின் கார் நிற்பதைப் பார்த்து சற்று அமைதியானார்கள்.

வெறித்த பார்வையுடன் அவன் வீட்டில் உட்கார்ந்திருந்த தோரணையில் அவர்கள் முகம் மின்வெட்டு கண்ட இரவு வீதி போல இருண்டது!

''வாங்க... கோயிலுக்குப் போயிருந்தோம்....''

''ரொம்ப நேரமாச்சா...''

''இத்தனை நேரமாச்சே? நானும் தம்பிட்ட சொன்னேன். நளினா செல்லுக்கு கூப்பிடுங்கன்னு. 'அவங்க வரும்போது வரட்டும்'னு உட்கார்ந்துட்டார்''

விளக்கினாள் வித்யாவதி.

நலவேந்தன் எழுந்து நின்றான்.

''வா நளினா - வெளியே போயிட்டு வரலாம்...''

''உடம்புக்கு முடியாமல் இருந்த பொண்ணு... மறுபடி ஏன் வெளியே? இங்கே பூரி கிழங்கு ரெடியாயிருக்கு....'' என்ற தாயை ஜாடை காட்டி அடக்கினாள் நந்தனா.

''ரெண்டு நிமிஷத்துல வந்துடறேன்'' என்ற நளினா, தன் அறைக்குள் போக, ஹாலில், அசௌகர்யமான ஒரு அமைதி.

''காபி குடிக்கறீங்களா??''

''அம்மா தந்தாங்க....'' என்றவன், நந்தனா எடுத்து வந்த தண்ணீரை மறுக்காமல் குடித்து முடித்தான்.

ஏதோ யோசனையில் தீரவிமாயிருந்தது அவனது முகம்.

சொன்னபடி விரைவாக நளினா வர, கிளம்பினார்கள். காரிலும் இறுகிய மௌனம் அவர்களுக்கு இடையே உட்கார்ந்திருந்தது. அதை விலக்க, செருமியவள் பேச்சை ஆரம்பித்தாள் - ''ரெண்டு நாளாய் உங்களை பார்க்கலை... பேசவுமில்லை....''

''ம்.... உனக்கு பசிக்கிறதா?''



ஐஸ்கிரீம் சாப்பிட்டதை சொல்லவா வேண்டாமா என்று யோசித்தவள், ''பசியில்லை'' என்பதோடு நிறுத்தினாள்.

பிரதான சாலையிலிருந்து பிரிந்த கிளைச்சாலையில் வாகனத்தைத் திருப்பி செலுத்தியவன் அடர்ந்த மஞ்சள் பூக்களோடு தழைத்திருந்த மரத்தின் கீழே நிறுத்தினான். கார் கண்ணாடிகளை இறக்க, உற்சாகமாய் காற்று நுழைந்தது அவர்களில் மோதி சீண்டியது.

முழுக்க இருட்டாத அந்தி நேரம்.

ஆழ மூச்செடுத்தவன் கேட்டான் - ''நீ சொன்னது நிஜந்தானே?''

''எது?''

இதுவரை நலவேந்தனின் முகத்தை இத்தனை இறுக்கமாய் பார்த்திராத தடுமாற்றம் அவளுக்கு.

''வைகை அணையில் படபிடிப்பு சமயம் நடந்ததாய் நீ சொன்னது''

சற்று கோபமாகவே பதிலளித்தாள் -

''அதிலெல்லாமா பொய் சொல்றது? பரத் என்னிடம்.... தப்பாய் நடந்தான். ஆனால் நானும் அவ்வளவு அஜாக்ரதையாய் இருந்திருக்கக் கூடாது. வீட்டுக்கு வந்த பிறகுதான் இந்த பதக்க சங்கிலியைக் காணோம்ன்றது உறைச்சது. நீங்க கோபப்படுவீங்கன்னு...''

அதுவரை நேரே பார்த்திருந்தவன் இவள் புறமாய் திரும்பினான்.

''பிரசாத் அத்தான் இதை எடுத்து வந்ததால் நிம்மதியாச்சு''

குழந்தை போல திருப்திபட்டவளை ஆராய்ந்தது அவன் பார்வை. ''நான் கேட்டது உன்னை பரத் முத்தமிட்டதைப் பற்றி... எங்கே.... எப்படி...?'' என்றவன் மறுபடி முகத்தை வேறுபக்கம் திரும்பினான்.

அவன் விரல்கள் ஸ்டிரியங்கை நொறுக்குவது போல் அழுத்தின.

''நன்றிகெட்ட பயல்... என் பொண்டாட்டியை முத்தமிட்டிருக்கான்.... னா.... எனன தைரியம்... ச்சே''

''நான் நகையைப் பற்றிதான் பதறினேன்...''

''என் பதட்டமெல்லாம் அவன் உன்னைத் தொட்டதில்தான். இத்தனை நாளில் நான் கூட உன்னை... உன்னைப் பார்க்கையில் பவித்ரமான உன்னை அப்படி பார்க்க நினைச்சேன்.... தாலி கட்டின

பிறகு உன்னைத்தொடு, ஸ்பரிசமும் பவித்ரம்தானே? உரிமையில் நான் அப்படி தொடக் கூசிய உன்னில் பன்றி போல தன் முதுகைத் தேய்ச்சிட்டு பரத் போனாங்கறதில் கொதிச்சுட்டேன்''

அவனது ஆத்திரத்தின் காரணம் அவளுள் தித்திப்பாய் பரவியது! கூடவே ஒரு புது திகிலும் -

''நீ இனி அவனை பார்க்க நேராது நளினா.... அந்த ஏற்பாட்டு மும்முரத்தில்தான் ரெண்டு நாளாய் உன்னிடம் பேசலை....''

''பரத்தை என்ன செய்தீங்க?''

''நான் என்ன செய்தால் நீ அவன்.... ஞாபகத்தை.... அந்த சம்பவத்தை மறப்பே நளினா?''

''ம்....?'' புரியாமல் ஏறிட்டவளை அவனது கரம் இழுத்து அணைத்தது.

முதல் நாள் அவனை சந்தித்து பேசியதும் இப்படி இதே காரில்தான். அன்றிலிருந்து மனம் ஓரமாய் அந்த ஆசையின் குறுகுறுப்பு.... இவளும் அறியாமலேயே!

நலாவின் கைகள் தன்னை சுற்றினால்....? இறுகி அணைத்தால்...? நெருக்கத்தின் மோகம் தாளாது முத்தமிட்டால்...? என்றெல்லாம் வெட்கம் கெட்டு பெருகிய ஆசைகள்..... அரங்கேற ஆரம்பித்தன!

தன் வெப்ப அணைப்பில் அடங்கியவளை மிருதுவாய் முத்தமிட்டான்.

நெற்றியில் அவன் உதடுகள் பதிய இவள் கண்கள் மூடின. ஆனால் முகம் திரும்பிக் கொள்ளவில்லை. சில நாட்களுக்கு முன்பு வந்த ஸ்பரிசம் தீபட்டது போல எரிந்தது எனில் இந்தத் தகிப்பு முழுக்க இனித்தது!

அவன் முத்தங்களை மேலும் தொடர வசதியாய் முகத்தை சற்று உயர்த்த, அவளது சம்மத அசைவில் அவனது வேகம் கூடியது! சந்திரனை ஏறிடும் அல்லி போல அசைந்த முகத்தை வருடி, மூடிய விழிகளில் மெல்ல முத்தமிட்டான்.

இருவரது சுவாசமும் வேகமெடுத்திருந்தது.

கன்னங்களில் மூத்த கதை தொடர, அவர்களது தழுவல்கள்



இறுகின.

இதழ்கள் பொருந்திய நேரம் இருவருக்கும் உலகம் மறந்தே போனது!

## 16

''இப்போ அவனுடைய ஸ்பரிசம் உனக்கு மறந்திருக்கும் இல்லியா?'' கேட்ட நலவேந்தனை கோபத்துடன் பார்த்தாள் அவள் - செல்லக் கோபந்தான்!

''அதற்குத்தான்... இதெல்லாமுமா?''

''எதெல்லாம்?'' சீண்டியவன் கைகள் அவள் தோள்களை வருடி, கைகளை நீவின. மாலை ஒன்றை தனக்குத் தானே சூடிக் கொள்வது போல அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டான்.

''ஆக, 'இது' உங்களிடமிருந்து தேவைப்பட்டால், என்னை வேறு யாரேனும் இழுத்துப் போய் முத்திடணும் போல...?''

வாய்விட்டு சிரித்தான்.

''நீ ரொம்ப போக்கிரிப் பொண்ணு....''

''பின்னே? கல்யாணம் நிச்சயமான இவ்வளவு நாளில் நீங்க இப்படி இதுவரை.... நடந்திட்டதே இல்லையே?''

''என்னைவிட பத்து வயதிற்கு இளையவள்.... நீ பயந்திடுவேன்னு நினைச்சேன்.... இவ்வளவு வேகமிருக்கும்னு தெரியலை....''

''சரி. ரெண்டு நாளாய் என்னதான் செய்தீங்க? பரத்தை இனி நீ பார்க்க மாட்டேன்னு வேற வசனம் பேசனீங்க....''

''அவன் பேச்சு இனி எதுக்கு? உனக்கு களைப்பா இருக்கா நளினா?''

''அதற்குதான் நிறைய டானிக் தந்துட்டீங்களே?''

வெட்கத்துடன் சிரித்தவளின் முகம் நிமிர்த்தி மறுபடி முத்தமிட்டான்.

''மொத்த கதையும் சொல்றேன் நளினா...''

''பரத் என்னவானாங்கறது முதல்ல....''

''என் நல்ல பெயரை பணயம் வைத்துதான் நான் அந்தக் குடும்பத்திற்கு உதவினேன். அந்த நன்றியில்லாமல்... உன் மேலயே கை வச்சுட்டானே...''

''ஆக அந்தக் கையை முறிச்சிட்டீங்களா?'' உற்சகமாய் கேட்டாள்.

மறுபடி வாய்விட்டு சிரித்தான்.

''உன்னிடம் அன்றே... அதாவது அந்த சம்பவத்தன்றே இப்படி உட்கார்ந்து பேசியிருந்தால் என் கோபம் சற்று வடிந்திருக்கும் நளினா...''

''ஆனா அப்போ நான் நகை தொலைந்த கவலையில் இருந்தேன்....''

''ம்ம்... பண்ணை வீட்டை லலிதாக்கு.... அதாவது பத்மினியின் அக்காவிற்குத் தந்திருந்தேன். அதற்கு பதிலாய் டவுனில் எனக்கிருந்த ஒரு பங்களாவை இப்போ அந்த குடும்பத்தின் பெயருக்கு மாற்றிட்டேன். நம் தோப்பு, பண்ணை வீட்டு பக்கமே இனி அந்தக் குடும்பம் வரக் கூடாது. என்னோடு அவர்களுக்கு எந்த சம்பந்தமும் கிடையாதுன்னு வக்கீலை வைத்து தீர்மானமாய் எழுத வைத்தேன்...''

''ஏன் அந்த குடும்பம் மொத்தமும் அத்தனை உரிமையாய்.... உங்க வீட்டில்?''

''என்னிடம் அவங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது நளினா. எங்களிடையே எந்த தப்பான உறவும் கிடையாது. இவள் முகம் மலர்ந்த விதத்தைப் பார்த்தவன் -

''இத்தனை நாள் தப்பாய்தான் என்னைப் பற்றி நினைச்சியா நளினா?''

தன் பெயர் சுருக்கத்தை ரசித்தவளுக்கு அவனது தகவல் தித்தித்தது. வாழ்நாள் முழுக்கத் தீராத இனிப்பல்லவா அது?



''முழு கதையும் சொல்லிடறேன். அம்மா இறந்ததும் அப்பாவின் போக்கு சரியில்லை. தான் இனி 'அப்படி இப்படி' இருந்தால் தப்பில்லைன்ற முடிவுக்கு வந்துட்டவர் பல பெண்களோடு தொடர்பு வச்சிருந்தார் போல.... ஆனால் லலிதாங்கியைப் பார்த்தவர் சரணாகதி ஆயிட்டார்.... அவங்கதான்...''

பத்மினியின் அக்கா - சொன்னீங்க....''

''ரொம்ப அழகானவங்க... பதவிசும் பிரியமுமான குணமுந்தான். ஆனால் பிறந்த குலமும், பேராசைக்கார தாயும் அவங்களுக்கு சத்ரு.''

''இந்த காலத்திலேயும்.... அப்படியான நிர்பந்தங்கள் இருக்கா என்ன?''

''எல்லா காலத்திலேயும் நல்லதும் கெட்டதும் உண்டு நளினா. சுலபமாய் பெரும்பணம் பார்க்க லலிதா பயன்பட ஆரம்பித்த சமயம்தான் அப்பாவின் அறிமுகம் அமைந்ததாம். இனி என்னோட நிரந்தரமா இருந்திடுன்னு அப்பா சொல்ல, லலிதா நிம்மதியாய் அவங்க அம்மாவை எதிர்த்துட்டு அப்பாவோடு கிளம்பிட்டாங்க.''

''ஓ.... கல்யாணம் ஏதும்?''

''ஊரறிய அப்படி செய்திருந்தால் கௌரவமாய் இருந்திருக்கும். ஆனா அப்பா அவங்களை யாருமறியாமல் பண்ணை வீட்டில் வச்சிருந்தார்... ஆக அந்த உறவு கொச்சையாயிடுச்சு. படிப்பு முடிந்த வருஷம் நான் இந்த விவரம் அறியாமல் அங்கே போக.... எனக்கு அங்கே லலிதாம்மாவைப் பார்த்து அதிர்ச்சியாயிடுச்சு''

அதிக ஏற்றம் இறக்கமில்லாத குரலில் அவன் பேசினாலும் அவனது மனக்குமுறல் நளினாவிற்குப் புரிந்தது.

அவன் கையைப் பற்றி தட்டிக் கொடுத்தாள்.

ஆறுதல் சொன்ன கரத்தை முத்தமிட்டவன், அதில் பலம் பெற்றது போல கதையைத் தொடர்ந்தான்.

மிக அருகிலிருந்து அவனைக் கேட்டிருந்தவளுக்கு நலவேந்தனின் மனதில் தான் முழுமையாய் நிரம்பியிருப்பது புரிந்தது.

''ஆமா... ஆனா அப்பாவிடம் எதையும் உடைச்சுபேச முடியலை.

அவர் புற்றுநோயின் இரண்டாம் கட்டத்தில் இருக்க, அவரைக் கண்டிக்க மனமில்லை. தவிர லலிதா நல்லவங்களாய் தெரிஞ் சாங்க. அவரை அனுசரணையுடன் கவனித்துக் கொள்ளட்டும் என்று கண்டுக்காமல் விட்டுட்டேன். ஆனால் மருந்துகளின் தயவில் சற்று உடம்பு தேறின. அப்பாவின் புத்தி வக்கிரமாயிடுச்சு....''

பெருமூச்சுடன் அமைதியானவனை சொல்லுங்க என்பது போல பார்த்தாள் நளினா.

''தாயிடமிருந்து தப்பிய லலிதாவின் தங்கை பத்மினியும் பண்ணை வீட்டில் அடைக்கலாமாக, அப்பாவின் கண் தங்கையை மேய்ந்திருக்குது! தன் நிலையை லலிதாம்மாவின் அன்பை மறந்து, பத்மினியையும் அடைய ஆசைபட்டிருக்கார்''

''ஐயோ...''

''ரொம்ப கேவலமான எண்ணம். அது செயலாய் மாறுவதற்குள் நான் அதிரடியாய் செயல்பட்டேன். சிற்றின்பம் என்ற அந்த சிறுமைக்குள் நான் புக முடிவெடுத்தது போல ஒரு நாடகம்....''

''அப்பாட்ட எடுத்து சொல்லியிருக்கலாமே?''

''குடி தனக்கு கேடு என்பது குடிகாரனுக்குத் தெரியும் - பிறர் சொல்லணும்னு அவசியமேயில்லை. தன்னை கட்டுப்படுத்த முடியாததுதானே அவன் பிரச்சினை? பலரின் கைமாறாமலிருந்தால் போதும் என்று லலிதா அப்பாவிடம் அடைக்கலமாகி இருந்தாங்க. ஆனா பத்மினி வித்தியாசமான பெண். லலிதாவிடம் தன் கெட்ட நோக்கத்தை அப்பா கோடி காட்ட, அவங்க நொறுங்கிட்டாங்க. தங்கையிடம் ஓரளவு விவரம் சொல்லி வேறு எங்காவது போய் விடச் சொல்லியிருக்காங்க. ஆனா பத்மினி ஒத்துக்கலை -

''நாம ஓட, துரத்துபவர்களுக்கு தொக்காயிடும். அழகாயிருக்கிறது நம்ப தப்பா என்ன? இந்த அழகோடு எங்கே ஓடினாலும் எனக்குப் பிரச்சனைதான். குனிஞ்சு கல்லெடுத்தால்தான் நமக்குப் பாதுகாப்பு என்றவள் விவரங்களை என்னிடம் வந்து சொன்னாள். அந்தப் பெண்ணின் துணிவும் தெளிவும் எனக்குப் பிடிச்சிருந்தது''

ஏற்கனவே 'அந்த பெண்' தனக்கு ஒத்த வயது, ரசனை, குணம் உள்ளவள் என்று நலவேந்தன் சொன்னது நளினாவிற்கு



மறந்திருக்கவில்லை!

''ஆக பத்மினி என் பாதுகாப்பில் இருப்பதாய் காட்டினேன்'' முழுவதுமாய் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் நளினா கேட்டாள் - ''காட்டினேன்னா?''

''ஒரு நாடகந்தான் எல்லாம் - ஒரு மனவியலாளரிடம் போய் ஆலோசனை கேட்டேன் - 'திருமண பந்தத்தை மீறிய உறவு ரெண்டு வகை - ஒன்று 'பாஸிங் அஃபேர்' - அதாவது வெறும் இனக்கவர்ச்சி வந்த வேகத்தில் மாறி மறையக் கூடியது. மற்றது 'எமோஷனல் அட்டாச்மென்ட்' இதில் மனங்களும் நெருங்கி விடுவதால் பிரச்சனை அதிகம் 'ன்னார். அப்பாவிற்கு பத்மினியின் இளமை, அழகு மேலே ஒரு ஈர்ப்பு அதை உடைக்க, நானும் அவளும் சேர்ந்து வாழ்வதாய்.... நானே அப்பாவிடம் போய் சொன்னேன். பத்மினிக்கு வேறு வீடு பார்த்து குடி வைத்தேன். இதைக் கவனித்தவர்கள் சுறுசுறுப்பாய் அந்த சேதியைப் பரப்பினார்கள்! இந்த அதிர்ச்சி சூட்டில் அப்பா கை உதறி விலகிடுவார்னு நினைக்க, அவர் பதறிபடுத்துட்டார். சில வாரங்களில் இறந்துட்டார்...''

சில விநாடிகள் மௌனம் அவர்களை ஆறுதல் படுத்தியது.

''பத்மினி என் பாதுகாப்பில் இருப்பதாய் தோன்றியதால் அவளை யாரும் தொந்தரவு செய்யலை! நிம்மதியாய் தனக்குப் பிடித்த அழகு நிபுணருக்கான படிப்பை படிச்சா. நானும் நல்லவேளை பெண் வீட்டாரின் நச்சரிப்பு இல்லைன்ற நிம்மதியில் என் வேலையில் மூழ்கிப்போனேன். அவர்களை நெருங்கிய ஆண்களிடம் என்னை பற்றி கோடி காட்ட, பாதுகாப்பும் கிடைச்சது''

''ஆனா உங்களுக்குப் பாதிப்புதானே?''

''உன்னைப் பார்க்கும் வரை.... நீ வரும் வரை - நான் அதுபற்றி பெரியதாய் யோசிக்கலை நளினா...''

அவன் மெல்ல சொல்ல இவளுக்கு கண்ணில் நீர் ஊறியது. ''ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லாத சுதந்திரம் துப்பாக்கி முனையைத் திருப்பி தன்னையே சுட்டுக் கொள்வது போல' என்பது எனக்கும் புரியும்... ஆனால் நீ கேட்பது போல கேட்டு என் பெயரைப் பாதுகாக்க அப்போ யாருமில்லை. அத்தையம்மாளுக்கு ரொம்ப காலம் எதுவும் தெரியாது....''



## ஆகஸ்ட் மாதம் குக்கர் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

- எஸ்.விஜயலட்சுமி சாரங்கபாணி, இராமநாதபுரம்.
- எம்.ஜெசிமா பானு, செல்லையா தெரு, செங்கோட்டை
- புவனேஸ்வரி, சிவகாசி -626123
- ஆர்.குமுதா, சொர்ணாவூர் மேல்பாதி, விழுப்புரம்
- ஹரிகரன், மும்பை-23
- சந்தியா, சைதாப்பேட்டை, சென்னை-15.
- டி.வசந்தா, மெயின்ரோடு, திண்டுக்கல் - 624 001
- எஸ்.சையது முகமது, தசரதபுரம், சென்னை - 600 093.
- பிரியங்கா பத்மினி, கோடம்பாக்கம் ரோடு, சென்னை-33
- பவித்ரா நந்தகுமார், ஆரணி பாளையம், ஆரணி.

''இப்போதும் கூட அவங்களுக்கு முழு விவரம் தெரியாதுன்னு நினைக்கறேன்''

''இனி என் வாழ்வு என்னவாகும் என்ற கலக்கம் எனக்குள் வந்தது. எப்போ தெரியுமா? உன்னைப் பார்த்த... இல்லை நீ என்னை முறைத்த அந்த முகூர்த்த நாளில்தான்!''

இவளது விழிகளைத் தொட்ட அவன் விரல்கள் மூடிய அவன் கண்களின் நீளத்தை வளைவை அளவெடுப்பது போல நீவின.

''ம்... உங்களை ரொம்ப முறைச்சேன்ல?''

''அதுவரை பெண்களின் பார்வையை அலட்சியப் படுத்தியிருக்கிறேன்.... முறைப்பு ஆத்திரமூட்டியிருக்கலாம். ஆனால் உன் குழந்தைத்தனமான முறைப்பு என்னை ஆர்வப்படுத்தியது. 'ஓ'ன்னு பெய்த மழையைத் தொடரும் நிசப்தத்தை கவனித்து ரசிப்போமில்லையா? அது போல் அதுவரை அனுபவித்த பல பிரச்சினைகளை மீறி மேலே வந்திருந்த என்னைக் 'குறுகுறு'வென்று என்னை ஆராய்ந்த உன் பார்வையை அனுமதிச்சேன்... அனுபவிக்க ஆரம்பித்தேன்...''

''ஹையோ.... கவிதையால்ல பேசிறீங்க?'' உருகினாள்.

''ஆனா நீ உன் அக்காவிற்காய் என்னை மாப்பிள்ளை பார்க்க வந்திருக்கிறாய் என்றதும் ஒரு ஏமாற்றம். ஏதோ சொல்ல வந்திருக்கேன்னு யூகித்தேன்.''

''ஆனா நீங்க சொன்ன -

'என் வாழ்வில் ஏற்கனவே ஒரு பெண் உண்டு'ன்றதை நான் கொஞ்சமும் யூகிக்கவேயில்லை''

அதைக்கேட்ட வேறு ஒரு பெண் -

'நீங்க இப்படிப்பட்டவர்னு இப்பவானும் சொன்னீங்களே தப்பினோம்'ன்னு ஆவேசமாய் கைகூப்பிட்டு காரிலிருந்து இறங்கி ஓடியிருப்பாள்...''

தான் அப்படித்தான் செய்திருக்க வேண்டும் என மனதுள் மருகியது நினைவிற்கு வர வாய்க்குள் சிரித்து கொண்டாள்.

''ஆனா நீ என்னை ஒதுக்கலை நளினா. பொறுமையாய் பதறாமல் கேட்டுகிட்டே. கேள்விகளால் குடையலை. என்னை நம்பினது எனக்குப் பிடிச்சிருந்தது. உன் அழகும்தான்!''

''மட்டி மடத்தனமாய் நான் உட்கார்ந்திருந்ததை பொறுமைன்னு நினைச்சதற்கு நன்றி நலா! ஆனால் 'அந்த வேறு ஒரு பெண்' மேலே எனக்குப் பெருகின பொறாமை லேசில்லை, அப்பதான் எனக்குப் புரிஞ்சுது... நான் காதல் ராட்டினத்தில் ஏறிட்டேன்றது!''

''அங்கேயும் கவிதையா? பரத் உன்னிடம் தவறாய் நடந்தது தெரிந்ததும் என் உடம்பே கொதிக்க, அப்போதான் எனக்கும் பொறாமை பற்றி தெரிந்தது.... மூளையே மந்தமாயிடுச்சு.... இனி அந்த நிலையை உனக்கு நான் ஏற்படுத்த மாட்டேன் நளினா....''

''உங்க சாமர்த்தியத்தில் என் தலை சுழண்டிருச்சு....''

''அப்ப பதிலுக்கு என்னையும் சுழட்டி விட்டுடேன்'' என்றபடி அவன் நெருங்கியது புரிந்தாலும் புரியாதது போல் முணங்கினாள் -

''எப்படியாய்?''

''ம்ம்.... இப்படி....'' என்றவன் காட்டிய வித்தையில் அவர்கள் இருவரையும் ஏற்றிக் கொண்ட காதல் ராட்டினம் வேகமெடுத்தது....!

- முற்றும் -

# மங்காத்தா ஒரு ஸ்பெஷல்



க்ளவுட் நைன் மூவிஸ் சார்பில் வெங்கட்பிரபு இயக்கி வெளிவரும் படம் மங்காத்தா. எப்போதும் அஜீத் படத்தில் ஒன்மேன் ஷோவாகவே திரைக்கதை அமையும். (எம்.ஜி.ஆர் சிவாஜி காலத்திய ட்ரெண்ட். அதையெல்லாம் தூக்கி போடுங்கண்ணா) ஆனால் இந்தப்படத்தில் அஜீத் தற்போதைய சினிமாவின் நிலையை உணர்ந்து நடித்திருக்கிறார். அம் அர்ஜுன் பிரேம்ஜி, வைபவ், ஜெயப்பிரகாஷ், சோனா, புது அறிமுகங்கள் என பலர் அஜீத்திற்கு பக்கபலமாக நின்றிருக்கிறார்கள்.

மேலும் த்ரிஷா, ஆண்ட்ரியா, லட்சுமி ராய், அஞ்சலி என நடிகைகள் பட்டாளமும் படத்தில் உண்டு. இது அஜீத்திற்கு ஐம்பாதவது படம் என்பதால் நிறைய காம்ப்ரமைஸ்களோடு அவர் நடித்திருக்கிறார். ஐம்பதாவது படத்தை வெற்றிப்படமாக கொடுத்துவிட வேண்டும் என்ற வெறி. அது நன்றாகவே ஒர்கவுட் ஆகி இருக்கும் என நம்பலாம். வெங்கட்பிரபு பொதுவாகவே ஜாலியான பேர்வழி. அதுவும் இத்தனை நட்சத்திர பட்டாளங்கள் கிடைத்துவிட, படத்தில் பட்டைய கிளப்பி இருக்கிறார் மனுஷன். இந்தப்படம் கிரிக்கெட்டில் நடக்கும் சூதாட்டத்தைப்பற்றியது. சுமார் 500 கோடி பணத்தை கைப்பற்றுவதில் தொடங்கும் போராட்டமும் அதன் பின் விளைவுகளுமே கதை.... ஓஷன்ஸ் லெவன் படத்தில் இருந்தும் ஹிந்தி ஜென்னட் படத்தில் இருந்தும் இந்தக்கதை சுடப்பட்டிருக்கிறது என்ற தகவலும் படத்தைப்பற்றி வெகுவாக பேசப்பட்டு வருகிறது. ஆனால் மங்காத்தா டீம் இது ஜென்னட் படம் இல்லை என்பதை மட்டுமே மறுத்திருக்கிறார்கள். பார்க்கலாம் என்னதான் ஆகிறது என்று....

பாங்காக், மும்பை, சென்னை என பல இடுங்களில் ஷூட்டிங் எடுக்கப்பட்டிருக்கிறது. பாடி மவுண்ட் கேமரா எனப்படும் முப்பது கிலோ எடையுள்ள ஒரு கேமராவை பயன்படுத்தி க்ளோசப் போன்ற காட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சக்தி சரவணன் ஒளிப்பதிவில் படத்தின் ரிச்னெஸ் இன்னும் ஒருபடி மேலே ஏறியிருக்கிறது. யுவனின் இசை பெருவாரியான ரசிகர்களை கவர்ந்திருக்கிறது. முக்கியமான இளசுகளை குறிவைத்து தாக்கி இருக்கிறது. ''விளையாடு மங்காத்தா'' பாடல்தான் இப்போதைய ஹாட் கேக்.

அஜீத் படத்தில் ஸ்பெஷல் மேக்கப் எதுவுமின்றி, வெகு நேச்சுரலாகவே வருகிறார். அந்த லேசான நரைத்த வெள்ளை முடியும் அவருக்கு அட்டகாசமான லுக்கையே தருகிறது. அஜித் அடுத்த ஆட்டத்திற்கு தயாராகிவிட்டார். குறிப்பிடப்பட வேண்டிய ஒரு மிக முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. அஜீத் இந்தப்படத்தில் ஆண்ட்டி ஹீரோவாக நடித்திருக்கிறார். ''எவ்வளவு நாள்தான் நல்லவனாவே நடிக்கிறது?'' என்று அவரே இந்தப்படத்தில் பஞ்ச் அடித்திருக்கிறார். வாலி திரைப்படத்திற்கு பிறகு நெகட்டிவ் ரோல்.... இது போன்ற வித்தியாசமான கலர் கொண்ட கதாபாத்திரங்களைத்தான் ரசிகர்களும் எதிர்பார்க்கிறாங்க. அசல் (o.K) அட்டகாசம் (?) போன்ற மொக்கை க்ளிஷேக்களை அல்ல.

அஜீத் இதை நன்றாக உணர்ந்து கொண்டார் போலும்..... (சூடு பட்டாதான்யா சில பேருக்கு தெரியுது. நம்ம விஜய் சுறா வேட்டைக்காரனில் கற்றுக்கொண்ட பாடத்தைப்போல) இந்த பவர்ஃபுல் எண்டர்டெயினரை அஜீத் சரியாக பயன் படுத்திக்கொண்டு அடுத்த படங்களை தேர்ந்தெடுப்பாரே ஆனால் அவரை அடித்துக்கொள்ள ஆள் இருக்காது. எப்போதும் அஜீத் படங்களுக்கு பிரமாத மான ஓப்பனிங் இருக்கும். அது இந்தப்படத்திற்கும் இருக்கத்தான் செய்யும். டிரெய்லரும் பாடல்களும் பட்டையை கிளப்பிக்கொண்டிருக்கும் வேளையில் ஒரு சிக்கலும் வந்திருக்கிறது. க்ளவுட் நைன் மூவிஸின் முந்தைய படங்களான வ-குவாட்டர் கட்டிங்கும், அழகர்சாமியின் குதிரையும் சரியாக போகாத சூழ்நிலையில் விநியோகஸ்தர்கள் இந்தப்படத்திற்கு சில சிக்கல்களை முன் வைத்திருக்கிறார்கள். அதைக்கூட சமாளித்துவிடலாம். சென்ற முறை ஆட்சி செய்தவர்களின் படங்களுக்கு இப்போது என்ன சிக்கல் நேருகிறது. அனைவருக்குமே தெரியும். அதே சிக்கல்தான் இப்போது தயாநிதி அழகிரிக்கும் நேருகிறது. அதனால் இந்தப்படத்தை ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் வாங்கி வெளியிடுகிறது. இதையெல்லாம் மீறி படத்திற்கு இருக்கும் ஒரே பூஸ்ட் அஜீத்.... அஜீத்.... அஜீத்... வாங்க சார்.... வந்து சீக்கிரம் ஆட்டத்தை ஆரம்பியுங்கள்.... நாங்களும் ஒரு கை போடுகிறோம்.....



தொகுப்பு: மணிகண்டன்